விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சிங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 07 செவ்வாய்க்கிழமை (21.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 185

# இறுதிப் போரில் கொத்துக்குண்டு
## ஆதாரங்களை வெளியிட்டது த கார்டியன்



(லண்டன்)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது சர்வதேச போர் விதிமுறைகளை மீறும் வகையில் இலங்கை படைத்தரப்பினரால் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்ட மைக்கான ஆதாரங்களை பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் த கார்டியன் ஊடகம் வெளிப்படுத்தியுள்ளது. (15-ம் பக்.)

## மொஹமட் முஸம்மில் நேற்றுக் கைது!



(கொழும்பு)

அரசாங்கச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்

16 ஆம் பக்கம் பார்க்க....

## அர்ஜுனவுக்கு எதிராக மனுவொன்று தாக்கல்

(கொழும்பு)

அர்ஜுன மகேந்திரன் மத்திய வங்கி ஆளுநர் பதவியில் தொடர்ந்தும் செயற்படுவதை தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி, கபே அமைப்பினால், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேற்று பகல் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக,

16 ஆம் பக்கம் பார்க்க....

## முதலமைச்சர்களுடன் ஜனாதிபதி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் மாகாண முதலமைச்சர்களுக்கும் இடையில் இன்று கொழும்பில் நடைபெறவுள்ள சந்திப்பில் கலந்து கொள்வதற்காக வட மாகாண முதலமைச்சர சி.வி.விக்னேஸ்வரன் நேற்றைய தினம் கொழும்பு சென்றுள்ளார்.

இக்கலந்துரையாடலில் ஜனாதிபதியுடன் அனைத்து மாகாண

16 ஆம் பக்கம் பார்க்க....

## ஜூலை முதலாம் திகதியிலிருந்து பஸ் கட்டணங்கள் உயரும்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து பஸ் கட்டணங்கள் 3.2 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பஸ் கட்டண திருத்தம் தொடர்பாக போக்குவரத்து அமைச்சுடன் விசேட கலந்துரையாடலொன்று நேற்று இடம்பெற்றதாகவும் அதன் பின்னரே குறித்த கட்டண உயர்வு தீர்மானிக்கப்பட்டதாக கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

நேற்று போக்குவரத்து அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் பஸ் போக்குவரத்து

15 ஆம் பக்கம் பார்க்க....

## மாணவி மீது ஆசிரியர் துஷ்பிரயோகம்
## அதிபர், 3 ஆசிரியைகள் உட்பட ஐவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வரணி பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் மாணவி ஒருவரை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய ஆசிரியர், இதுதொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருந்த அதிபர் மற்றும் மூன்று ஆசிரியைகள் உட்பட ஐந்து பேரை எதிர்வரும் யூலை முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

15 ஆம் பக்கம் பார்க்க....

## வெடிபொருள் மீட்பு



16 ஆம் பக்கம் பார்க்க....

## உள்ளே சங்குநாதம்

## திருக்கேதீச்சரக் காணியில் அத்துமீறல் எதிர்ப்புத் தெரிவித்து நாளை ஆர்ப்பாட்டம்

(மன்னார்)

மன்னார் திருக்கேதீச்சரத்து சிவன் ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் சொரூபம் நிறுவுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை புதன்கிழமை அடையாள ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் அத்துமீறி சொரூபம் நிறுவும் முயற்சிக்கு இந்துக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன் ஆலய நிர்வாகம் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

நாளைய தினம் சொரூபம் நிறுவப்படவுள்ள இடத்தில் இந்துக்கள் கூடி தமது அகிம்சை வழி எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளனர். (ந)

## போர்க்குற்ற விசாரணையில் காலம் கடத்துவது ஆபத்தாகலாம்
### விரைந்த விசாரணைக்கு சரத் வலியுறுத்து

(கொழும்பு)

போர்க்குற்ற விசாரணையை இனிமேலும் தாமதிப்பது, இலங்கைக்கு மேலும் அழுத்தங்களைக் கொடுக்கும் என்று இராணுவத்தின முன்னாள் தளபதியும், அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

16 ஆம் பக்கம் பார்க்க....



## சர்வதேச உள்ளீடு அற்ற விசாரணை எமக்கு எந்த நன்மையும் தாராது
### ஐரோ.ஒன்றிய பிரதிநிதியிடம் முதலமைச்சர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

சர்வதேசஉள்ளீடுகள் இல்லாமல போர்க்குற்ற விசாரணை நடைபெறுவதால் எமக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை என ஐரோப்பி ஒன்றியத்தின், பிரதிநிதியிடம் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசி

15 ஆம் பக்கம் பார்க்க....



## கடற்றொழிலாளர்களின் விபரங்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடல் தொழிலாளர்களின் எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டு கடந்த கால யுத்தங்கள், அனர்த்தங்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் புள்ளி விபரங்களை சம்மேளனம் சேகரித்து வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள கடல் தொழிலாளர் சம்மேளனம் மீனவ சங்கங்கள் தங்களுடைய பாதிப்பு தொடர்பான புள்ளி விபரங்களை உடனடியாக சம்மேளனத்திற்கு அனுப்பி வைக்குமாறும், சம்மேளனத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையாக பதியப்படாமல் இருக்கின்ற படகுகளின் விபரத்தை யாழ். மாவட்ட கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பதியுமாறும் சம்மேளன செயலாளர் தெரிவித்து உள்ளார். (செ-7)

## இரு ஆட்டோக்கள் விபத்தில் சேதம்



(யாழ்ப்பாணம்)

முன் பின்னாகச் சென்ற இரு ஆட்டோக்கள் மோதுண்டதில் விபத்துக்குள்ளாகியுள்ளன.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் சிலைக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்ற போதிலும் இரண்டு ஆட்டோக்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. (செ-5)

## ஞானவைரவர் ஆலய நிர்வாக சபை தெரிவு

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு கேணியடி ஒழுங்கை ஞான வைரவர் தேவஸ்தான தர்மகர்த்தா சபையின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நல்லூர் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ர.நகுலா தலைமையில் இடம்பெற்றது.

இதன்படி புதிய நிர்வாக சபையின் தலைவராக பொ.தவராசலிங்கம், உப தலைவராக ரா.லிங்கேஸ்வரன், செயலாளராக சி.கனகரத்தினம், உப செயலாளராக திருமதி செல்வேந்திரன், பொருளாளராக சு.கருணாகரன், உறுப்பினர்களாக சி.தயாபரன், சு.ஞானேஸ்வரன், எஸ்.ராஜ்குமார், எஸ்.யுவராஜ், போசகர்களாக இ.சண்முகலிங்கம், சு.இராசலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (செ-11)

## நாடு முன்னோக்கி செல்கிறது-ரணில்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாடு தற்பொழுது முன்னோக்கி செல்வதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொத்மலை பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் சாதித்த விடயங்களை விட தற்போதைய ஜனாதிபதியின் தலைமையிலான ஆட்சியின் கீழ் நிறைய விடயங்களை சாதிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளமை நாட்டில் சாதகமான தன்மையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அடுத்த ஐந்தாண்டு காலப் பகுதியில் நாட்டில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைக்க கூடிய வகையில் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (செ-12)

## போதைப்பொருட்களை பாவித்த 20 இளைஞர்களுக்கு அபராதம்

(கொழும்பு)

கொழும்பு, காலி முகத்திடலில் பகிரங்கமாக கஞ்சா போதைப்பொருளை புகைப்பிடித்துக் கொண்டிருந்த 20 இளைஞர்கள் கொழும்பு பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை நேற்று கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, ஒவ்வொருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

குறித்த நபர்களில் 16 வயதுடைய சிறுவன் ஒருவனும் இருந்துள்ளதோடு குறித்த சிறுவனுக்கு 1500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திருகோணமலை-கந்தளாயில் பகுதியில் 250 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்த சந்தேக நபரை தண்டப்பணத்தினை செலுத்துமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் தம்மிக்க உத்தரவிட்டுள்ளார்.

இந்த நபர் கஞ்சாவுடன் வயலுக்குச் சென்ற போது கந்தளாய் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளார்.

குறித்த சந்தேக நபர் வான்எல பகுதியைச் சேர்ந்தவர் என்பதும் 39 வயதுடையவர் என்றும் விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது.

மேலும், நேற்று குறித்த சந்தேக நபரை கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலை யில் ஆஜர்படுத்திய போது ஐந்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறு நீதிவான் தம்மிக்க உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-12)

## செயற்கைக்கால் வழங்கும் செயற்றிட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் இந்தியா சேலம் றோட்டறி மாவட்டம் 2982 இன் அனுசரணையுடன் நடத்தும் தமிழ் உறவுகளுக்கான செயற்கைக்கால் வழங்கும் செயற்றிட்டம் இன்று பிற்பகல் 4 மணியளவில் யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத் தலைவர் சி.அனுராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இவ் நிகழ்வில் றோட்டறி மாவட்ட ஆளுநர் ஆர்.வாசு, பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதுடன் யாழ்.இந்தியத் துணைத் தூதர் ஏ.நடராஜன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் றோட்டறிக் கழக வடக்கு றோட்டறிச் செயற்திட்ட இயக்குநர் எஸ். சிவக்குமார் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.(செ-5)

## அரசாங்கத்திற்கு எதிராக முறையிடுவதற்கு மீண்டும் ஜெனிவா செல்கிறது கூட்டு எதிரணி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் ஜனநாயக அடக்கு முறைக்கு எதிராக மீண்டும் ஜெனிவாவிற்குச் சென்று முறையிட ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன இந்த தகவலை ஊடகங்களுக்கு அறிவித்தார்.

அவுஸ்திரேலிய பிரஜை ஒருவருக்கு சொந்தமான நிறுவனமொன்றின் பங்குகளை போலியான ஆவணங்கள் தயாரித்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட உதய கம்மன்பில எம்.பி மகஸின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரை சந்திப்பதற்காக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் மகஸின் சிறைச்சாலைக்கு நேற்று பகல் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பந்துல குணவர்த்தன எம்.பி,

நல்லாட்சி அரசாங்கத்தின் அரசியல் பழிவாங்கலுக்கு எதிராக உள்நாட்டு சர்வதேச சமூகத்தின் முன் முறையிடுவோம். உதய கம்மன்பில, டலஸ் அழகப்பெருமவுடன் நானும் இணைந்து அனைத்துல நாடாளுமன்ற சங்கத்திடம் சென்று அரசாங்கத்திற்கு எதிராக முறையிட்டிருந்தோம்.

ஜனநாயக செயற்பாட்டில் ஈடுபட முடியாதபடி எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அரசாங்கம் விதிக்கின்ற இடையூறுகள் பற்றி ஜெனிவாவிற்குச் சென்று முறையிட்ட நாடாளுமன்ற உறுப்பினரே தற்போது சிறைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்.

இந்த நிலையில் அரசாங்கத்தின் ஜனநாயகத்திற்கு எதிராக அடக்குமுறைகளுக்கு எதிராக மீண்டும் ஜெனிவாவிற்குச் சென்று அனைத்துலக நாடாளுமன்ற சங்கத்திடம் முறையிடவுள்ளோம் என பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (செ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## மரண அறிவித்தல்

### கிட்டிணன் விஜயரட்ணம் (அருச்சுனன்)



கூவில், புலோலி தெற்கு, புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட கிட்டிணன் விஜயரட்ணம் நேற்று 20.06.2016 (திங்கட்கிழமை) அதிகாலை காலமானார்.

அன்னார் கிட்டிணன்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் அமரர் வீரகத்தி-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் லீலாவதி (தங்கமணி) அவர்களின் அன்புக்கணவரும் குகநாதன் (பிரான்ஸ்), குகதாசன் (லண்டன்), குகநேசன் (லண்டன்), குகப்பிரியா (பிரான்ஸ்) குகதீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பொன்னையா, சிவப்பிரகாசம், அமரர் சிவபாக்கியம், அமரர் இலட்சுமி, கோபாலன் (பிரான்ஸ்) அமரர் சந்திரசேகரம், அமரர் நற்குணம், சற்குணம் மதிவதனி ஆகியோரின் அன்பு சகோதரரும் தீபலட்சுமி (பிரான்ஸ்) றொபிக்கா (லண்டன்), ஜெனோராஜ் (பிரான்ஸ்), றசினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கனிஷ்கா, அனித், ஹாசினி, அர்ஜீன் ஆகியோரின் அன்பு பேரனும் தவமணி (பிரான்ஸ்) இரத்தினசிங்கம் (லண்டன்), சரோஜா, செல்வரட்ணம், இளவதனி (லண்டன்), பத்மநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21.06.2016 (செவ்வாய்க்கிழமை) பி.ப 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புலோலி தெற்கு,
புலோலி.

தகவல்
குடும்பத்தினர்.

(சி-4972)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




(5000)

ஆசிரியர் கழகம்
யா/ ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்

# வடக்கு இந்தியாவிற்கும் தெற்கு சீனாவிற்கும் அரசு தாரைவார்ப்பு

## ஜே.வி.பியின் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**குற்றவாளிகளை தண்டித்து நாட்டை தூய்மைப்படுத்த வந்தவர்களே இன்று குற்றவாளிகளை பாதுகாத்து வருவதாக ஜே.விபியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். வடக்கு, இந்தியாவிற்கும் தெற்கு, சீனாவிற்கும் குத்தகைக்கு விடப்பட்டு நாட்டின் வளங்கள் அனைத்தும் அரசால் தாரைவார்க்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.**

இலங்கை மக்களுக்கு தீர்வை பெற்றுத்தருவதாக கூறி சர்வதேச வியாபாரத்திற்கு பாதையமைத்துக் கொடுக்கின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலைமைகள் மற்றும் தேசிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நாட்டில்நிலவும்இன்றைய அரசியல் சூழலானது மிகவும்மோசமான நிலையிலுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சியில் இருந்தவர்களின் மோசடிகள், ஊழல்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் வெறுப்பும், அவநம்பிக்கையும் இருந்த நிலையில் அவர்களை விரட்டியடித்து நல்லாட்சி என கூறி ஆட்சி அமைத்தவர்கள் இன்று முன்னைய ஊழல் மோசடிக்காரர்களை இணைத்துக்கொண்டு மேலும் ஊழல்மிக்க நாடாக இலங்கையை மாற்றிவிட்டனர் என அவர் மேலும் குற்றம் சாட்டினார். (இ-10)

## தொழிலை ஆரம்பிக்க வெளிநாடுகள் ஆர்வம்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கையில் கைத்தொழிலை ஆரம்பிக்க சீனா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் முன்வந்துள்ளதாகவும், ஆனால் அவைகளுக்கான இடங்களை தேடுவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகவும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்

அத்துடன், மகிந்தவின் காலத்தில் கடன் பயம், மரண பயம் மற்றும் ஏனைய பயங்களுடன் மக்கள் காணப்பட்டதாகவும், ஆனால் தற்போதைய நல்லாட்சியில் மக்கள் பயமின்றி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாடு முகங்கொடுத்த பொருளாதார பிரச்சினை மற்றும் சர்வதேச குற்றச்சாட்டுக்களுக்கு முகங்கொடுத்த நிலையிலேயே மகிந்த தேர்தலை நடத்தியதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், சர்வதேச குற்றச்சாட்டுகளில் இருந்து இலங்கையை மீட்ட நல்லாட்சியானது நாட்டில் நீதி, நேர்மையுடன் செயற்படுவதாகவும் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அத்துடன், வரி அதிகரிப்பை காரணம் காட்டி தனியார் வைத்தியசாலைகள் மக்களிடம் அதிக பணத்தை வசூலிப்பது தொடர்பில் தகவல் கிடைத்தமையால், அதனை நிறுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் கைத்தொழிற்சாலைகளை நிறுவ சீனா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் முன்வந்துள்ள நிலையில் இடங்களை தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், மிக விரைவில் அந்த பிரச்சினை தீர்க்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## ஜே.வி.பி.ஒன்றுபட வேண்டும் ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)



ஜே.விபியில் இருந்து பிரிந்து சென்றுள்ளவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்ப முன்வர வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஜே.விபியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் இறுதிக் கிரியைகளின்போது அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

சோமவன்ச அமரசிங்க, இலங்கையின் இடதுசாரி அரசியலில் சர்வதேசவாதம் மற்றும் தேசியவாதம் என்ற இரண்டு கொள்கைகளை கொண்டிருந்ததாக தேரர் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஜே.வி.பியில் இருந்து பிரிந்து சென்றுள்ள முன்னிலை சோசலிசக் கட்சியினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து நாட்டுக்கு சேவையாற்ற முன்வரவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். (இ-10)

## மட்டக்களப்பில் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)



மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குவில் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கொக்குவில் பொலிஸ் காவலரணுக்கு அருகில் உள்ள வளவினுள் வீடு கட்டுவதற்கு குழிகள் தோண்டிய போது பைகளில் சுற்றப்பட்ட நிலையில் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது ரி- 56 துப்பாக்கிகள் நான்கும் மகசின்கள் எட்டும் 210 ரி-56 துப்பாக்கிகளுக்கான ரவைகளும் மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற கிழக்கு பிரதிப்பொலிஸ்மா அதிபர் டபிள்யூ ஜெ.ஜாக்கொட ஆராய்ச்சி, மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பதில் பொறுப்பதிகாரி அஜித் குணவர்த்தன ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளினால் இப்பகுதிக்கு இந்த ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என தெரிவித்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

## அல்வாயில் ஆசிரியரின் வீட்டில் திருட்டு

(கரணவாய்)

வடமராட்சி அல்வாய் பகுதியில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டின் கதவு உடைக்கப்பட்டு நகை மற்றும் பெறுமதிமிக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையத்தை அண்டிய பகுதியில் உள்ள வீடு ஒன்றிலேயே இத் திருட்டுச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

சம்பவ தினத்தன்று குறித்த ஆசிரியர் பருத்தித்துறை நீதிமன்றம் சென்றுள்ளார்.

நீதிமன்றம் சென்று விட்டு வீடு வந்து பார்த்த போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

தொலைக்காட்சி, மடிக்கணனி உள்ளிட்ட பெறுமதிமிக்க பொருட்களுடன் நகையும் (தொகை குறிப்பிடப்படவில்லை) திருடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5-60)

## இந்தோனேசியாவில் மழை வெள்ளம் பலி எண்ணிக்கை 43 ஆக உயர்வு

இந்தோனேசியாவில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 43 ஆக உயர்ந்துள்ளது.

இந்தோனேசியாவில் கடந்த சனிக்கிழமை முதல் தொடர்ந்து பெய்த மழையில் மத்திய ஜவா கடுமையாக பாதிக்கப்பட்டது. அங்கு ஆயிரக்கணக்கான வீடுகள் தண்ணீரில் மூழ்கியதோடு பல இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஏராளமான வீடுகள் தரைமட்டமாகின.

பெரும்பாலான வீதிகள் வெள்ளத்தில் மூழ்கி சேதமடைந்ததையடுத்து போக்குவரத்து முடங்கியுள்ளது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இதுவரை வெள்ளம், நிலச்சரிவு பாதிப்பில் சிக்கிப் பலியானவர்களின் எண்ணிக்கை 43 ஆகஉயர்ந்துள்ளது.மேலும், 19 பேரைக் காணவில்லை. அவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது.

வெள்ளம் பாதித்த பகுதிகளிலிருந்து மீட்கப்பட்டவர்கள் தாற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து மீட்பு பணிகளும் விரைவு படுத்தப்பட்டுள்ளன. (இ-10)

## மாணவர்களின் உரிமை மீறப்பட்டதாக மனிதவுரிமை ஆணைக்குழுவில் புகார்

யாழ்.உடுப்பிட்டி பகுதியில் அமைந்துள்ளபாடசாலையொன்றில் கல்வி கற்ற இருமாணவர்களுடைய சிறுவர் உரிமை மீறப்பட்டுள்ளதாக குறித்த மாணவர்களின் பெற்றோரால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்றைய தினம் முறைப்பாடுபதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடு தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

உடுப்பிட்டிபகுதியில்அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் தரம் ஐந்தில் கல்வி கற்று வந்த இரு மாணவர்கள் கடந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தமது கல்வியை தொடர்வதற்காக வேறொரு பாடசாலையில் சேர்ந்துள்ளனர்.

குறித்த மாணவர்கள் முன்னர் கற்ற பாடசாலையில் எதிர்வரும் சில நாட்களில் பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளதாகவும் வேறு பாடசாலைக்கு மாற்றம் பெற்று சென்ற காரணத்தால் குறித்த விழாவில் தமது பிள்ளைகளின் பெயர்கள் உள்வாங்கப்படவில்லை என்றும் தமது பிள்ளைகளுக்கு உரித்தான பரிசு மற்றும் கௌரவிப்பு மறுக்கப்பட்டுள்ளதாகவும் ஆரம்ப பிரிவிற்கான பரிசு பெறுவோர் பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவித்து தமது பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டியஉரிமைகிடைக்க வேண்டுமென கோரி மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் பாடசாலை அதிபர், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர், வட மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு நாளை மறுதினம் 23 ஆம் திகதி விசாரணைக்குவருமாறு மனித உரிமை ஆணைக் குழுவி னால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (இ-9)

## 3 வருட சேவையை பூர்த்தி செய்த
# கடமை நிறைவேற்று அதிபர்களை மாற்றுவதில்லை என முடிவு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் 01.01.2016 இல் மூன்று ஆண்டுகால சேவையை நிறைவு செய்த கடமை நிறைவேற்று அதிபர்களைத் தொடர்ந்தும் அப்பணியில் வைத்திருப்பதென வடக்கு மாகாண கல்வி அபிவிருத்திக்குழு முடிவு செய்துள்ளது.

நேற்றைய தினம் வடக்கு மாகாண கல்வி அமைச்சில் கூடிய கல்வி அபிவிருத்திக்குழு கூட்டத்தில்,

அதிபர் தரம் III நியமனம் பெற்றவர்களுக்கு பாடசாலை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்தபோது மேற்படி முடிவு எடுக்கப்பட்டது. (ரு)

## இணையத்தளச் செய்திக்கு
# வைத்தியசாலைப் பணிப்பாளர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

இணையத்தளம் ஒன்றில் யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர் உத்தியோகத்தர் சம்பந்தமாக வெளியான செய்தியை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ரி.சத்தியமூர்த்தி மறுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

கடந்த 17.06.2016ஆம் திகதி இணைய தளத்தளம் ஒன்றில் யாழ்.போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தரின் பொறுப்பற்ற செயலால் பிறந்த சிசு பலி என்ற தலைப்பில் சத்திரசிகிச்சை பிரிவின் விடுதிப் பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் சம்மந்தமாக வெளிவந்த செய்தி தொடர்பாக பின்வரும் தகவல்களை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

1.குழந்தை ஒன்று ஒட்சிசன் வழங்காமையால் இறந்தது என்பது முற்றிலும் தவறான ஒரு செய்தியாகும்.

2.மேலும் இது தொடர்பாக நான் குறித்த செய்தி ஊடகத்திற்கு செய்தி எதையும் வழங்கவில்லை என்று வட பிராந்திய அரச மருத்துவ உத்தியோகத்தர் சங்க இணைப்பாளர் டாக்டர் காண்டீபன் என்னிடம் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.

3.அரசாங்க தாதிமார் சங்கம் தமது மறுப்பு அறிக்கையை என்னிடம் சமர்ப்பித்துள்ளது.


4.வைத்தியசாலை தொடர்பான செய் களை பணிப்பாளருடன் உறுதிப்படுத்திக் கொண்டே வெளியிடுவது பொருத்தமானது. அத்துடன் இவ்வாறான செய்திகளை வெளியிடுவது பொது மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்துவது பற்றி ஊடகங்கள் கரிசனை கொள்ள வேண்டும்.

05.குறித்த இணையத்தளத்தில் வெளிவந்த செய்தியால் வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதுடன் வைத்தியசாலை நற்பெயருக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது.

06.குறிப்பிட்ட இணையத்தளத்தோடு எந்தவித தொடர்பையும் ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஆகவே இந்த அநாமதேய இணையத்தளத்தில் வெளியான உண்மைக்கு புறம்பான செய்தி தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்ட இணையத்தளத்துக்கு எதிரான சகல சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும் என யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். ளரு

# சிம்பாவேயை எளிதில் வீழ்த்தி இந்தியா அபார வெற்றி



இந்தியா - சிம்பாவே இடையேயான இரண்டாவது 20 ஓவர் போட்டியில், இந்தியா அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் சிம்பாவே அணியை வீழ்த்தி வெற்றிப்பெற்றது.

இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடரை 1-1 என இந்தியா சமன் செய்துள்ளது.

ஹராரேவில் நேற்று தொடங்கிய போட்டியில், சிம்பாவே அணி நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பாடிய சிம்பாவே அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 99 ஓட்டங்கள் எடுத்தது. அதிக பட்சமாக சிம்பாவே வீரர் பீட்டர் மூர் 31 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்திய அணி தரப்பில் குல்கர்னி 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

100 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி, 13.1 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 103 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இந்திய தரப்பில் மன்தீப் சிங் 52* ஓட்டங்களும், லோகேஷ் ராகுல் 47* ஓட்டங்களும் குவித்தனர்.

இதன் மூலம் 20 ஓவர் தொடர் 1-1 என சம நிலையை எட்டியுள்ளது. எதிர்வரும் ஜூன் 22ஆம் திகதி நடக்கும் கடைசி மற்றும் மூன்றாவது 20 ஓவர் போட்டியில் வெற்றிப் பெறும் அணியே தொடரை கைப்பற்றும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## வர்த்தக வாணிப அதிகார சபை உருவாக்கம்
# வடக்கு வர்த்தக சங்க பிரதிநிதிகளுடன் அமை.டெனீஸ்வரன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் வர்த்தக வாணிப அதிகாரசபை ஒன்றை உருவாகுவதற்கும் வர்த்தக வாணிபத்தினை சீர்செய்து நிருவகிப்பதற்காகவும் வட மாகாண வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கும் வடமாகாணத்தில் உள்ள வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று 23ஆம் திகதி நாளை மறுதினம் பிற்பகல் 2.30 மணியளவில் இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வர்த்தக சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் அலுவலகத்தில் இருந்து அனுப்பியுள்ள அறிக்கையில்,

வட மாகாணத்தில் உள்ள வர்த்தகர்கள் தங்களது பொருளாதாரத்தை கட்டியெழுப்பமுடியாமல் இருக்கின்றார்கள். இவ்வாறு கஷ்டப்படுகின்ற வர்த்தகர்களை இந்நிலைமையில் இருந்து மீட்டெடுப்பதற்கும் எமது பொருளாதாரத்தை ஒரு ஸ்திர நிலையில் வைத்திருப்பதற்கும் சில திட்டங்களை வகுப்பதற்குஅமைச்சால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்டமாக வடமாகாணத்தில் இருக்கின்ற ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வர்த்தக சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர் மற்றும் உப செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

மேற்படி விசேட கலந்துரையாடலுக்கு வருகின்ற வர்த்தக சங்க பிரதிநிதிகள் தத் தமது மாவட்டத்தில் இருக்கின்ற பிரச்சினைகளையும் எதிர்காலத்தில் பொருளாதாரத்தை ஸ்திர நிலையில் வைத்திருப்பதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் எழுத்து வடிவில் கொண்டுவருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

மேலும் வடமாகாணத்தில் இருக்கின்ற புத்திஜீவிகள், வர்த்தக பெருமக்கள், பொருளாதார நிபுணர்கள் மற்றும் புலம்பெயர் உறவுகள் அனைவரும் எதிர்காலத்தில் பொருளாதாரத்தை மிகவும் உறுதியான நிலைக்கு கொண்டு வருவதற்கு தங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் யோசனைகளையும் வருகின்ற 01.07.2016 இற்குபின்னர் யாழ்.மாவட்டத்தில் உள்ள அமைச்சரின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (செ-9)

# ஐரோப்பிய கோப்பை கால்பந்து 2ஆவது சுற்றில் சுவிட்சலாந்து




15ஆவது ஐரோப்பிய கோப்பை (யூரோ) கால்பந்து போட்டி பிரான்சில் நடைபெற்று வருகிறது. 'ஏ' பிரிவில் கடைசி 'லீக்' ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் நடந்தது. ஒரு ஆட்டத்தில் பிரான்ஸ்- சுவிட்சலாந்து அணிகள் மோதின.

இந்த ஆட்டம் கோல் எதுவுமின்றி சமநிலையில் முடிந்தது. இதன்மூலம் சுவிட் சலாந்து 2ஆவது சுற்றுக்கு முன்னேறியது. அந்த அணி 3 ஆட்டத்தில் 1 வெற்றி, 2 சமநிலையில் 5 புள்ளிகள் பெற்றது.

பிரான்ஸ் அணி ஏற்கெனவே 'நாக்அவுட்' சுற்றுக்கு தகுதி பெற்று இருந்தது. அந்த அணி 2 வெற்றி, 1 சமநிலையுடன் 7 புள்ளிகள் பெற்று அந்த பிரிவில் முதல் இடத்தை பிடித்தது.

இதே பிரிவில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் ருமேனியா- அல்பேனியா அணிகள் மோதின. இதில் ருமேனியா 0-1 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சிகரமாக தோற்றது. ஆட்டத்தின் 43-வது நிமிடத்தில் அல்பேனியா வீரர் அர்மண்டோ ஷாடிகு கோல் அடித்தார். இறுதிவரை ருமேனியா அணியால் பதில் கோல் அடித்து சமன் செய்ய இயலவில்லை.

இந்த தோல்வி மூலம் ருமேனியா பேர்ட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டது. அந்த அணி 3 ஆட்டத்தில் 1 சமநிலை, 2 தோல்வி மூலம் 1 புள்ளிகள் பெற்று 'ஏ' பிரிவில் கடைசி இடத்தை பிடித்தது.

அல்பேனியா 1 வெற்றி, 2 தோல்வியுடன் 3 புள்ளிகள் பெற்று அந்த பிரிவில் 3-வது இடத்தை பிடித்தது. சிறந்த 3-வது அணியில் இருந்து 4 நாடுகள் நாக்அவுட் சுற்றுக்கு முன்னேறும். இதனால் அல்பேனியா மற்ற பிரிவுகளில் உள்ள 3-வது இடங்களை பிடிக்கும் அணிகளின் முடிவுக்காக காத்திருக்கிறது. (க)

# தமிழர் தரப்பு பொறுமையாக இருந்து தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும்

## அமைச்சர் ராஜித அட்வைஸ்

(கொழும்பு)

**எதிர்க்கட்சி என்ற ரீதியில் அரசாங்கத்தை விமர்சிக்கவும், சர்வதேச மட்டத்தில் கருத்துக்களை வெளிப்படுத்தவும், சர்வதேச விசாரணையை கோரவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உரிமை உள்ளது. தமிழ் மக்களின் இத்தனை கால கோரிக்கையும் ஒன்றுகூடி வரும் நிலையில் அதை குழப்பியடிக்காது தமிழர் தரப்பு பொறுமையாக இருந்து தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அமைச்சரவையின் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்திய போதே அமைச்சர் ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவாவில் இலங்கை தொடர்பிலான விவாதம் அடுத்த வாரம் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் புலம்பெயர் அமைப்புகள், ஐ.நா. ஆணையாளர் செய்யித் அல்ஹுசேனை சந்திக்கவுள்ளதாகவும், இப்போது நாட்டில் அரசாங்கம் அவசரமாக மேற்கொண்டு வரும் நல்லிணக்க செயற்பாடுகள் போர்க்குற்றங்களை மூடிமறைக்கும் செயற்பாடு என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட சிலர் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இலங்கை தொடர்பில் சர்வதேச தரப்பிடம் தமக்கான சர்வதேச விசாரணை ஒன்று வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். இப்போது மட்டுமல்ல ஆரம்பத்தில் இருந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அவ்வாறானதொன்றாகவே அமைந்துள்ளன.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்களையோ, வடமாகாண முதல்வரின் கருத்துக்களையோ அல்லது புலம்பெயர் அமைப்புக்களின் கருத்துக்களையோ முழுமையாக நடைமுறைப்படுத்தி தீர்வுகாண வேண்டும் என்ற தேவை இல்லை.

எனினும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் சர்வதேச தரப்பு ஆராயும். எமது கொள்கைகள், நாம் மேற்கொள்ளும் நகர்வுகள் தொடர்பிலும் ஆராயப்படும். இப்போது நல்லிணக்கம் தொடர்பில் அரசாங்கம் பலமான பொறிமுறைகளை கையாண்டு வருகின்றது.

இப்போது நாம் எவ்வாறு செயற்பட்டு வருகின்றோம் என்பது தொடர்பில் பொறுமையாக அவதானிக்க வேண்டும். எமது விசாரணைப் பொறிமுறைகள், நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரையில் அவதானிக்க வேண்டும்.

எனினும் இவர்கள் அனைவரும் நாட்டில் நிரந்தத் தீர்வு ஒன்று பெறவேண்டும் என்ற எண்ணத்தில் இல்லாது தொடர்ந்தும் குழப்பகரமான அரசியலை முன்னெடுக்கவே முயற்சிக்கின்றனர்.

இவர்கள் ஜெனிவாவில் யாரை சந்தித்தாலும், என்ன காரணங்களை முன்வைத்தாலும் அரசாங்கத்தின் மீதுள்ள சர்வதேச நாடுகளின் பார்வையும் எம்மீதான நம்பிக்கையும் மாறப்போவதில்லை. அதற்கான உறுதியான ஆதாரம் இம்முறை ஜெனிவா தீர்மானத்தில் அனைவரும் அறியக்கூடிய வகையில் இருக்கும்.

அதேபோல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த தேசிய அரசாங்கத்தில் உறுதியான நிரந்தரத் தீர்வை நாம் பெற்றுக்கொடுப்போம்.

அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையிலான நல்ல மாற்றங்களை ஏற்படுத்தி ஐக்கிய இலங்கையில் அனைத்து இன மக்களுக்கும் அமைதியாக வாழக் கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுப்போம்.

எனினும் இந்த சூழல் அமைய வேண்டுமாயின் தமிழர் தரப்பு பொறுமையாக இருக்க வேண்டும். தமிழர் தரப்பின் இத்தனை கால கோரிக்கையும் ஒன்றுகூடி வரும் நிலையில் அதை குழப்பியடிக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## அதிபர் நியமனம் பெற்றவர்களுக்கு எப்போது பாடசாலை வழங்கப்படும்?

(கொழும்பு)

வடமாகாணத்தின் கல்வி திட்டமிட்டு பின்தள்ளப்படுவதற்கு பல பின்னணிகள் உள்ளன.

இந்நிலையில் தற்போது அதிபர் சேவைத்தரம்-III கிடைக்கப் பெற்ற அதிபர்களையும், கடமை நிறைவேற்றுக் கடமையில் உள்ள அதிபர்களையும் பகைமூட்டும் தொழிற்பாட்டில் சிலர் இறங்கியுள்ளனர். யுத்த காலங்களில் எம் பிரதேசங்களில் இன உணர்வோடு கடமைபுரிந்த பல துறைசார்ந்தவர்கள் இன்றும் எம் மண்ணில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் பணி கடவுளின் பணிக்குச் சமனானது. அரசாங்க பொதுப் பரீட்சைகளில் தோற்றி சித்திபெற முடியாத அளவுக்கு அன்றைய சூழல் இருந்தது. ஏன் அரச தடை தாண்டல் பரீட்சைக்குக்கூட செல்ல முடியாத அவலம் இருந்தது. ஆனால் இன்று சற்று சுதந்திரமாக நாடளாவிய ரீதியிலான தேர்வுகளுக்கு எம்இனத்திற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது.

அந்நிலையில் அதிபர் சேவைத் தரம் - III பரீட்சையில் வடகிழக்கு மாகாணங்களில் இருந்து வினைத்திறன் உள்ள பல ஆசிரியர்கள் சித்திபெற்றுள்ளார்கள். அவர்களின் திறன் பாராட்டுக்குரியது. பல பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள அதிபர் வெற்றிடம் தகுதியானவர்களால் இனியாவது நிரப்பப்படும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது. இனிமேல் கடமை நிறைவேற்றும் அதிபர் பதவி இல்லை என்ற நிலை படிப்படியாக உருவாகும்.

அதேவேளை கடமை நிறைவேற்றும் பணியில் தற்போது உள்ள அதிபர்களையும் நாம் தூக்கி வீச முடியாது. அவர்களின் கடினகால சேவைக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். இத்னை தீர்க்கும் பக்குவமுள்ள திறமையான தன்னாட்சி மாகாண சபை ஒன்று வடபுலத்தில் உள்ளது. அதன் முதல்வராக தகுதி வாய்ந்த ஒருவர் உள்ளார். அவருக்கு வடகிழக்கின் யுத்த பாதிப்புகள் நன்கு தெரியும். அந்தக்காலங்களில் உயிரைச் துச்சமென நினைத்து கடமை செய்தவர்கள் யார் என்பதும் தெரியும். வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இன உணர்வோடு எமது பிரதேச ஒற்றுமை, பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி என்பவற்றில் மிகுந்த கரிசனை உள்ளவர். அவரும் முப்பது ஆண்டுகளுக்கு மேலான யுத்தகாலங்களுக்குள் சிக்குண்டு கடமையாற்றியவர்.

ஆகையால் எமது பிரதேசம், எம்மவர்கள் என்ற உணர்வோடு பகைமூட்டும் சக்திகளுக்கு இடம் கொடுக்காமல் இவர்கள் தொழிற்படுவார்கள்.

பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் கல்விக்கூடங்களில் கலவரங்களைத் தோற்றுவிக்க சிலர் முயற்சிப்பதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு இத்தகைய தீய சக்திகள் நாம் அழிவில் சிக்குண்டபோதுஏன்மௌனமாகஇருந்தன என்பதனையும் கேட்க விரும்புகின்றோம்.

இழப்புகளையும், இன்னல்களையும் தொடர்ந்தும் சுமந்தவர்களாக வாழும் நாம் இனியும் எம்மிடையே பகையைத் தோற்றுவிக்காமல் எதிர்கால சந்ததியின் வாழ்வுக்கு உரமூட்டுவோம்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## இராசி பலன்

21.06.2016
(ஆனி 07, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
பிரதமை மாலை 5.45 மணிவரை
மூலம் முற்பகல் 8.26 மணிவரை
சுபநேரம் 10.24-11.54 மணிவரை
இராகுகாலம் 2.54-4.24 மணிவரை
அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி புத சுக் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மிருகசீரிடம் | | |
| | | | குரு ராகு |
| சந் | சனி | செவ் | |

**மீனம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மேடம்** தொழில் ரீதியாக ஏற்பட்ட மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம் கிடைக்கும்.

**இடபம்** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், பிறருக்காக பொறுப்புக் கூறுவதை தவிர்ப்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மிதுனம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** உன்னதமான வாழ்வுக்கு அஸ்திபாரம் அமைத்துக் கொள்வீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரும் நாள், பணவரவால் சந்தோசமடைவீர்கள்.

**கடகம்** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், எடுத்த கருமங்கள் எளிதில் கைகூடும்.

**மகரம்** வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**சிம்மம்** தாழ்ந்த சுபாவமுண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புதிய பொருட் சேர்க்கைக்கு அஸ்திபாரமிடுவீர்கள், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்** குடும்ப மகிழ்ச்சி கூடும், உறவினர் வருகையுண்டு, தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், தனவரவு திருப்திதரும் வகையில் அமையும்.

**துலாம்** சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், பெற்றோர் மீதான பாசம் கூடும்.




யாழ்.ஒஸ்மானியா கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற ரமழான் புனித அல்குர் ஆன் போட்டி பரிசளிப்பு விழாவின் போது யாழ்.எழுத்தாளர் அல்ஹாஜ் எம்.எப்.எம்.இக்பால் (ஜே.பி) மாணவர் ஒருவருக்கு நற்சான்றிதழும் பரிசிலும் வழங்குவதை படத்தில் காணலாம். அருகில் விழா ஏற்பாட்டாளர் மௌலவி எம்.எஸ்.எ.எம் முபாரக் (நளீமி) நிற்பதையும் படத்தில் காணலாம்.

## மஹா கும்பாபிஷேகம்

கைதடி அருள்மிகு வீரகத்திப்பிள்ளையார் கோவில் முதலாய கோயில்களின் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிமுதல் 7.25 மணி வரையான வேளையில் நடைபெறவுள்ளது.

பிரதிஷ்ட குரு பிரம்மஸ்ரீ ச.ஜெயந்தி நாதக்குருக்கள் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வின் கர்மாரம்பம் விநாயகர் வழிபாடு நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் ஆரம்பமாகவுள்ளது.

26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும் கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து எதிர்வரும் 45 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளதாக ஆலயதிருப்பணிச்சபையினர் அறிவித்துள்ளனர்.(இ-246)




## ஆரம்பப் பிரிவுகளுக்குரிய கல்விக் கண்காட்சி நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய ஆரம்ப நிலைப் பிரிவுகளுக்குரிய கல்விக்கண்காட்சி நாளை காலை 9 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ். வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி.எஸ்.மாணிக்கராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினராக யாழ். வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மைதிலி தேவராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## மஹா கும்பாபிஷேகம்

தென்புலோலி புற்றரை பெரிய வளவு வீரபத்திரர் சுவாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் ஜூலை மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு 9 ஆம் திகதி சனிக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (இ-5)

# சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டோருக்கு விரைவில் மானிய வீடமைப்புத் திட்டம்

## தேசிய வீடமைப்பு அதிகாரசபை நடவடிக்கை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கான மானிய வீடமைப்புத் திட்டம் ஒன்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுநீரக நோயினால் கடும் பாதிப்பிற்கு உட்பட்ட நோயாளிகளுக்கென மானிய வீடமைப்புத் திட்டம் ஒன்றை வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 23 ஆம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அமுல்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேசிய வீடமைப்பு வார நிகழ்ச்சித்திட்ட காலத்தில் மேற்படி வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.


இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்படும் பயனாளிகள் அரச வைத்தியசாலையில் இந்த நோய்க்கான பதிவினை மேற்கொண்டவராகவும் தற்போது இந்த நோய்க்கான சிகிச்சை பெறுபவர் என விசேட வைத்திய நிபுணரால் உறுதிப்படுத்தப்படவும் வேண்டும்.

இதற்காக தெரிவு செய்யப்படும் பயனாளி பாதிக்கப்பட்டவராக உள்ளதுடன் வீடற்றவராகவும் காணி உரிமையுள்ளவராக்வும் இருத்தல் அவசியம்.

இதற்காக புதிய வீட்டிற்காக 5 இலட்சம் ரூபாவும் தரமுயர்த்தல் வீட்டிற்காக 2 இலட்சம் ரூபா வரையும் மானியமாக பெற்றுக் கொள்ள முடியும். எனவே இத்திட்டத்திற்கு பொருத்தமான பயனாளிகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமோ அல்லது தங்கள் பிரிவு பிரதேச செயலாளரிடமோ தொர்டர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (இ-9)

# சேதமடைந்த நிலையில் பாலம்

(அராலி)



யாழ்ப்பாணம்-காரைநகர் பிரதான வீதியிலுள்ள பாலம் தேசமடைந்த நிலையில் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த பாலம் சேதமடைந்து இருப்பதனால் மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாகவும் காணப்படுகிறது.

மழை காலம் என்றால் இப்பாலம் ஊடாக மக்கள் பயணிப்பதில் பலதரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இப் பாலம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-91)

## தேரும் தீர்த்தமும்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு குருநாத சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் நாளை தேர்த் திருவிழாவும் நாளை மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-5)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம்-வண்ணை கிழக்கு கலட்டி அருள்மிகு வீர கத்திப் பிள்ளையார் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடை பெறவுள்ளது.

தொடர்ந்து ஜூலை மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர் உற்சவமும் 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. (இ-5)

## இவ்வாண்டுக்கான மாகாணமட்ட ஆங்கில தினப் போட்டிகள்

2016 ஆம் ஆண்டுக்கான மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டிகள் பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 27 ஆம் திகதி தேசிய மட்டத்திற்குச் செல்லும் சகல எழுத்தாக்கப் போட்டிகளும் யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும். எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி தேசிய மட்டத்திற்குச் செல்லும் ஏனைய போட்டிகள் யாவும் யா/உடுவில் மகளிர் கல்லூரியிலும் யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

02.07.2016 மாகாண மட்டத்திற்கு மட்டும் உரிய ஏனைய போட்டிகளான குழுப் பாடல்கள், தனி நடிப்பு, Role play என்பன யா/உடுவில் மகளிர் கல்லூரியிலும் யா/இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும் என வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) கு.வர்ணகுலராஜா அறிவித்துள்ளார். (இ

ஏல விற்பனை

இடம் :- பாடசாலை அலுவலக முன்புறம்
காலம் :- 30.06.2016 காலை 10 மணி
ஏல விற்பனைக்கு விடப்படும் பொருட்கள்
மரமறைப்பு-01, காட்சிப்பலகை-01, உருக்கு அலுமாரி-01, மண்வெட்டி-01, பாலர் கதிரை மரம்-22, நீளச்சாய்மனை வாங்கு-02, கபேட் மரம்-03, இரும்புக்கதிரை-06

யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன்பாடசாலை - அதிபர்
(4997)

பகிரங்க அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் குழாய்க் கிணறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் 20.07.2016 ஆம் திகதிக்கு முன்னர் தொழில் வியாபார பெயர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குழாய்க்கிணறு நிர்மாணிக்க உத்தேசிப்பவர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசசபையூடாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் அனுமதி பெற்ற பின்னர் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையில் பதிவு செய்த நிறுவனங்களினூடாக குழாய்க்கிணற்றினை நிர்மாணிக்கமுடியும் என்பதுடன் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அனுமதியின்றி குழாய்க்கிணறு அமைக்கும் பொதுமக்களுக்கும் குழாய்க்கிணறு நிர்மாணிக்கும் நிறுவனங்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தொடர்புகளுக்கு:021 225 5381
செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்
(சி-4970)

# நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தமிழ்ப்பொலிஸார் பற்றாக்குறை

## நிவர்த்தி செய்யுமாறு மக்கள் கோரிக்கை

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தமிழ்ப் பொலிஸார் பற்றாக்குறையாக இருப்பதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 40 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றனர்.

ஆனால் பொலிஸ் நிலையத்தில் 5 தமிழ்ப் பொலிஸாரே கடைமையில் உள்ளனர். பொலிஸ் விசாரணைகள் பதிவு செய்யப்படும் சந்தர்ப்பங்களில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடுகளை பதிவு செய்ய வரும் மக்கள் தமிழ்ப் பொலிஸார் பற்றாக்குறையினால் நீண்ட நேரம் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பொதுமக்களின் நன்மை கருதி நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திற்கு மேலதிக தமிழ்ப் பொலிஸாரை நியமிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-5-60)

## களிமண் சிற்ப ஓராண்டு பயிற்சி நெறி

திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக்கூடத்தின் ஏற்பாட்டில் களிமண் சிற்ப ஓராண்டு பயிற்சி நெறி எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இல. 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. தொடர்ந்து மாதத்தின் இறுதி சனி,ஞாயிறு தினங்களில் முழுநாள் பயிற்சி நெறியாக நடைபெறவுள்ளது.

இதனை நடத்துவதற்காக கொழும்பிலிருந்து கட்புல, ஆற்றுகைக் கலைகள் பல்கலைக் கழகத்தின் பட்டப்படிப்பு கற்கைநெறியின் பீடாதிபதி பேராசிரியர் சரத் சந்திர ஜீவா தலைமையிலான குழுவினர் வருகைதரவுள்ளனர். இப்பயிற்சியில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படவுள்ளதால் இதில் இணைந்துகொள்ள ஆர்வமுடைய மாணவர்கள் நாளை மறுதினம் 23ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பாக தமது பதிவுகளை திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)




## ஆசிரிய உதவியாளர்கள் விடயத்தில் மகிந்த வழியைப் பின்பற்றும் மைத்திரி

இலங்கையில் 6ஆயிரம் ரூபா மட்டும் மாதச் சம்பளம் பெறும் ஆசிரிய உதவியாளர்களாக எத்தனை சிங்கள்வர்கள் இருக்கிறார்கள்? என்று கேட்டால் தேடித்தான் பார்க்கவேண்டும். அப்படிக் குறைந்த அதிலும் இந்தக் காலத்தில் வெறும் ஆறாயிரம் ரூபா மாதச் சம்பளம் பெறும் சிங்கள்வர்கள் எவருமே இல்லை.

இந்நிலையில் இனவாத நோக்கம் கருதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தால் தமிழர்களை அடிமைப்படுத்தி அடிபணிய வைப்பதற்காக கொண்டுவரப்பட்ட வெறும் 6ஆயிரம் ரூபா மாதச் சம்பளத்திற்கு ஆசிரிய உதவியாளர் என்னும் அரச உத்தியோகத்தை நல்லாட்சி நடத்துவதாகக் கூறும் மைத்திரி அரசாங்கமும் அப்படியே ஏற்றுக்கொண்டு தமிழர்கள் விடயத்தில் கடைப்பிடித்து வருகின்றது. எப்படியான நல்லாட்சி ஏற்பட்டாலும் தமிழர்கள் என்றைக்கும் அடிமைகளாகவேதான் நோக்கப்படுவார்கள் என்பதையே இது மிகத் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஊழல் நிறைந்த அடாவடித்தனமான ஆட்சி என்று கூறப்படும் மகிந்த ஆட்சி முடிவடைந்து மைத்திரி நல்லாட்சி ஏற்படுத்தப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகிவிட்ட நிலையிலும், தமிழர் ஒருவர் கல்வி அமைச்சராக இருக்கின்ற போதிலும் தமிழர்களாகவுள்ள ஆசிரிய உதவியாளர்கள் தற்போதும் வெறும் 6ஆயிரம் ரூபா சம்பளத்திற்கு அரசின் அடிமைகளாகவே கணிக்கப்படுகின்றார்கள். ஆசிரிய உதவியாளர்களாகவுள்ள தமிழர்களை மகிந்த ஆட்சியைத் தொடர்ந்து மைத்திரி நல்லாட்சியும் ஏமாற்றி அவர்களின் உழைப்பைக் கொள்ளையடித்து ஆசிரிய உதவியாளர்கள் குடும்பங்களைத் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

இம்முறை புதுவருடப்பிறப்புக்கு புத்தாடை வாங்கக்கூட பணமில்லாமல் மலையகத்திலுள்ள ஆசிரிய உதவியாளர்கள் துன்பப்பட்டமையும் குடும்பச் செலவுகளைச் செய்யமுடியாது துன்பப்பட்டு துடிக்கின்றமையும் அனைவருக்கும் தெரிந்தநிலையிலும் எவருமே ஆசிரிய உதவியாளரது நியமனத்தை இலங்கை ஆசிரியர் சேவை தரம்-3-II இல் உள்ளீர்ப்புச் செய்து அதற்கேற்ற சம்பளத்தைச் பெற்றுத்தர விருப்பமின்றியுள்ளார்கள்.

ஆசிரிய உதவியாளர்களாக உள்ளவர்களுக்கு மாதாந்தம் வெறும் 6ஆயிரம் ரூபா மட்டுமே சம்பளமாக தரப்படுகின்றது. ஆசிரிய உதவியாளர்களுக்கு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிக்காக மலையகத்திலிருந்து யாழ்ப்பாணம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு பெருமளவானவர்கள் வந்து தங்கி நின்று பயிற்சி பெறுகின்றார்கள். இந்த ஆசிரிய உதவியாளர்களின் செலவு விபரம்:-

தங்குமிடத்துக்குரிய வாடகை- 2500 ரூபா
மூன்று வேளை உணவுச் செலவு- 9000 ரூபா
போக்குவரத்து ,ஏனைய செலவுகள்- 5000 ரூபா
-------------------
மொத்தச் செலவு- 16,500 ரூபா
-------------------

**இதனைவிட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விழாக்கள், புத்தகங்கள் போன்ற ஏனைய செலவுகளும் உண்டு. அவை இதற்குள் சேர்க்கப்படவில்லை.**

**இதற்கு அப்பால் இந்த ஆசிரிய உதவியாளர்களின் குடும்பங்களும் இவர்களின் வருமானத்தை நம்பியே வாழ்கின்றன.**

**ஆசிரிய உதவியாளர் பணியில் உள்ள ஒருவர் வெறும் 6ஆயிரம் ரூபா மாதச் சம்பளத்தைப் பெற்று தனது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தங்கி நின்று பயிற்சி பெறும் ஒருமாதத்திற்குரிய குறைந்தபட்ச 16ஆயிரத்து 500 ரூபா செலவை எப்படிச் செய்யமுடியும்?**

**இவ்விடயம் குளிரூட்டப்பட்ட ஏ.சி வாகனங்களில் சொகுசாகப் பயணிக்கும் ஜனாதிபதி உட்பட்ட அமைச்சர்களுக்கு எங்கே தெரியப்போகிறது?**

இவ்விடயத்தில் ஆசிரியர் சங்கங்கள்கூட ஆக்கபூர்வமான நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளாமல் சும்மா ஒரு அறிக்கையளவில் தமது கடமை முடிந்துவிட்டதாக மௌனமாக இருந்துவிடுகின்றன. ஆசிரிய உதவியாளர்களாக பணியிலுள்ளவர்கள் தமிழர்கள் என்பதாலோ தெரியவில்லை ஆசிரியர் சங்கங்கள் பெரும்பான்மை இனத்தவர்களைத் தலைவர்களாகக் கொண்டனவாக காணப்படுகின்றமையாலோ என்னவோ தெரியவில்லை என பாதிக்கப்பட்ட ஆசிரிய உதவியுாளர்கள் குறைபட்டுக்கொள்கின்றார்கள்.

ஆசிரிய உதவியாளர் பதவி என்பதே இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணங்களுக்கு முற்றிலும் முரணான விதிமுறைகளை மீறியதாகக் காணப்படுகின்ற போதிலும் தமிழர்களை வாட்டிவதைப்பதற்காக மைத்திரி நல்லாட்சி அரசாங்கமும் அதனைப் பின்பற்றி வருகின்றது.

நாட்டில் தமது வாழ்க்கைக்காகக் கஷ்டப்படும் 5ஆயிரம் தமிழ் ஆசிரிய உதவியாளர்களை அரசாங்கம் நினைத்தால் விரும்பினால் நாளையே ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்த்துச் சம்பளத்தை ஆசிரியர் சேவைக்கமைவாக வழங்கலாம்.ஆனால் அதனை அரசாங்கம் செய்யாது. ஏனென்றால் ஆசிரிய உதவியாளர்கள் தமிழர்களாகக் காணப்படுகின்றார்கள்.

**பாதிக்கப்பட்ட ஆசிரிய உதவியாளர்கள்**

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 50 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 70 | 80 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 500 | 500 | 800 | 600 |
| தக்காளி | 240 | 300 | 180 | 170 | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 70 | 100 | 160 |
| கோவா | 180 | 300 | 120 | 160 | 200 | 180 |
| கரட் | 280 | 400 | 250 | 250 | 400 | 250 |
| பூசணி | 80 | 100 | 80 | 70 | 100 | 70 |
| புடோல் | 90 | 100 | 70 | 100 | 120 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 60 | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 140 | 140 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 240 | 600 | 200 | 200 | 200 | 280 |
| வெண்டிக்காய் | 150 | 200 | 100 | 100 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 200 | 100 | 120 | 200 | 140 |
| பயற்றங்காய் | 200 | 200 | 100 | 140 | 160 | 150 |
| லீக்ஸ் | 240 | 200 | 150 | 200 | 280 | 80 |
| பீற்றூட் | 120 | 200 | 150 | 180 | 240 | 200 |
| கறிமிளகாய் | 300 | 400 | 220 | 260 | 280 | 250 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 400 | 400 | 600 | 800 |
| போஞ்சி | 250 | 200 | 180 | 200 | 240 | 180 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | — | — | 100 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 10 | 30 | 20 | 10 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 250 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-25 | 30 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 200 | 300 | 120 | — | 200 | 120 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — | — | — | 200 |
| முள்ளங்கி | 100 | 200 | — | 120 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 20 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 20 | — | 80 | 80 | 70 |



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:36<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: B/5964 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 2.5<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5574 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 55 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/5965 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 16<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/5575 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 48செவ் 2 இல்<br>உயரம்: 5'7"தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: B/5966 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 28<br>தகைமை/தொழில்:பட்டதாரி/அரச தொழில்<br>தொ.இ: G/5576 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 22சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5967 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 49<br>உயரம்: 154cm<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/5581 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# ஆனி மாத இராசிபலன்கள்

## 15.06.2016~15.07.2016



*மற்றவர்கள் மகிழ்ச்சியோடு வாழ வழி வகுத்துக் கொடுக்கும் தனுசு ராசி அன்பர்களே!*

துர்முகி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானத்தில் சூரிய பகவான் சஞ்சரிக்கிறார். 9இற்கு அதிபதியான சூரியன் உங்கள் ராசியைப் பார்க்கும் பொழுது, பிரகாசமான எதிர்காலத்திற்கான அடித்தளம் அமையும். குருவின் பார்வையும் உங்களுக்கு கைகொடுக்கிறது.

குழப்பங்களில் இருந்து விடுபட வேண்டுமானால், கொள்கைப் பிடிப்புடன் செயற்பட வேண்டு மானால், இழப்புகளை ஈடுசெய்து எதிர்காலத்தை வளமாக அமைத்துக் கொள்ள வேண்டுமானால், குருவின் பார்வை தான் தேவை. அந்த குருபகவான் வக்ர நிவர்த்தியாகி பூரண பலத்தோடு உங்கள் ராசியைப் பார்க்கின்றார். 3,5 ஆகிய இடங்களையும் பார்க்கின்றார்.

இதனால் உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்குவீர்கள். உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட உபத்திரவங்களும், கூடப்பிறந்தவர்களால் ஏற்பட்ட உபத்திரவங்களும் அகலும். சகோதர வர்க்கத்தினர் ஒத்துழைப்போடு உங்கள் இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறுவதற்கான வழிபிறக்கும். அரசியல் செல்வாக்கு மேலோங்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். மேலிடத்து ஆதரவோடு மிகச் சிறந்த பலனைக் காணப்போகிறீர்கள்.

'மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கப் போகின்றது. எனவே, இந்த மாதம் பொருளாதார நிலை உயரும். 6இற்கு அதிபதி சுக்ரனும், 7இற்கு அதிபதி புதனும் பரிவர்த்தனை யோகம் பெறுவதால் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தபடியே ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் வந்து சேரும். வழக்குகள் சாதகமாக அமையும். கொடி கட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மறையும். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவது நல்லது. ஆனித் திருமஞ்சன நாளில் நடராஜரை வழிபாடு செய்யுங்கள். நல்லது நடக்கும்.

**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**

மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிக்கு 12இல் செவ்வாய் சஞ்சரிக்கிறார். அவரோடு தனாதிபதி சனியும் இணைந்து உலா வருகின்றார். ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதாலும், விரயாதிபதி செவ்வாய் விரயஸ்தானத்திலேயே வீற்றிருப்பதாலும், மாதத் தொடக்கத்தில் விரயம் மேலோங்கி இருக்கும். வீண் விரயங்கள் ஆகாமல் சுப விரயமாக மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டியது உங்கள் புத்திசாலித்தனமாகும். வீடு, வாகனம் வாங்கும் முயற்சிக்காக பணத்தை செலவிடலாம். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதற்கும் செலவிடலாம். ஜூன் 19ஆம் திகதி துலாம ராசியில் செவ்வாய் வக்ர இயக்கத்தில் சஞ்ச ரிக்கப் போகின்றார். அதன் பிறகு மீண்டும் ஜூன 28ஆம் திகதி செவ்வாய் வக்ர நிவர்த்தியாகி னறார். ஜூலை முதலாம் திகதி விருச்சிகத்திறகுள் செவ்வாய் சஞ்சரிக்கப் போகின்றார். இக்காலத்தில் அங்காரக வழிபாடு அவசியம் தேவை.




**புதனின் பெயர்ச்சிக் காலம்!**

ஜூன் 20ஆம் திகதி மிதுனத்திலும், ஜூலை 6ஆம் திகதி கடகத்திலும் புதன் சஞ்சரிக்கப் போகிறார். மிதுன புதன் சஞ்சாரத்தின் போது, கல்யாணக் கனவுகள் நனவாகும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சிக்குரிய செய்தி வந்து சேரும். கடக புதன் சஞ் சாரத்தின் போது ஊர் மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் நிகழும். தொழில் நடத்து பவர்களுக்கு புதிய பணியாளர்களும், பங்குதாரர்களும் வந்திணைவர்.

**சுக்ர பெயர்ச்சிக் காலம்!**

ஜூலை 8ஆம் திகதி கடகத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகின்றார். 6இற்கு அதிபதி 8இல் சஞ்சரிக்கும் பொழுது, விபரீத ராஜ யோக அடிப்படையில் பல நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். ஆபரண சேர்க்கை உருவாகும். கடன் சுமை குறைய புதிய வழி பிறக்கும். வெளிநாட்டு முயற்சியில் வெற்றி உண்டாகும்.

இம்மாதம் வியாழன் தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

சுப விரயங்கள் அதிகரிக்கும் மாதம் இது. துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். குரு பார்வையால் குழப்பங்களில் இருந்து விடுபடுவீர்கள். கணவன் - மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். மூன்றாம் நபர் குடும்ப விஷயத்தில் குறுக்கிடுவதைத் தவிர்ப்பது நல்லது. உடன்பிறப்புகளோடு பகை பாராட்டாமல் நடந்து கொள்ளுங்கள். வீடுமாற்றம் ஒருசிலருக்கு எளிதில் அமையும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்போடு முன்னேற்றம் காண்பீர்கள். சுப பலத்தால் பதவிகள் கிடைக்கலாம். நடராஜர் வழிபாடு நன்மையை வழங்கும்.

## பதவிகளும் பொறுப்புக்களும் கிடைக்கும் நேரம்!

**ஜோதிடக் கலாமணி சிவ்புரி சிங்காரம்**



*தடைகளை அகற்றித் தைரியமாக முடிவெடுக்கும் மகர ராசி நேயர்களே!*

துர்முகி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். மேலும் சுகலாபாதிபதியான செவ்வாயும் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அஷ்டமத்தில் குருவோடு ராகு சஞ்சரிக்கிறார். எனவே, ஆதாயம் கிடைத்தாலும் அடுத்த நிமிடமே செலவாகிவிடும். இரண்டில் கேது, அஷ்டமத்தில் ரா்கு இருக்கும் பொழுது சுபவிரயங்கள் அதிகம் செய்வது நல்லது. குறிப்பாக வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப்பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துங்கள. குழந்தைகளின் கல்விக்காக செலவிடுவதும், அவர்களின் கல்யாணத்திற்காக செலவிடுவதும் நல்லது. திருமணச் சீர் வரிசை பொருட்களையும், ஆபரணங்களையும் வாங்கலாம். உத்தியோக ஸ்தர்களுக்கு இனம்புரியாத கவலை மேலோங்கும். மேலதிகாரிகள் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கொடுக்க மாட்டார்கள். திடீர் இடமாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் ஏற்படலாம். ஒரு சிலருக்கு இலாகா மாற்றங்கள் வந்து சேரலாம். வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்வது தான் நல்லது. பொதுநலத்தில் இருப்பவர்கள், கேட்ட பதவிகள் கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்படுவர். அதன் காரணமாக பொதுநல வாழ்க்கையில் இருந்து விலகலாமா? என்று கூடச் சிந்திப்பீர்கள். அஷ்டமத்து குரு வக்ர நிவர்த்தியாகிவிட்டார். வலிமை அடைந்த குருபகவானின் பார்வை 2,4,12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். குடியிருக்கும் வீட்டை வாங்க நினைப்பவர்கள், அதற்கான முயற்சியில் ஈடுபடுவர். அஞ்சல் வழிச் செய்திகள் அனுகூலம் தரும். தாய்வழி ஆதரவு உண்டு. பங்காளிப் பகை மாறும். பழைய வாகனம் பழுதாகிச் செலவு ஏற்படுகிறதே என்று கவலைகொள்வீர்கள். அதன் விளைவாக புதிய வாகனங்கள் வாங்கும் முற்சியிலும் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் அங்காரகனையும், சனியையும் அதற்குரிய நாட்களில் வழிபடுவது நல்லது,

**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**

ஜூன் 19ஆம் திகதி செவ்வாய வக்ர இயக்கத்தில் துலாம் ராசியில் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக தொழில் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த காரியம் நல்ல விதமாக அமையும். பத்திரப் பதிவில் இருந்த தடை அகலும். பூமி வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு ஏற்படும். ஜூன் 28ஆம் திகதி செவ்வாய் வக்ர நிவர்த்தியாகின்றார். இதன் விளைவாக விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். கடல் தாண்டும் முயற்சியில் தடை ஏற்படலாம். சொத்துக்களை விற்க முன்வருவீர்கள். ஜூலை முதலாம் திகதி மீண்டும் விருச்சிகத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். எனவே




இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். பழைய பகை மறந்து பணிபுரிய முன்வருவர். ஆரோக்கியத் தொல்லை அகலும்.

**புதனின் பெயர்ச்சிக் காலம்!**

ஜூன் 20ஆம் திகதி மிதுனத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். பிறகு ஜூலை மாதம் 6ஆம் திகதி கடகத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 6இல் புதன் சஞ்சரிக்கும் பொழுது, மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு உண்டு. சேமிப்பு உயரும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் குறைகளைத் தீர்க்க முன்வருவர். பற்றாக் குறை அகலும்.

**சுக்ரப் பெயர்ச்சி காலம்!**

ஜூன் 8ஆம் திகதி கடக ராசிக்குச் சுக்ரன் செல்கின்றார். 5,10இற்கு அதிபதி சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம்மேலோங்கும். புதிய பணியாளர்கள் வந்திணைவர். வழக்குகள் சாதகமாகும். உறவினர் பகை மாறும். பூர்வீக சொத்துக் களில் இருந்த வில்லங்கங்க்ள் அகன்று சுமூகமாக முடியும்.

இம்மாதம் திருமால் வழிபாடு திருப்தியை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

தனாதிபதி வக்ர இயக்கத்தில் இருப்பதால், இந்த மாதம் பற்றாக்குறை அதிகரிக்கும. கொடுத்த கடனை வாங்க முடியவில்லையே, வாங்கிய கடனைக் கொடுக்க முடியவில்லையே என்று அங்கலாய்த்துக் கொள்வீர்கள். புத, சுக்ர பரிவர்த்தனையால் பிள்ளைகளின் முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். உதிரி வருமானங்கள் வந்து சேரும். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துச் சென்றால்தான் அன்னியோன்யம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். அஷ்டமத்து குரு மாறும் வரை அமைதியையும், பொறுமையையும் கடைப்பிடிப்பது நல்லது. ஆனித் திருமஞ்சனத்தன்று நடராஜரை வழிபடுவதன் மூலம் நன்மைகளை வரவழைத்துக் கொள்ள இயலும்

## சுப விரயங்கள் அதிகரிக்கும் நேரம்!

(தொடரும்)

# சாலாவ வெடிவிபத்துக்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை

## பாதுகாப்புச் செயலர் தகவல்

(கொழும்பு)

**சாலாவிலுள்ள இலங்கை இராணுவ ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறிய சம்பவத்தில், தீவிரவாத தொடர்பு அல்லது சதி ஏதும் இருந்ததாக விசாரணையில் கண்டறியப்படவில்லை என்றும், எனினும், இத்தகைய வாய்ப்புகளை நிராகரிப்பதற்கில்லை என்றும் பாதுகாப்புச் செயலர் கருணா சேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**



கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்..

"சாலாவ வெடிவிபத்து தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. இந்தச் சம்பவத்துக்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை.

எனினும், விடுதலைப்புலிகள் அல்லது, ஐ.எஸ்.தீவிரவாத தொடர்புகள் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றதா? என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்படும். நாசவேலைகள் இடம்பெற்றதா? என்றும் விசாரிக்கப்படும்.

இந்த விபத்து சதிவேலையால் அல்லது வேறு காரணங்களால் ஏற்பட்டிருக்கலாம். எதையும் இப்போது உறுதிசெய்ய முடியாது. ஆனால் நாம் திறந்த மனோநிலையில் இருக்கிறோம்.

சதிவேலை என்பதற்கான எந்த தகவலோ ஆதாரமோ கிடைக்கவில்லை. அதுபற்றிய செய்திகள் அனைத்தும் வதந்தியே.

இந்த ஆயுதக் கிடங்கில் விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வெடிபொருட்கள் வைக்கப்பட்டிருக்கவில்லை. அவை அனைத்தும் இராணுவத்தினரின் வெடிபொருட்கள்தான்.

இந்த விபத்தில் அழிந்து போன வெடிபொருட்களின் பெறுமதி தொடர்பான அறிக்கை இன்னமும் கிடைக்கவில்லை.

ஆயுதக்கிடங்கில் இருந்த வெடிபொருட்கள் காலாவதியானவையா? மீள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தவையா? என்பது பற்றிய தகவல் எனக்கு இன்னமும் கிடைக்கவில்லை. அதனை இராணுவத்தளபதியிடம் தான் பெற வேண்டும். பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்த விபரங்களை அவர்கள் ஊடகங்களுக்கு வழங்காமல் விடக் கூடும்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளுக்கு வெளிநாட்டு நிபுணர்களின் உதவியை இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை.

எனக்குத் தெரிந்த வகையில் சாலாவ முகாமில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 50 வீதமான வெடிபொருட்கள் இன்னொரு இடத்துக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் தான் வெடிப்பு நிகழ்ந்திருக்கிறது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# கொழும்பு துறைமுகத்தில் அவுஸ்திரேலிய போர்க்கப்பல்

(கொழும்பு)



அவுஸ்திரேலியக் கடற்படையின் எச்.எம்.ஏ.எஸ். பேர்த் என்ற ஏவுகணைப் போர்க்கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் அவுஸ்திரேலியப் போர்க் கப்பலுக்கு இலங்கைக் கடற் படையினரால் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

மத்திய கிழக்கிற்கான பயணத்தை மேற்கொண்டுள்ள இந்தப் போர்க்கப்பலில் 192 மாலுமிகள் உள்ளனர்.

எதிர்வரும் 23ஆம் திகதி வரை இந்தப் போர்க்கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் தரித்து நிற்கும் போது, அவுஸ்திரேலியப் போர்க்கப்பலின் மாலுமிகள், இலங்கை கடற்படையினருடனான உறவுகளை வலுப்படுத்தும் பல்வேறு பயிற்சிகள் மற்றும் நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளனர்.

கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு விடயத்தில் இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் நெருக்கமான உறவுகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# சிறைகளில் பகிடிவதை இல்லாதொழிக்கப்படும்

சிறைச்சாலையில் பகிடிவதை இல்லாதொழிக்கப்படும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிசான் தனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை யொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைச்சாலைகளில் எதிர்வரும் காலங்களில் பகிடிவதை முற்று முழுதாக இல்லாதொழிக்கப்படும்.

புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பகிடிவதை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த பகிடிவதை சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்படும்.

புதிய சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறு பகிடிவதை வழங்க அனுமதியளிக்கப்படாது.

பகிடி வதைகளில் ஈடுபடும் நபர்கள் தண்டிக்கப்படுவர். இது தொடர்பில் முன் கூட்டியே விசாரணை நடத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பல்கலைக் கழகங்களில் பாரிய சிக்கல் நிலையை ஏற்படுத்தியிருந்த பகிடிவதைச் சம்பவங்கள் சிறைச்சாலைகளிலும் இடம் பெறுவது ஏற்றுக் கொள்ள முடியாதவொன்று எனவும் இதனை முற்றாகத் தடை செய்தல் வேண்டுமெனவும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5)

# மீண்டும் தேர்தலில் போட்டியிடேன்

## நிமால் அறிவிப்பு

எதிர்வரும் காலங்களில் நடைபெறும் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லை என சிவில் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளிவைத்து விட்டு தனது சட்டத்தரணி தொழிலையே செய்வதற்கு முடிவு எடுத்துள்ளதாகவும் அமைச்சர் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாக சிங்கள இணையம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், இந்த விடயம் தொடர்பில் தனக்கு மிகவும் நெருக்கமானவர்களிடம் அமைச்சர் தெரிவித்திருப்பதாகவும தெரியவருகிறது. (இ-10)

# குளவி கொட்டியதில் 3 பொலிஸார் பாதிப்பு

(கொழும்பு)

உடற்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் மூவர் குளவி கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொகவந்தலாவ, கெம்பியன் பாதையில் உடற்பயிற்சியில் ஈடுபட்ட பொகவந்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் இரண்டு பொலிஸாருமே இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

நேற்று முன்தினம் 8.30 மண்ணியள விலேயே, குளவி கலைந்து இவ்வாறு தாக்கியுள்ளது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## உணர்ச்சி வழியும் அறிவு வழியும்

உணர்ச்சி வழியில் செல்பவர்களுக்கு வாழ்க்கை என்பது துன்ப நாடகம். அறிவு வழியில் செல்பவர்களுக்கு அது இன்ப நாடகம்.

ஒரு கஜவனை நாமே உதைப்பது என்பது உணர்ச்சி வழி. அவனைப் பொலிஸில் பிடித்துக் கொடுப்பது என்பது அறிவு வழி.

வன்முறை மூலமாக நமக்கு ஆக வேண்டியதை சாதித்துக் கொள்வது என்பது உணர்ச்சி வழி. வழக்குத் தொடுத்து அதன் மூலம் சாதித்துக் கொள்வது என்பது அறிவு வழி.

சிறு சிறு உணர்ச்சிகளுக்கு நாம் வழுவேற்றினால் அவை நமக்கு எதிரான பலன்களை தந்து விட்டுத்தான் ஓயும். உணர்ச்சிகள் அறிவை மழுங்கடிக்கும் ஆற்றல் உள்ளவை.

கோபம் எல்லோருக்கும்தான் உண்டாகின்றது. அதை அவர்கள் எப்படி வெளிப்படுத்துகிறார்கள். அல்லது எதற்காக வெளிப்படுத்துகிறார்கள் என்பது அவரவர் மனப்பக்குவத்தை (Mental Maturity) பொறுத்த விடயம்.

ஒரு தவறு நடந்து விட்டது. அதன் காரணமாக கோபம் எழுகின்றது என்று வைத்துக் கொள் வோம். மனப்பக்குவம் அற்றவர் அறிவுக்கு வேலையைத் தராமல் ஆட்டம் போடுவார்; அடிப் பார்; திட்டுவார். மனிதத்தனம் என்பதையே மற நந்து விட்டு நடந்து கொள்வார். இது உணர்ச்சி வழி.

மற்றொருவரோ ஏன் இந்தத் தவறு நடந்தது. இதற்கு யார் பொறுப்பு? நாம் எப்படி இந்தத் தவறு நிகழ்வதற்கு காரணமாக இருந்து விட்டோம்? தவறு செய்வது என்பது மனித இயற்கை அல்லவா? இதை நாம் ஏன் மன்னிக்கவோ, மறக்கவோ? கூடாது; என்றெல்லாம் ஒரு கணம் சிந்திப்பது இது அறிவு வழி.

நம் நண்பனின் வளர்ச்சியைக் கண்டு நாம் பொறாமைப்படுகிறோம் என்றால் அது உணர்ச்சி வழி.

நம் நண்பன் வளர்வதால் 'சொல்லிக் கொள்ளவே பெருமையாகவே இருக்குமே! இனி நம்மை அவன் பிடுங்க மாட்டானே! நாம் அவனிடம் சில உதவிகளைப் பெறலாமே! என்று மகிழ்ச்சி கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல அவனி டத்தில் நம்மைக் காட்டிலும் ஒரு திறமை இருக் கிறது. அதை மற்றவர்கள் கண்டுகொள்ளக் கூடிய அதிர்ஷ்டமும் அவனுக்கு இருக்கிறது என்பதை உணர வேண்டும். அவனது முன் னேற்றம் திருட்டுத்தனத்தை அத்திபாரமாக கொண்டிருந்தால் அப்படி ஒரு முன்னேற்றம் நமக்குத் தேவையேயில்லை என எண்ண வேண்டும். இது அறிவு.

கோபம், பொறாமை என்றல்ல, மனிதனை ஆட்டிப்படைக்கும் ஒவ்வொரு உணர்ச்சிகளையும் அறிவோடு மோதுவதற்கு விட வேண்டும்.

நல்ல கல்வி அறிவு, இருந்து நல்ல சூழ்நிலையில் நாம் வளர்க்கப்பட்டிருந்தால், நல்ல பண்புகள் நம் இரத்தத்தில் ஊறியிருந்தால் – அந்தப் போராட்டத்தில் அறிவே வெல்லும், உணர்ச்சிகள் விலாசம் தெரியாமல் ஓடி ஒளியும். அப்படி இல்லாவிட்டாலோ விளைவு தலைகீழாய் இருக்கும் என்பதை சொல்ல வேண்டியதில்லை. அறிவு வழி என்பது நமக்கு பாதுகாப்பானது. அது தோல்வி காண்பது என்பது மிக மிக அபூர்வம். அது மற்றவர்களின் குற்றச்சாட்டுக்கு உள்ளா காதது. மாறாக எல்லோராலும் விரும்பப்படுவது.

**லேனா தமிழ்வாணன்**

# இலங்கையில் ராணுவச் சதி அமெரிக்காவுக்குத் தெரியும்



போர்க் குற்ற விசாரணையை மேற்கொள்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டால் இலங்கையில் இராணுவச் சதி ஒன்று ஏற்படுவதற்கு வழிவகுக்கும் என்பது அமெரிக்காவிற்கு நன்கு தெரியும். இந்தியாவும் இதையொத்த எண்ணப்பாட்டையே கொண்டுள்ளது.

இவ்வாறு சிலோன் ருடே ஆங்கில நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிடுள்ளார். இதனைப புதினப் பலகைக்காக மொழியாக்கம செய்துள்ளவர் நித்தியபாரதி.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது தொடர்பாக, இலங்கைக்கான சீனத்தூதுவர் ஜி ஷியான்லியாங் இலங்கை அரசாங்கத்தற்கு ஆலோசனை வழுங்கியுள்ளார்.

இலங்கையின் உள் விவகாரங்களில் வெளிச்சக்திகள் தலையீடு செய்வதை சீனா எதிர்ப்பதாக தூதுவர் ஜி ஷியான்லியாங் தெரிவித்துள்ளார்.

சீனாவானது ஐ.நா மனித உரிமைகள் பேரவை யில் இலங்கைக்கு ஆதரவாக இருந்த நிலையில், இதன் பரிந்துரைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது தொடர்பாக இலங்கைக்கு ஆலோசனை வழங்கியுள்ளதுடன், பிறநாடுகளின் உள் விவகாரங்களில் மற்றைய நாடுகள் தலையீடு செய்வதை சீனா எதிர்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட மீளிணக்கப் பொறிமுறையானது புதிய பிரச்சினைகளை உருவாக்காதவாறு பார்த்துக் கொள்ளுமாறு இலங்கை தலைவர்களிடம் சீனத் தூதுவர் அறிவுறுத்தியுள்ளார். நாட்டில் அபிவிருத்தி மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் நல்லிணக்கம் என்பது சாத்தியமற்ற ஒன்று என இவர் தெரிவித்துள்ளார்.

அதாவது நாட்டில் சமத்துவமான அபிவிருத்தி முன்னெடுக்கப்படும் போது மாத்திரமே சமூக, அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணப்படும் எனவும் இதன் பின்னரே மீளிணக்கம் என்பது வெற்றியடையும் என சீனத் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூலோபாயக் கற்கைகளுக்கான பிராந்திய மையத்தில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் உரையாற்றும்போதே சீனத் தூதுவர் இலங்கைக்குத் தனது ஆலோசனையைத் தெரிவித்துள்ளார். இந்த ஆலோசனையைத் தூதுவர் தெரிவிப்பதற்கு முன்னர், இந்தியாவைச் சென்றடைந்த இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளை இலங்கை எவ்வாறு அமுல்படுத்துவது என்பது தொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

இப்பரிந்துரைகளை அமுலபடுத்துவதில் வெளிநாட்டு நந்திபதிகள் பங்கேற்கக் கூடாது என்ற கருத்தை மோடி தெரிவித்ததாகவும் ஊடகங்கள் சுட்டிக்காட்டின.

மைத்திரி இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு இலங்கைக்குத் திரும்புவற்கு முன்னர், பிரதமர் ரணில் விக்கிரம சிங்க இராணுவத் தளபதிகளுடன் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். இந்தச் சந்திப்பில் வெளிநாட்டு நீதிபதிகள் போர்க்குற்ற விசாரணையில் பங்குபெறுவதற்கு அனுமதிப்படமாட்டார்கள் எனவும் இராணுவத் தளபதி களிடம் பிரதமர் ரணில் தெரிவித்திருந்தார்.

இதேவேளையில், இலங்கை அரசாங்கமானது எவ்வாறு செயற்பட வேண்டும் எனவும் அதேவேளையில் இலங்கை மீதான சீனத் திட்டங்களுக்காக இந்திய-சீன கூட்டு முதலீட்டுப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேணடியதன் தேவையையும் சீனத தூதுவர் எடுத்துரைத்திருந்தார். இவரது இந்தக் கருத்தானது இலங்கையில் இடம்பெற்ற போர் மீறல்கள் தொடர்பான மேற்குலக நாடுகளின் தலையீட்டைக் குறைப்பதற்கான சீனாவின் மூலோபாயமாக இருக்கலாம் என்கின்ற சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

இந்தியா கூட இலங்கை மீதான போர்க் குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்குபெறுவதை எதிர்த்து நிற்கின்றது என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும். மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக காலத்திலும் இந்தியா இதையொத்த அணுகுமுறையையே கைக்கொண்டது.

ரணில் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், அமெரிக்காவால் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கையும் இணை அனுசரணை வழங்கியிருந்தது. இந்நிலையில் இத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்பதை இந்தியா விரும்பவில்லை என்பது இங்கு தெளிவாகிறது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவால் லண்டனில் வைத்து உலகத் தமிழர் பேரவையின் தலைவர்களுடனும், வெள்ளை மாளிகையில் சமந்தா பவருடனும் இணைந்து பரிந்துரை கள் தயாரிக்கப்பட்ட அதே வேளையில், இந்தியாவிட மிருந்து கிடைக்கப் பெற்ற அறிவுரையை அடிப்படையாகக் கொண்டு இலங்கை க்கான அமெரிக்கத் தூதுவர் ஊடாக ரணில் இப் பரிந்துரைகளில் சில திருத்தங் களை மேற்கொண்டதாக நம்பகமான வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

வெளிநாட்டு நீதிபதிகள் தொடர்பாக இந்தியாவால் முன்வைக்கப்பட்ட ஆலோசனையை அமெரிக்கா செவிமடுப்பதற்கான தயார்ப்படுத்தலில் ஈடுபட்டிருந்த போதிலும் இது தொடர்பில் சமந்தா பவர் மிகவும் இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாக அமெரிக்க மனித உரிமைகள் நிறுவனம் ஒன்றின் மூலம் தகவல் வெளியில் கசிந்துள்ளது.

ஒக்லாண்ட் நிறுவகத்தின் உள்ளக இடப்பெயர்வுக் கண்காணிப்பு மையத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் பின்வரும் சில விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன:

**மேற்குலக சார்பு நிலை:**

முன்னைய அரசாங்கம் போலல்லாது இலங்கையின் தற்போதைய அரசாங்கமானது மேற்குலக சார்புக் கோட்பாட்டைக கைக்கொண்டு வருகின்றது. இந்நிலையில் அமெரிக்காவானது இலங்கையின் தற்போதைய அர சாங்கத்துடன் வர்த்தக உறவைப் பலப்படுத்துவது தொடர்பில் அதிக அக்கறை காண் பித்து வருகின்றமை வெளிப்படை. பெப்ரவரி 2016இல், அமெரிக்க இரா ஜாங்கச் செயலர் ஜோன் கெரியின் தலைமையில் 'அமெரிக்க-இலங்கை கூட்டுக் கலந்துரையாடல்' இடம்பெற்றது. இதில் மகிந்த ராஜபக்ஷவிற்குப் பின்னான இலங்கைக்கும் ஒபாமா நிர்வாகத்திற்கும் இடையிலான உறவானது 'உண்மையான புத்துயிர்ப்பு' என இலங்கை வெளிவிவகார அமைச்சர் கூறிய தாக ஒக்லண்ட் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**'இலங்கையின் மிகப்பாரிய ஏற்றுமதிச் சந்தையாகத் திகழும் அமெரிக்காவானது இலங்கை மீது ஐ.நா தீர்மானத்தை அமுல்படுத்துமாறு அழுத்தம் கொடுக்க முடியும்.**

**அதாவது அமெரிக்காவானது அனைத்துலக போர்க்குற்ற விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும் என அழுத்தங்கொடுப்பதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ள போதிலும் அமெரிக்கா இதனைச் செய்யத் தவறியுள்ளது' என ஒக்லண்ட் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

அமெரிக்காவானது அனைத்துலக மனித உரிமைகள் நிறுவனங்களால் முன்வைக்கப்பட்டுள்ள விமர்சனங்களை வென்றெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் அதேவேளையில், மைத்திரி-ரணில் அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சியிலும் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. அனைததுலக நீதிபதிகளின் ஊடாக இலங்கை மீதான போர்க் குற்ற விசாரணை முன்னெடுக்கப்பட்டால், மைத்திரி-ரணில் அரசாங்கத்திற்கு எதிராக இலங்கை இராணுவம் பாரியதொரு எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என் அமெரிக்கா அச்சம் கொள்கிறது.

ஊடகவியலாளர்கள் கொலலப்பட்டமை தொடர்பில் இலங்கை இராணுவப் புலனாய்வாளர்கள் சிலர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, இந்த விசாரணைக்கான ஒத்துழைப்பை இலங்கை இராணுவத்தினர் வழங்கவில்லை. யாழ்ப்பாணத்தில மங்கள சமரவீர மற்றும் மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேக்கு இடையிலான வாக்கு வாதம், கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் இலங்கை கடற்படை அதிகாரி ஆகியோருக்கு இடையிலான மோதல் ஆகிய இராணுவம் சம்பந்தப்பட்ட வழககுகளை விசாரணை செயவதற்கு இலங்கை இராணுவத்தினர் ஒத்துழைப்பு வழங்கவில்லை. இதுபோன்றே போர்க்குற்ற விசாரணையின் போதும் இலங்கை அரசாங்கம் பாரியதொரு நெருக்கடிக்கு ஆளாக நேரிடும்.

கிழக்கு மாகாண முதலமைச்சர், இலங்கை இராணுவ முகாம்களுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்ட சம்பவமானது இராணுவத்தின் அதிகாரத்துவத்தையும் இலங்கை அரசாங்கத்தின் பலவீனத்தையுமே எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறான சூழலில், வெளிநாட்டு நீதிபதி களின் பங்களிப்புடன் போர்க குற்ற விசாரணையை மேற்கொள்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டால் இலங்கையில் இராணுவச் சதி ஒன்று ஏற்படுவதற்கு வழிவகுக்கும் என்பது அமெரிக்காவிற்கு நன்கு தெரியும்.

**இந்தியாவும் இதையொத்த எண்ணப்பாடடையே கொண்டுள்ளது. இந்தியா தனது எண்ணத்தை உறுதிப்படுத்துவதற்காக சீனாவையும் பயன்படுத்துகிறது. எனினும், வெள்ளை மாளிகையைச் சேர்ந்த சமந்தா பவரின் அதிகாரத்தையும் குறைத்து எடைபோட முடியாது. ஒபாமாவின் ஆட்சிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் போர்க் குற்றங்கள் தொடர்பான இலங்கை விவகாரம் வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே சமந்தா பவரின் கருத்தாகும்.**

எது எவ்வாறிருப்பினும், இலங்கையானது வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பை எதிர்க்க வேண்டும் என இந்தியா, இலங்கைகு ஆலோசனை வழங்கியதா அல்லது இல்லையா என்பது எமக்குத் தெரியாது.

## 06.2016 21 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1621 - பிராக் நகரில் 27 உயர்குடி செக் இனத்தவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
- 1734 - கியூபெக்கில் மொண்ட்றியால் நகரில் மரீ-ஜோசெப் அஞ்சலிக் என்ற கறுப்பின அடிமைப்பெண், அவளது எசமானின் வீட்டைத் தீயிட்டுக் கொழுத்தியமைக்காகவும், அதனால் நகரின் பெரும் பகுதி அழிந்தமைக்காகவும் குற்றம் சாட்டப்பட்டு மக்கள் மத்தியில் சித்திரவதை செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டாள்.
- 1788 - நியூ ஹாம்சயர் ஐக்கிய அமெரிக்காவின் 9ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1798 - ஐரியத் தீவிரவாதிகளின் எழுச்சி பிரித்தானியாவினால் முறியடிக்கப்பட்டது.
- 1898 - குவாம் தீவை ஐக்கிய அமெரிக்கா ஸ்பெயினிடம் இருந்து கைப்பற்றியது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரான்ஸ் ஜெர்மனியிடம் வீழ்ந்தது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: லிபியாவின் டொப்ரூக் நகரம் இத்தாலி, மற்றும் ஜெர்மனியப் படைகளிடம் வீழ்ந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஒகினவா சண்டை முடிவுற்றது.
- 1970 - பிரேசில் இத்தாலியை 4-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை வென்றது.
- 1990 - மன்னாரில் கொண்டச்சி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.
- 1999 - அப்பிள் கணினி நிறுவனம் தனது முதல் iBook இனை வெளியிட்டது.
- 2002 - உலக சுகாதார நிறுவனம் ஐரோப்பாவை போலியோ நோய் அற்ற கண்டமாக அறிவித்தது.
- 2004 - விண்கப்பல் ஒன்று (Space Shipone) தனது முதலாவது தனியாரினால் ஆதரவளிக்கப்பட்ட விண்பயணத்தை முடித்துக்கொண்டது.
- 2006 - புளூட்டோவின் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட துணைக்கோள்கள் நிக்ஸ் மற்றும் ஹைட்ரா எனப் பெயரிடப்பட்டது.

**பிறப்புகள்**

- 1905 - ஜான் பவுல் சாட்டர், பிரெஞ்சு எழுத்தாளர், தத்துவவாதி, நோபல் பரிசு பெற்றவர். (இ. 1980)
- 1947 - ஷிரின் எபாடி, நோபல் பரிசு பெற்ற ஈரானியர்.
- 1953 - பெனாசிர் பூட்டோ, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர்.

**இறப்புகள**

- 1970 - சுகர்னோ, இந்தோனீசியாவின் ஜனாதிபதி. (பி. 1901)
- 2001 - கே. வி. மகாதேவன், இசையமைப்பாளர். (பி. 1918)

**சிறப்பு நாள**

- உலக இசை தினம்
- கனடா - தேசிய பழங்குடிகள் நாள்
- கிறீன்லாந்து - தேசிய நாள்
- பன்னாட்டு யோகா நாள்

# ஆரம்ப வகுப்பு மாணவரின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர் பங்களிப்பின் முக்கியத்துவம்



இன்றைய காலகட்டத்தின் தேவை,எதிர்காலத்தில் பண்பான சமுதாயம் போட்டிகளையும் சவால்களையும் எதிர்கொள்ளத் தேவையான அறிவுப்பெருக்கம் மாற்றமுறும் உலகில் தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் வாழவைக்கக்கூடிய மனப்பாங்கு சர்வதேசத்திற்கும் இயை பாக்கக்கூடிய திறன். இவற்றுக்கெல்லாம் பொருத்தமான தரமான அடிப்படைகளை வழங்க வேண்டிய பொறுப்பு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பாடசாலைக் கல்வியின் தொடக்க நிலையாகக் கருதப்படும் ஆரம்பக்கல்வி விருட்சம் ஒன்றின் வித்தாகக் கருதப்படுகின்றது. இவ்வித்தின் வளர்ச்சியானது பல காரணிகளில் தங்கியிருக்கின்றது. அதேபோன்று ஆரம்ப வகுப்பு மாணவரின் கல்வி வளர்ச்சிக்கும் பெற்றோரின் பங்கு இன்றியமையாததாகின்றது. அந்தவகையில் பெற்றோரின் அதீத அக்கறை சிறார்களின்கல்விக்குஉற்றதுணை என்று குறிப்பிடுதல் பொருத்தமானது.

அந்தவகையில் பிள்ளைகளின் கற்றலுக்கு நன்மை செய்யக்கூடிய வகையில் குடும்ப நடத்தைகள், வழக்க முறைகள் அமைய வேண்டும். அதற்குப் பிள்ளை–பெற்றோர் தொடர்பு அன்பை அடிக்கடி வெளிப்படுத்துவதாய் அமைதல் வேண்டும். நாளாந்தம் பாடசாலைகளில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றி உரையாடுதல், நூலகங் கள், கண்காட்சிகள், மிருகக் காட்சிச் சாலைகள், கலாசாரச் செயற்பாடுகள்,வரலாற்று இடங்கள் என்பவற்றுக்கு குடும்பத்துடன் சென்று வருதல் என்பன பிள்ளைகளுக்கு மகிழ்ச்சி,உளரீதியான பாதுகாப்புணர்வு, பெற்றோருடனான பிரிக்கமுடியாத பிணைப்பினை ஏற்படுத்தவல்லது. வீட்டில் புத்தகங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றி உரையாடுதல்,புதிய சொற்களைப் பயன்படுத்துதலை ஊக்குவித்தல், சொற்களஞ்சியத்தை விரிவாக்குதல் என்பன கற்றல் இடம்பெறுவதை உணராமல் கற்றல் நடைபெற உதவுகின்றது. மேலும் திடமான கற்கும் நேரத்தை ஒழுங்குபடுத்தி வைத்திருத்தல் நன்மை தரும். அதாவது உணவு உண்ணுதல்,நித்திரை செய்தல்,விளையாடுதல்,வேலை செய்தல்,கற்கும் நேரம் என்பவற்றை உள்ளடக்கிய வழக்க முறைகள் தினமும் பின்பற்றப்படுதல் வேண்டும். இவை இயந்திரத்தன்மையுடையதாய் அல்லாமல் இயல்பாகப் பின்பற்றப்படுதல் வேண்டும்.சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பிள்ளைகளுடன் கதைத்தல்,அவர்கள் கதை கூறும் போது பொறுமையாகக் கேட்டல், திருத்தமான மொழிப் பிரயோகத்தினை மேற்கொள்ளுதல், பிள்ளைகளுடன் சேர்ந்து வாசித்தல், அவர்கள் வாசிக்கும்போது செவிமடுத்தல், வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்லுதல், வினாக்களுக்கு விடை கூறுதல், பெரிய எழுத்துக்களை உடைய விளம்பரப் பலகைகள், பத்திரிகைத் தலைப்புகள்,கதை மலர்களை வாசித்துக்காட்டுதலும் வாசிப்பதற்கு உதவுதல் என்பன வீட்டில் இடம்பெறும் கற்றல் சந்தர்ப்பங்கள் ஆகும். வீட் டில் பெறப்படும் மொழித்திறன் பாடசாலைக்கல்விக்கு வளமாக அமையும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை விட பாடசாலை வேலைகளுக்கு முன்னுரிமை வழங்குதல், நேரம் தவறாமை பற்றிய கருத்துக்கள், பெற்றோரின் மேற்பார்வை என்பன சிறு வயதிலிருந்தே கற்றல் செயற்பாடுகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத் தினை உண ர்ந்து கொள்வதற்கு வழி செய்யும். இத்தகைய பழக்கங்கள், திறன்களைக் கொண்டு வரும் பிள்ளை ஆசிரியரின் கற்பித்தலில் பூரணமான நன்மை யைப்பெற முடியும். பயனுறுதியான கற்பித்தலை வழங் குவதில் ஆசிரியர்களும் முனைப்புடன் ஈடுபடுவர்.

அடுத்து குடும்பத்தின் எதிர்பார்ப்பும் கண்காணிப்பும் பிள்ளையின் முன்னேற்றத்திற்கு அவசியமாகின்றது. செம்மையாய் பேச வேண்டும். புதிய சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். மேலும் குறைந்தபட்சமாக குறிக்கப்பட்ட நேரம் வாசித்தல் அல்லது கற்றல் இடம் பெற வேண்டும் என்பது பெற்றோரின் எதிர்பார்ப்பு. ஆனால் இந்த நேரத்தினை தொலைக்காட்சி விழுங்கிவிடுவது வழமையாகிவிட்டது. எவ்வாறாயினும் ஒரு பிள்ளை தொண்ணூறு நிமிடங்களுக்கு மேல் தொலைக்காட்சி பார்ப்பதில் கழிக்குமாயின் அவரது கற்றல் செயற்பாடுகள் பாதிப்படையும் எனக்கூறப்படுகின்றது.

மேலும் ஆசிரியர்கள் வழங்கிய மேலதிக செயற்பாடுகள்,கட்டாயமாக செய்து வர வேண்டும் எனக்கூறப்படும் வீட்டுவேலைகள், பிள்ளையின் கற்றலுக்கு பயன்மிக்கவை.பாடசாலை நேரத்திற்கு அப்பால் முறைசார் கல்வியை வீட்டில் கற்கும் விதமாக வீட்டு வேலை அமைகின்றது.இது ஆற்றல் குறைந்த மாணவர்களும் நல்ல புள்ளிகளைப் பெற வழிவகுக்கின்றது. ஆரம்ப வகுப்புக்களிலேயே வீட்டில் கற்கும் பழக்கம், சுயமாகக் கற்பதற்கு ஆயத்தமாதல், என்ன கற்கிறார்கள் என்பதைப் பெற்றோர் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு, மாணவர் முன்னேற்றம் பற்றி ஆசிரியர் அறிந்து கொள்ளும் வாய்ப்பும் இதன்மூலம் கிடைக்கின்றது.வீட்டுவேலை கொடுக்கப்படும் அளவு, அதனைத்திருத்தம் செய்து மீள வழங்கும் வேகத்திலேயே வீட்டு வேலையின் பயனுறுதி தங்கியுள்ளது.கிரமமாகக் கொடுத்தல்,வகுப்பில்செய்யும்செயற்பாடுகளுடன் தொடர்பு பட்டிருத்தல்,கற்ற விடயங்களில் தேர்ச்சி பெறுவதற்காக வழங்குதல் என்பவற்றால் வீட்டு வேலை பெற்றோர், மாணவரிடையே தாக்கத்தை ஏற்படுத்தும்.பிள்ளையும் பெற்றோரும் கற்றலில் தொடர்புபடுவதற்கும் பாடசாலையுடன் நெருக்கமான பிணைப்பினை ஏற்படுத்துவதற்கும் ஆசிரியரின் தரமான, கிரமமான வீட்டுவேலைஉதவிசெய்கின்றது. இதற்குஉதாரணமாக முதலாம் வகுப்பு மாணவருக்கு பத்து நிமிட வீட்டு வேலை வழங்கப்பட வேண்டும் என்றும் இது ஒவ்வொரு தரங்களுக்கும் பத்து நிமிடங்கள் வீதம் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் சில பாடசாலைகள் எதிர்பார்க்கின் றன.

இதைவிட பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையில் இடம்பெறும் இரண்டு திசைகளிலும் நடைபெறும் தொடர்பாடல்களினால் பிள்ளைகள் நன்மையடைகிறார்கள். அதாவது பெற்றோரின் எதிர்பார்ப்புக்களை ஆசிரியர்களும்ஆசிரியர்களின்எதிர்பார்ப்புக்களை பெற்றோரும் விளங்கிக்கொண்டு பிள்ளைகளின் கற்றல் பழக்கங்கள், பாடசாலை தொடர்பான பிள்ளைகளின் மனப்பாங்குகள்,கல்விசார் முன்னேற்றங்கள் என்பன பற்றி பெற்றோரும் ஆசிரியர்களும் ஒருவருடன் ஒருவர் தொடர்பைப் பேணும் போது மாணவர்கள் சிறப்பாகக்கற்கின்றனர்.தொடர்பாடல் இருதிசைகளிலும்பாயும் போதுதான் பாடசாலை –இல்லத் தொடர் பாடல் பயனுறுதி மிக்கதாய் இருக்கும்.

அத்துடன் பாடசாலையில் கற்கும் பிள்ளைகளின குடும்பங்கள் ஒன்றுடனொன்று தொடர்புகொள்ளும்போது சமூகநலன் அதிகரிக்கின்றது. பிள்ளைகள்நலனில்ஆர்வங்கொண்டோர் தொகை அதிகரிக்கின்றது.பெற்றோர் பிள்ளைகளின் தரம்,நியமம் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். இதன் மூலம் பிள்ளைகளின் மீது அக்கறையான சமுதாயம் உருவாக்கம் பெறுவதற்கு பாடசாலை உதவுகிறது எனலாம்.

எனவே ஆரம்ப வகுப்பு மட்டுமன்றி தொடர்ந்தும் எம் பிள்ளைகள் மீதான பெற்றோருடைய அவதானிப்பு, கண்காணிப்பு, எதிர்பார்ப்பு என்பன பாடசாலையுடன் தொடர்புற்று பேணப்படும் போது மாணவர் சமுதாய வளமும் நலமும் பெறும் என்பது வெளிப்படையாகும்.

றஜனி சிவப்பிரகாசம்
ஆசிரியை

## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு தெப்போற்சவம்



### மனமிரங்கு தாயே

சங்கடம் தீர்த்திடும் சர்வலோக நாயகியே!
சர்ப்பம் பூசித்த நல் நாகபூஷணியே!
மங்களம் தந்திடும் மாதரசியே!
மகிமை கொள் நயினையே ஆள்–பவளே

பொ.புனிதன்–வரியப்புலம்

### ஏமைக்காப்பாய் தாயே

பொன் எழில் சூழ்திரு நயினையினை
பொற்புடை அழகுடன் ஆழ்பவளே
படகேறி உன்வாசல் வந்து துதி செய்கின்றோம்
வல்லமை தந்திடுவாய் சிவகாம சுந்தரியே

இணுவை சுகந்தி

### வினையகற்றி விடியல் செய்வாய்

தாயே என்றழைத்தால் தயங்காது அருள் புரிவாய்
அம்மா என்றழைத்தால் அருகில் வந்தருள் புரிவாய்
அலை கடல் குளிர்வீச அருகமர்ந்தாயம்மா
அடியவர்க்கருள் புரிவாய் அம்மா நயினை நாயகியே

வரணியூர்–க.பத்மகாந்தன்

### கேட்ட வரம் தந்திடுவீர் நாகதாயே

அலைகடல் நடுவினிலே அமர்ந்த தாயே!
மக்கள் துன்பம், எல்லாம் தீர்த்திடுவாய் நாகதாயே!
பாம்பினிலே அமர்ந்திருக்கும் நாகதாயே!
கேட்ட வரம் தந்திடுவீர் நாகதாயே

செ.கண்மணி–சுதுமலை

### உன் அருள் ஆட்சி என்றும் ஓயாது தாயே

அலைகடல் ஓய்ந்தாலும் உன் அருள் ஆட்சி ஓயாதம்மா
அருமறைகள் போற்றிடும் ஆதிசக்தி நாயகியே
நீதி சக்தியாய் நின்று நினைப்பதையே தருபவளே

இணுவையூர்– செ.பவானந்தமூர்த்தி (பவான்)

### நயினைப்பதியில் உறையும் நாகபூஷணியம்மா

நயினைப்பதியில் எந்நாளும் உறைகின்ற
நர்த்தன நாயகியே எங்கள் நாகபூஷணியம்மா
எம் நெஞ்சினில் உறைபவளே நயினை நாகபூஷணியே
நாகத்தில் வருபவளே நாகபூஷணித்தாயே
நாடியே துதிக்கின்றேன் எங்கள் நாகபூஷணியம்மா

வி.ஜனார்த்தன்– மறவன்புலோ

### நாதலய நாயகி நாகபூஷணி தாயே

கேட்டிடும் வரம்தனை தந்திடும் தாயே
நயினைக்கு அரசியே நாகம்மா நீயே
புளியந்தீவிலிருந்துன் புண்ணிய சேஸ்திரத்தை
தினம் ஒருநாகம் உனை மலராலே அர்ச்சித்ததே
எழில்கொஞ்சும் எழிலரசி உன்புகழ்பாட
ஸ்வரலய சங்கீத சாஹித்யம் தந்தருள்வாய்

பு.கோபிசாந்–அனலைதீவு

### நயினை அன்னையே போற்றி

அகிலாண்ட ஈஸ்வரியே போற்றி
ஆன்றோர் வணங்கும் தாயே போற்றி
இடர்களைந்து இன்னருள் தருவாய் போற்றி
ஈனர்களை அழித்து எம்மைக்காப்பாய் போற்றி
உன்னையே என்றும் நினைந்தேன் உத்தமியே போற்றி
ஊரெல்லாம் தாயாய் விளங்கும் அம்மா போற்றி

நீர்வைத்தேவன்

# வாக்குரிமையை தவறாது பதிவு செய்து கொள்ளுங்கள்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் தியாகராசா தெரிவிப்பு

(குருமன்காடு)

வாக்குரிமை ஒவ்வொருவரினதும் உரிமை. அதைப் பயன்படுத்துவது எமது கடமை. அதனால் தவறாது வாக்குரிமையை பதிவு செய்து கொள்ளுமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வாக்குரிமை என்பது ஒவ்வொருவரினதும் உரிமை. அதை பயன்படுத்துவது எமது கடமை. அந்த வகையில், நாடளாவிய ரீதியில் வாக்காளார் பதிவு நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று அது இறுதித் தினத்தை நெருங்குகின்றது. எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் நிறைவுபெறவுள்ள நிலையில் அதனை பதிவு செய்யாதவர்கள் உடனடியாக உங்கள் பகுதி கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு அதனை பதிவு செய்து கொள்ளவும். 18 வயதினை பூர்த்தி செய்தவர்களும் புதிதாக வாக்காளராக தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

வாக்குரிமை என்பது எமது நாட்டின் பிரஜை என்ற அந்தஸ்தை தருவதுடன், வேலை வாய்ப்பு, உயர்கல்வி, தேர்தல் நடவடிக்கை என்பவற்றுக்கு அவசியமானதாகவும் உள்ளது. இதனை பதிவு செய்யாது விடுவதன் மூலம் தவறான மக்கள் பிரதிநிதிகள் சிலர் தெரிவு செய்யப்படுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுவதுடன், சில அரச நிர்வாக வேலைகளையும் இலகுவாக செய்ய முடியாத நிலை ஏற்படும்.

எனவே, வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் நிறைவு பெறவுள்ள நிலையில் அனைவரையும் தவறாது பதிவு செய்யுமாறும், பதிவு செய்வதில் ஏதாவது இடையூறுகள் இருப்பின் என்னிடம் தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

## முதியோர் இல்ல நிலைய கட்டடம் அமைக்க நிதியுதவி

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள தர்மபுரத்தில் முதியோர் பகல் பராமரிப்பு நிலையக் கட்டடம் அமைக்க வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலதன நன்கொடை நிதியிலிருந்து 16 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதியின் மூலமாக தற்போது கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தர்மபுரம் முதியோர் சங்கத்தின் நீண்ட காலக் கோரிக்கைக்கு அமைய இந்த நிதி நன்கொடை பிரதேச செயலர் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

முதியோர்களுக்கு மகிழ்வான சமூகச் சுற்றாடலை ஏற்படுத்துதல் என்ற நோக்குடன் இது போன்ற நிலையங்கள் நாடெங்கும் தற் போது அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-254)




# வீடொன்று தீயில் முற்றாக எரிந்து நாசம்



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை நீராவிப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர்பிரிவில் வீடொன்று தீயில் முற்றாக எரிந்து நாசமாகியது.

இச் சம்பவம் கடந்த 19 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி கிராமத்தில் முகமது லெப்பை ராசீம் என்பவரது வீடே தீயில் எரிந்து முற்றாக நாசமாகியுள்ளது.

சம்பவ தினமன்று வீட்டின் உரிமையாளர் வயலுக்கு சென்றிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. அவரது மனைவி வெளியில் சென்ற நிலையில் வீடு திடீரென தீப்பற்றியது.

இதனையடுத்து அயலவர்கள் ஒன்றிணைந்து தீயை அணைக்க முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை.


இதன்போது வீட்டினுள் இருந்த நெல்மூடைகள், ரொக்கப்பணம், தளபாடங்கள் , ஆவணங்கள், நகைகள் என்பன தீயில் எரிந்து நாசமாகின.

சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை குறித்த வீட்டிற்கு மின்சார இணைப்பு வழங்கப்படவில்லையென்பதுடன் தற்போது நோன்பு காலமாக இருப்பதால் அதிகாலை 4 மணியுடன் வீட்டின் சமையல் வேலைகள் முடிக்கப்படுவதும் வழங்கமாகும்.

குறித்த தீப்பரவல் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக வீட்டின் உரிமையாளரினால் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துப்பிரிவினரால் குறித்த குடும்பத்திற்கு தற்காலிக கொட்டகையொன்று வழங்கப்பட்டுள்ளது. (2-310)









மன்னார் முருங்கன்பிட்டி கிறிஸ்து அரசர் ஆலய முன்றலில் IMSESO நிறுவனத்தின் ஏற்பாட்டில் கலைவிழா அண்மையில் இடம்பெற்ற போது...(அராலி செய்தியாளர்)

# வவுனியாவில் நடைபெற்று முடிந்த சர்வதேச தந்தையர் தின நிகழ்வு



தமிழ் விருட்சம் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கம் இணைந்து நடத்திய சர்வதேச தந்தையர் தினம் நேற்று முன்தினம் வவுனியா குடியிருப்பு சிறுவர் பூங்காவில் நடைபெற்றது.

தந்தையர்கள் தமது மனைவி, பிள்ளைகளுடன் இணைந்து விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபட்டனர்.

பணிஸ் உண்ணும் போட்டி, பலூன் உடைத்தல், மூன்று கால் ஓட்டம், ஊசி நூல் கோர்த்தல், யானை நடை, சோடா குடித்தல் உட்பட பல நிகழ்வுகள் நடைபெற்று பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர்கள், அதிகாரிகள், அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள், வர்த்தகர்கள் உட்பட பலர் தந்தையர்களாக பிள்ளைகளுடன் பிள்ளைகளாக விளையாடி மகிழ்ந்தனர். நிகழ்வின் சிறப்பு அம்சமாக புளியங்குளம் இந்து கல்லூரியில் கற்கும் மாணவிக்கு வன்னி பட்டறை மூலம் துவிசக்கர வண்டியும் கலந்து கொண்ட பெற்றோர்களில் மூவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு மூன்று பெறுமதியான கையடக்க தொலைபேசிகள் வழங்கி வைக்கபட்டன. (2-250)

# முல்லைத்தீவு வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு உதவிகள் வழங்கல்



வன்னி மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்காந்தராசாவின் ஒழுங்குபடுத்தலில் கனடா தமிழ் கலாசார அமையத்தினரின் அனுசரணையுடன் அமரத்துவமடைந்த ரூபராணி சிவசுந்தரத்தின் ஞாபகார்த்தமாக முல்லைத்தீவு வலயத்திற்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கான உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வானது நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர்,

எமது மண்ணில் மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவதற்கு பொருளாதாரம் ஒரு தடையாக காணப்படுகின்றது. இவ்வாறான புலம்பெயர் உறவுகளின் உதவிகள் எமது மாணவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துகொள்ளும். தொடர்ந்தும் இவ்வாறான உதவிகள் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால், இரணைப்பாலை, கைவேலி ஆகிய பாடசாலைகளை சேர்ந்த 20 மாணவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் முல்லை. கல்வி வலய பணிப்பாளர் திருமதி முனீஸ்வரன் மற்றும் பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-281)

# வ.மாகாண சபை உறுப்பினரின் நிதியிலிருந்து 20 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

வடக்குமாகாண சபை உறுப்பினர் க.சிவநேசனின் குறித்து ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியிலிருந்து கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ்வாழ்பவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.



இதில் 10 பயனாளிகளுக்கு தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகள்,10 பயனாளிகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபா பெறுமதியான ஊர்க்கோழிகள், 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக்கூடுகள் என்பன முல்லைத்தீவு அரச கால்நடை திணைக்களத்தினூடாக வழங்கி வைக்கப்பட்ட.

இந்நிகழ்வில் முல்லைத் தீவு அரச கால்நடை வைத்திய அதிகாரி திருமதி நிவேதினி, கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்கள் ஆகியோருடன் வன்னி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் கனக தவராசாவும் கலந்து கொண்டார். (2-302)

மேலான மனிதன் எப்போதும் அறம் பற்றியே சிந்திக்கிறான். பாமர மனிதன் சுகம் பற்றியே எண்ணுகிறான்.
- கன்பூஷியஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

## நிகழும் சம்பவங்களைக் கண்டு நெஞ்சம் வெடித்துப் போகிறது

போரில் தோற்றுப்போன தமிழினம் ஒற்றுமையாக இருந்து மீண்டு எழ வேண்டிய நேரம் இது.

இருந்தும் எங்களிடம் ஒற்றுமை இல்லாமல் போனது மட்டுமன்றி, சமூக இணக்கப்பாடும் கலாசாரப் பேணுகையும் வேரறுந்து போவதுதான் மிகப்பெரிய கொடுமை.

அதிலும் குறிப்பாக பாடசாலைகளில் இடம்பெறும் சம்பவங்களை அறிந்து நெஞ்சம் வெடித்துப் போகிறது.

ஏன்தான் இப்படி நடக்கிறது என்று எண்ணும் போது எம் தமிழினத்துக்கு என்ன நடந்தாயிற்று என்று ஏங்கித் தவிப்பதில் தவறில்லை.

ஒரு காலத்தில் பண்பாட்டு விழுமியங்களின் உயர் பேணுகை கொண்ட தமிழ் மக்கள் இன்று கலாசாரச் சீரழிவுகளில் கந்தறுந்து போகின்ற பரிதாபம் ஏற்பட என்ன காரணம் என்று ஆராய்வது கட்டாயமானதாகும்.

இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் போர்க் கால சூழ்நிலை எங்கள் இனத்தை மட்டுமல்ல; எங்கள் இனத்தின் பண்பாடு, கலாசாரம், விழுமியம் என்ற அடிப்படைகளையும் அறுத்துக் கொட்டியமையை அறிய முடியும்.

ஒருபுறத்தில் போதைப் பொருட்களைப் பரப்பி எங்கள் அருமந்த பிள்ளைகளை நாசமறுக்க எடுக்கப்பட்ட சதித்திட்டத்தில் இருந்து இன்னமும் மீளமுடியாமல் நாம் தத்தளிக்கின்றோம்.

இந்நேரத்தில் விரசமான சூழமைவு ஒன்று எங்களை அறியாமலேயே எங்கள் சமூகத்தில் விதையிட்டுள்ளது.

இதன் காரணமாக விரசமான செயற்பாடுகள் மலிந்து போகும் அளவில் எங்கள் நிலைமை உள்ளமை வேதனைக்குரியது.

குறிப்பாக ஒழுக்கத்தின் விளை நிலங்களாக இருக்க வேண்டிய பாடசாலைகள் சிலவற்றில் ஆசிரியர் - மாணவர் தொடர்பில் வெளிவரும் செய்திகள் நெஞ்சை இறுக்கிக் கொள்கின்றன.

இப்படியும் நடக்குமா? என்ற கேள்வி சர்வசாதாரணம் என்ற பதிலைத் தந்து விடுமோ என்ற பயம் பீடிக்கும் அளவில் சம்பவங்கள் நீண்டு செல்கின்றன.

ஆசிரியர்கள் - மாணவர் உறவு என்பது தெய்வீகமானது. அந்தத் தெய்வீகம் களங்கப்படுமாக இருந்தால் பாடசாலை என்ற கட்டமைப்பு ஆடிப்போய் விடும்.

ஆகவே, ஆசிரியர் - மாணவர் என்ற தெய்வீகமான உறவை பேணுவதற்கு அனைவரும் கடுமையாகப் பாடுபட வேண்டும்.

பாடசாலைகள் பண்பாட்டு விழுமியங்களைப் போதிக்கின்ற ஆலயங்கள் என்பதால், ஒவ்வொரு பாடசாலைகளிலும் விழுமியக் கல்வியும், ஆன்மிக விதைப்பும் நடந்து கொண்டிருக்க வேண்டும்.

இவை இணைந்து நடக்குமாயின் தவறுகள் நடப்பதற்கான சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படும். இதற்கு மேலாக ஒழுக்கம் உயர்வைத் தரும் என்ற உன்னதமான வள்ளுவர் வாக்கு மனங்களில் பதிவாகும் வண்ணம் ஒழுக்கவியலை கட்டாயமான பாடமாகக் கற்றலில் சேர்ப்பது சமகாலத்திலும் எதிர்காலத்திலும் நிறைந்த பாதுகாப்பைத் தரும்.

## திருடப்பட்ட நீர்ப்பம்பி பொலிஸாரால் மீட்பு

திருடி மறைக்கப்பட்டிருந்த நீர்ப்பம்பி நெல்லியடிப் பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது. துன்னாலை சக்குசம்பா பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நீர்ப்பம்பி மீட்கப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்தே அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் வீடு ஒன்றில் தேடுதல் நடத்திய போதே நீர்ப்பம்பி மீட்கப்பட்டுள்ளது.

அவ் வீட்டின் உரிமையாளர் தலைமறைவாக உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5-60)

## வலுவூட்டல் பயிற்சிப்பட்டறை

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் சொண்ட், இக்ராட், இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் இணைந்து நடத்தும் உரிமை மற்றும் சுதந்திரம் தொடர்பான வலுவூட்டல் பயிற்சிப் பட்டறை நாளை 22ஆம் திகதியும் நாளை மறுதினம் 23 ஆம் திகதியும் இரு தினங்கள் யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம் பெறும். (இ-5-91)

## வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் தொழிலில் ஈடுபட ஆவன செய்க

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் அவர்கள் கடற்பரப்பில் தொழில் செய்ய ஆவன செய்யுமாறு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளையும் மாவட்ட அரச அதிபரையும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் கோரியுள்ளது. இது தொடர்பாக அச் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில்,

யாழ். வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் எல்லைக் குட்பட்ட கட்டைக்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்திற்குட்பட்ட எல்லைக்குள் கடந்த 16/06/2016 அன்று அத்துமீறி நுழைந்து தென் இலங்கை மீனவர்களின் படகுகள் எமது பகுதி மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்களை சேதப்படுத் தியதுடன் எமது மீனவர்களை காயப்படுத்தியும் உள்ளனர். எமது பகுதி மீனவர்களின் பாரம்பரிய கடற்றொழிலுக்கும் சிறு தொழில் செய்யும் மீனவர்களுக்கும் இடையூறாக உள்ளனர்.

இதனால் பெருமளவான மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

சட்ட விரோதமான முறையில் சங்கு , கடல் அட்டை தொழில்களைச் செய்வதுடன் அப்பகுதி மீனவர்கள் சுதந்திரமாக தொழிலில் ஈடுபட அனுமதிக்குமாறும் வெளி மாவட்ட மீனவர்களை உடனடியாக வடபகுதி கடற் பரப்பில் இருந்து வெளியேற்ற வேண்டுகின்றோம்.

யாழ். மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் அவர்கள் கடற்பரப்பில் தொழில் செய்ய ஆவன செய்யுமாறு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் அதிகாரிகளையும் மாவட்ட அரச அதிபரையும் சம்மேளனம் சார்பாக கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது. (இ-7)

## மத்திய வங்கி ஆளுநரை பதவி விலக்க முடியாது

பொது எதிர்க்கட்சியின் தேவைக்காக மத்திய வங்கி ஆளுநரை பதவி விலக்க முடியாது என தெரிவித்த கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம்,

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் முடியும் வரை அவரது பதவிக்காலம் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படமாட்டாது என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (செ-12)

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர் மடம் குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மட மகாதேவா சுவாமிகளின் ஆச்சிரம ஸ்ரீ சிவகுருநாத குருபீடத்தில் ஸ்ரீமத்தி இராம லிங்க சுவாமிகளின் வருடாந்த குருபூஜை நிகழ்வு நாளை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். (இ-5)

## விழுமியங்கள் பற்றிய விவாத போட்டிக்கான கருத்துகள்-04

## அன்பு என்ற நீர்

தோட்டங்களில் மலர்கள் உரிமையோடு ஊஞ்சலாடுகின்றன. தோட்டமொன்றிலே, வீசும் காற்றோடு சேர்ந்து உரச வண்ண மலர்கள் இல்லையென்றால் அது பாழடைந்த, கவனிப்பாரற்ற தோட்டம். மண்ணைக் குளிர்விக்கும் மழை போல, மனங்களைக் குளிர்விப்பவை அன்பின் துளிகளேயாகும்.

அன்பென்ற நீரைக் காணாத, மனத்தோட்டத்திலே எத்தனை உயர் ஜாதிப் பூமரங்கள் இருந்தாலும், பூக்களுக்கு எங்கே போவது? சூரிய ஒளியும் உரமும் கிருமி நாசினிகளும் போதிய அளவுக்குப் பயிர்களுக்குக் கிடைத்தாலும் அவற்றுக்கு நீரூற்றவில்லை என்றால் ஏனைய முயற்சிகள் அனைத்துமே அர்த்தமில்லாதவை ஆகி விடுகின்றன. மனித மனங்கள் என்ற மண்ணிலே எத்தனை வளம் இருந்தாலும், கோபத்திலும் துயரத்திலும் எரிந்து, காய்ந்து, மனங்கள் வரண்டு போயிருக்கும் போது அவை எவருக்கும் பயன்படாத வெறும் தரிசுகளே.

ஒருவரிடம் எத்தனை திறமைகள் இருந்தாலென்ன, குணங்கள் இருந்தாலென்ன அவற்றை நல்ல முறையில் வழிநடத்தக் கூடிய ஆற்றல் படைத்த அன்பு என்ற நல்லரசி இல்லாதவிடத்து, அக்குணங்கள் செழிப்படைவதில்லை. அதே போல, மனதில் அன்பென்ற நல்லரசியின் தூய ஆட்சி இடம்பெறும் போது, ஏனைய நல்லியல்புகள் படிப்படியாக வந்து சேர்ந்தே ஆக வேண்டுமல்லவா?

சுகதாமம் (கலட்டிச் சந்திக்கு அருகே பிறவுண வீதியில்) மண்டபத்தின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இடம் பெறும் விழுமியங்கள் பற்றிய விவாதப் போட்டிக்கு மாணவர்கள் தம்மைத் தயார் செய்யும் பொருட்டு இக்கருத்துகள் பிரசுரிக்கப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு 077 261 2088, 077 221 5102 ஆகிய தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும்.

## தம்மாலோக்க தேரர் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் யானைக் குட்டி ஒன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள உடுவே தம்மாலோக்க தேரரை பிணையில் செல்ல கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

10 மில்லியன் ரூபாய் பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் யானைக்குட்டி வைத்திருந்தார் என சட்டமா அதிபரினால், கடந்த மாதம் 11 ஆம திகதி தம்மாலோக்க தேரருக்கு எதிராக மனு ஒன்று தாக்கல் செய்திருந்தார்.

இதற்கிணங்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் கொழும்பு நீதவானால் பிணையில் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## சர்வதேச யோகா தின விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாண பல்கலைக் கழக விளையாட்டு விஞ்ஞான அலகானது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு ஒரு விழிப்புணர்வு நிகழ்வை நாளை 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை யாழ்ப்பாண பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடத்தவுள்ளது என யாழ்.பல்கலைக் கழக விளையாட்டு விஞ்ஞான அலகு துறைத் தலைவர் கலாநிதி பவானி அகிலன் அறிவித்துள்ளார். (இ

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5.30 மணி வரை யாழ் பிரதேசத்தில நாச்சிமார் கோவிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடிய காடு, ஐஸ் தொழிற்சாலை பொலிகண்டி, பெருங்குளம் சந்தி, அரசடி ஆசிரியர் வீதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தோணிக்கல் சிவன் கோவில் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் திருக்கேதீஸ்வர பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



ஒருவேளை புகை குடிப்பதற்கு வேண்டிய புகையிலையைத் தயாரித்துக் கொடுத்தாவது ஒரு மனிதனுக்குப் பணிசெய்தல் இலட்சக் கணக்கான தியானங்களைவிட மிக மிக மேலானது என்பதை அறியும் காலமும் ஒருவருக்கு வரும்.

என்னைத் தொடாதே என்பது உனது கொள்கையாகவும் பொங்கல் பானை உனது தெய்வமாகவும் இருக்கும் வரை ஆன்மீக முன்னேற்றம் உனக்குக் கைகூடாது.

எந்தச் செயலின் பயனும் நன்மை, தீமைகளின் கலப்பாகும். தீமை கலவாத நற்செயல் எதுவும் இல்லை. தீயைச் சூழும் புகைபோல் சிறிதாவது தீமை எப்போதும் செயலை ஒட்டியிருக்கின்றது. மிகப் பெரு நன்மையையும் மிகக் குறைவான தீமையையும் தரும் செயல்களையே நாம் செய்யவேண்டும்.

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறைநெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கிளிநொச்சி சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு நடைபெறும் போட்டியில் றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ். பாரதி விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில்சென்.அன்ரனிஸ்விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.(க)

---

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டு கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.45மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பொம்மஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

## ஞானமுருகன், குறிஞ்சிகுமரன் அடுத்த சுற்றுக்கு தகுதி

எவறெஸ்ட் வி.க நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வரிசையில் 15.06.2016 நடைபெற்ற முதலாவது போட்டியில் ஞானமுருகன் உடுப்பிட்டி யுத் 1-1 கோலினை பெற்றதால் தண்ட உதை மூலம் ஞான முருகன் வெற்றி பெற்றது.

அடுத்த போட்டியில் குப்பிளான் குறிஞ்சிகுமரன் 1:0 என்ற கோல் அடிப்படையில் புத்தூர் சரஸ்வதியினை வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. (க)

# மதுஸ்ரன் அதிரடி கோல்கள் சென்.ஹென்றீஸ் கல்லூரி வெற்றி



கொத்மலை பாலுற்பத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் நடத்தும் முன்னனி உதைபந்தாட்ட பாடசாலைகளின் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் ("கொத்மலை ஷொக்ஸ் 2016") ஆட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியொன்றில் கன்டி ரிட்னி கல்லூரியை எதிர்த்து யா/ இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரி அணி மோதியது.

ஏற்கனவே A குழுவில் இரு அணிகளும் தலா இவ்விரண்டு வெற்றிகளைப் பெற்றிருப்பதனால் இப்போட்டி இரு அணிகளுக்கும் மிக முக்கியமான ஒன்றாக அமைந்ததது.

தமது சொந்த மைதானத்தில் பெரும் ரசிகர்களின் ஆதரவுடன் களமிறங்கிய ஹென்றீஸ் அணியின் ஆட்ட வேகம் வழமைபோல் காணப்பட்டது. இருந்தும் தமக்குக் கிடைக்கப்பெற்ற பல வாய்ப்புக்களை வீணடித்து அதிர்ச்சியளித்தது சென்.ஹென்றீஸ் கல்லூரி.

சர்வதேச அனுபவமுடைய முன்கள வீரர்களைக் கொண்டிருந்த போதும் கோலடிப்பதை விட எதிரணி கோலடிப்பதைத் தடுப்பதிலேயே குறியாக செயற்பட்டது கன்டி ரிட்னி கல்லூரி .

ஹென்றீஸ் அணி அடிக்க வேண்டிய பல கோல் வாய்ப்புக்களையும் ரிட்னி கல்லூரி கோல்காப்பாளர் அடுத்தடுத்து தடுத்தார்.

எனினும் இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட ஹென்றீஸ் கல்லூரி அணி மதுஸ்ரனின் அதிரடியான இரு கோல்கள் மூலம் ரிட்னி கல்லூரி அணியின் போராட்டத்தையும் தாண்டி வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் முதல் இடத்தைப்பிடித்தது.

கொழும்பு ஆனந்தா கல்லூரியுடனான கடந்த ஆட்டத்தில் 9 கோல்களை அடித்த ரிட்னி கல்லூரி அணியால் இப்போட்டியில் ஒரு கோல் கூட அடிக்கமுடியவில்லை.

இதுவரை மூன்று போட்டிகளில் ஆடிய ஹென்றீஸ் கல்லூரி அணி மொத்தம் 19 கோல்களை அடித்தது டன் குழுவில் 9 புள்ளிகளைப் பெற்று முன்னிலை வகிக்கின்றது. (க)

# வைத்திலிங்கம் ஞாபகார்த்த சுழல்கிண்ண மென்பந்தாட்டம்


றெயின்போ வெற்றி

சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் மறைந்த உறுப்பினர் நடராசா வைத்திலிங்கம் (வைத்தியப்பா) ஞாபகார்த்தமாக 2 ஆவது வருடமாக நடத்தும் சுழல் கிண்ண மென்பந்தாட்ட தொடர் நடைபெற்று வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற போட்டியில் முதலில் ஆடிய சைனிங்ஸ் அணி 11 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 46 ஓட்டங்களை பெற்றது. சைனிங்ஸ் சார்பாக துளசிராம் 30 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் றெயின்போ சார்பாக ருதேஷா,பிரணவன் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

47 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய றெயின்போ 6 ஆவது ஓவரில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றிஇலக்கை அடைந்தது. றெயின்போ சார்பாக ருதேஷா 34 ஓட்டங்களை பெற்றார். சைனிங்ஸ் சார்பாக பிரசாந் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.ஆட்டநாயகன் விருதை றெயின்போ வீரன் ருதேஷா பெற்றார்.றெயின்போ அணி 2 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (க)

# மாகாண மட்ட கராத்தே போட்டி சென்.ஜோன்ஸ் பதக்கங்கள் குவிப்பு




மாகாண மட்ட பாடசாலைகளிற்கிடையிலான கராத்தே சுற்றுப்போட்டி அண்மையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.இதில் சென் ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் 7 தங்கம்,2வெள்ளி, 3வெண் கலம் உட்பட 12 பதக்கங்கள்பெற்று யாழ்மாவட்டத்திற்கு பெருமைசேர்த்துள்ளார்கள்.

அவர்களுடன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (உடற் கல்வி) M.சத்தியபாலனும் கராத்தே பொறுப்பாசிரியர் R. நிஷானும் கராத்தே பிரதம ஆசிரியர் சென்சே விஜயராஜையும் (S.S. K.A கராத்தே கழகம்) காணலாம்.வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம் S.றெனிசன் 17 வயதுப்பிரிவு குமித்தே தங்கம், காட்டா, வெண் கலம், S.ஜெலன் 19 வயதுப் பிரிவுகுமித்தே தங்கம் காட்டா, வெண்கலம் A.தனுசன் 19 வயதுப் பிரிவு காட்டா-தங்கம் குறூப் காட்டா- தங்கம் குமித்தே, வெண்கலம், V. நிவேதன் 13வயதுப் பிரிவு தனிக்கா ட்டா-தங்கம் குறூப் காட்டா, தங்கம், A. துஸ்யந்தன் தனிக்காட்டா வெள்ளி,குறூப் காட்டா- தங்கம் V. திரு ஷாந்-15வயதுப் பிரிவு தனிக்காட்டா வெள்ளி சென் ஜோன்ஸ் மாணவன் விஜயராஜ் நிவேதன் தங்கம் பெற்றவர்களை இந்து மகளிர் கல்லூரி அதிபர் பதக்கம் அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம். (க)

# மெலிஞ்சிமுனை இருதயராஜாவை வென்றது ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் மெலிஞ்சிமுனை இருத யராஜா வி.க வெற்றி கொண்டு ஊரெழு றோயல் வி.க மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது.

நெற்கொழு கழுகுகள் வி.க மைதானத்தில் இடம்பெ ற்ற போட்டியில் ஊரெழு றோயல் வி.க எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா வி.க மோதியது. போட்டியின் 34 ஆவது நிமிடத்தில் றோயல் வி.க பிரசன்னா முதலாவது கோலினை போட்டு கோல் கணக்கை ஆரம்பித்தார்.

தொடர்ந்து 41 ஆவது நிமிடத்தில் றோயல் வி.க கஜகோபன் இரண்டா வது கோலினை அடிக்க 2:0 என முதற்பாதி ஆட்டத்தில் றோயல்முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்திலும் ஆதிக்கம் செலுத்திய றோயல் வி.க 75 ஆவது நிமிடத்தில் கிடைக்கப் பெற்ற பந்து பரிமாற்றத்தினை நிதர்சன் தலையால் முட்டி கோலாக மாற்றினார். ஆட்ட நேர முடிவில் 3:0 என ஊரெழு றோயல் வி.க வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக றோயல் வி.க பிரசன்னா தெரிவு செய் யப்பட்டு அவருக்கான பணப் பரிசு மற்றும் பதக்கத் தினை தொழில் நுட்ப வியல் கல்லூரி தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் வே.சபேசன் வழங்கி கௌரவித்தார். (க)

## 33 வருட வேலைத்திட்டத்தின் பின்

# மகாவெலிசாய விகாரை நேற்று திறப்பு

(கொழும்பு)

1983ஆம் ஆண்டு கொத்மலை நீர்த்தேக்கத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 33 வருடங்களின் பின் பூர்த்தியாக்கப்பட்ட கொத்மலை மகாவெலிசாய விகாரை நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வு நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இலங்கையில் காணப்படும் மிக உயரமான ருவன்வெலிசாய விகாரையை விட கொத்மலை மகாவெலிசாய விகாரை 02 அடி உயரம் குறைவானதாகும். இந்த விகாரை இலங்கையில் காணப்படும் 2 ஆவது உயரமான விகாரையாகும்.

முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தில் மகாவலி செயற்திட்டத்தின் அமைச்சராக இருந்த காலம் சென்ற அமரர் காமினி திசாநாயக்க அவர்களின் எண்ணத்தில் உதித்த இந்த கொத்மலை மகாவெலிசாய விகாரை வேலைத்திட்டம் 33 வருடாங்கள் பின் தள்ளப்பட்டு தற்போது அமைச்சர் நவீன் திசாநாயக்க தலைமையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

கொத்மலை நீர்த்தேக்கம் அமைக்கும் போது நீருக்குள் மூழ்கிய 14 விகாரைகளுக்கும் 2 தேவாலயங்களுக்கும் பதிலாக அமைக்கப்பட்டதே கொத்மலை மகாவெலி சாய விகாரை.

1983.03.20 ஆம் திகதி இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது, பின் அமரர் காமினி திசாநாயக்க அவர்களின் இறப்பிற்கு பிறகு இந்த வேலைத்திட்டம் ஸ்தம்பிதம் அடைய தொடங்கியது.

இதற்கு இடையில் காமினி விக்கிரம பெரேரா அவர்களின் முயற்சியில் மேலும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ந்து 2010 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ந்து தற்போது இதன் வேலைத்திட்டம் பூர்த்தியான நிலையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பெரும் திரளான பக்தர்கள், 08 பௌத்த நாடுகளை சேர்ந்த தூதுவர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண முதலமைச்சர்கள், மாகாண சபை அமைச்சர்கள் உறுப்பினர்கள், இராஜதந்திரிகள் உட்பட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

உலகில் காணப்படும் விகாரைகளில் கடல் மட்டத்தில் இருந்து சரியாக 1000 அடி உயரத்தில் காணப்படும் முதல் விகாரை இதுவாக கருதப்படுகின்றது. இந்த விகாரையை 32 தூண்களில் தாங்கி நிற்பது ஒரு சிறப்பு அம்சமாகும்.

இதன் உயரம் 274அடி, விட்டம் 200 மீற்றராகும். முற்றிலும் செங்கற்களினாலும், சில்வர்இரும்புகளினாலும் மாபில் பளிங்குகளினாலும் இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-12)

## சர்வதேச...

யல் விவகாரங்களுக்கான பிரதிநிதி போல கொட்றிக்கும் வட மாகாண முதலமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றையதினம் வட மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது. அக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதிநிதியாக இருந்த டேவிட்டலிக்கு பின்னர் அப்பதவிக்கு எதிர்வரும் 3 மாதங்களுக்குள் புதிதாக பதவியேற்கவுள்ள குறித்த பிரதிநிதி பல்வேறு விடயங்கள் தொடர்பாக என்னுடன் கலந்துரையாடினார். தற்போது ஜெனிவாவில் நடக்கும் விடயம் தொடர்பாகவும் எமது கருத்துக்களை கேட்டறிந்தார்.

இது தொடர்பாக நாம் ஏற்கெனவே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடந்த செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னரே எழுதிய கடிதம் தொடர்பாகவும் அதன் பின்னர் எழுதியகடிதம் பற்றியும் கூறியிருந்தேன்.

எமக்கு சர்வதேச உள்ளீடுகள் இல்லாமல் போர்க்குற்ற விசாரணை நடைபெறுவதால் எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. அதாவது உள்நாட்டு நீதிபதிகளையோ உள்நாட்டு வழக்கு நடத்துநர்களையோ வைத்து நாங்கள் விசாரணைகளை நடத்துவதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிகிடைக்காது என்ற கருத்தை அவரிடம் முன்வைத்தேன்.

அத்தோடு கடந்த செப்ரம்பர் மாதத்தில் ஜெனிவாவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கித்தான் விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான தொருநிலை இருக்கும் போது ஏன் சர்வதேச விசாரணைக்கு எதிராக இலங்கை அரசாங்கம் குரல் கொடுக்கிறார்கள் என்பது பற்றி சர்வதேசம் அறிந்து கொள்ள வேண்டும் என கூறியிருந்தேன்.

அதாவது குற்றம் செய்தவர்களை பாதுகாக்கும் எண்ணத்துடன்தான் இவ்வாறான கூற்றுக்கள் அரசாங்கத்தால் கூறப்படுகின்றன. மேலும் வெளிநாட்டு நீதிபதிகளை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என கூறுவதன் அர்த்தம் என்னவென்றால் குற்றவாளிகளை இந்த விசாரணையின் மூலம் அடையாளம் காணப்படக்கூடாது என்ற காரணத்துக்காகத்தான் என்பதே எனது கருத்து எனதெரிவித் தேன்.

நான் நீதித்துறையில் பலவருடங்கள் பணியாற்றியதையும் குறிப்பிட்டு நீதித்துறையில் இன ரீதியான எண்ணங்களும் செயற்பாடுகளும் எவ்வாறு இலங்கையிலே நடந்தேறுகின்றன என்பது பற்றி தெரிவித்தேன்.

மேலும் எமது நாட்டில் நாம் மத்திய அரசுடன் இணைந்து நல்லெண்ணத்துக்காக பலநடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆர்வமாக உள்ளோம். எனினும் பிழையான நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளமுடியாது என்றும் சரியான நடவடிக்கையினை அரசாங்கம் எடுக்கும் போது ஒத்துழைப்போம் என கூறியுள்ளேன்.

இதற்கு அரசாங்கத்தின் பிழையான நடவடிக்கை என்ன என்று கேட்டிருந்தார். சமஷ்டி என்பது பிரிவினை என்ற ஒரு கருத்தை சிங்கள மக்கள் இடையே இது வரை காலமும் தெற்கு அரசியல்வாதிகள் பர ப்பி வைத்துள்ளார்கள். அது பிழையான ஒரு கருத்து. சமஷ்டி பிரிவினை இல்லை, மக்களை சேர்த்து வைத்தல் . ஆனால் தமக்குரிய இடங்களில் தங்களைதாங்களே, பார்த்துக் கொள்ளும் நிலைமையை உருவாக்குதல் என்று தெற்கில் உள்ளமக்களுக்கு எடுத்தியம்பவேண்டிய அவசியம் தெற்கில் உள்ள அரசியல்வாதிகளுக்கு உள்ளது. ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை என்பதையும் குறிப்பிட்டேன். சமஷ்டி தொடர்பான உண்மையான கருத்துக்கள் தொடர்பாக கற்கை ஏற்படுத்தும் எண்ணம் இருந்தால் மக்கள் எல்லோரும் நல்லெண்ணத்துக்காக சமஷ்டி ரீதியான தீர்வைபெற ஒத்துழைப்பார்கள் என கூறினேன். இது தொடர்பாக மத்திய அரசிடம் பேசுவதாக அவர் தெரிவித்துள்ளார் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-9

## அதிபர், 3 ஆசிரியை...

யாழ்ப்பாணம் வரணி பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் தரம் 6 இல் கல்வி கற்கும் 11 வயதுடைய மாணவியை கடந்த சில வாரங்களுக்கு முன் அப்பாடசாலையில் கல்வி கற்பிக்கும் 45 வயதுடைய ஆசிரியர் ஒருவர் பிரத்தியேக வகுப்பு நடத்தும் போது துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மாணவி தனது பெற்றோரிடம் முறையிட்டுள்ளார். அதனையடுத்து பாடசாலைக்கு சென்ற மாணவியின் பெற்றோர் பாடசாலை அதிபரிடம் இது பற்றி முறையிட்டு நடவடிக்கைஎடுக்க கோரியுள்ளனர்.

அவ்வேளை அதிபர் மற்றும் அங்கு இருந்த மூன்று ஆசிரியைகளும் இந்த விடயத்தை இத்துடன் விட்டுவிடுங்கள் இதனை பெரிதுபடுத்தவேண்டாம் என பெற்றோரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்தசம்பவம் குறித்து அறிந்த பாடசாலை பழைய மாணவர்கள் சிலர் இது தொடர்பில் சிறுவர் நன்னடத்தை அதிகாரியின் கவனத்திற்கு குறித்த விடயத்தை கொண்டு சென்றுள்ளார்கள்.

குறித்த சம்பவத்தை உறுதிப்படுத்திய சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரி உடனடியாக கொடிகாமம் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டுசென்றார்.

அதனை தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்த கொடிகாமம் பொலிஸார் மாணவியை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய ஆசிரியரை கைது செய்ததுடன், இந்த சம்பவத்தை மறைக்கும் நோக்குடன் செயற்பட்டார்கள் எனும் குற்றச்சாட்டில் பாடசாலை அதிபர் மற்றும் மூன்று ஆசிரியைகளையும் கைது செய்துள்ளன்ர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டஅதிபர் உள்ளிட்டஐவரையும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்கள் ஐவரையும் எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (செ-9-89)

## ஜூலை முதலாம்...

சங்கத்தின் பிரதிநிதிகளுடன் போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் குறித்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், குறித்த பஸ் கட்டணங்கள் 3.2 வீத அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் உள்ள அதேவேளை, 10 வீதத்திற்கு மேல் அதிகரிக்கப்படுமாயின் அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12 )

## இறுதிப்போரில்...

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இலங்கையில் ஆட்சியில் இருந்தவர்கள், படைத்துறை உயரதிகாரிகள் மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் உயர்மட்டத்தினருக்கும் இந்த ஆதாரங்கள் கடும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என இவ் வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் த காட்டியன் நேற்று வெளியிட்டுள்ள தகவல்களை இங்கே தொகுத்துத் தரப்படுகிறது.

இலங்கையில் இறுதிக்கட்டப் போர் இடம் பெற்றபோது அரசாங்கத்தால் போர் தவிர்ப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இந்த கொத்துக் குண்டுகளும், அதன் பாகங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இறுதிக்கட்டப் போரின் போது இந்த போர் தவிர்ப்பு வலயப் பிரதேசங்களில் மூன்று இலட்சம் மக்கள் இருந்துள்ளனர்.

இறுதிக்கட்டப் போரின் போது இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்காலிகமாக சிறிது காலம் படைத்துறை அமைச்சராக இருந்துள்ளார். கோத்தபாய ராஜபக்ஷ படைத்துறைச் செயலாளராகவும், அமைச்சர் சரத் பொன்சேகா படைத்தளபதியாகவும் இருந்துள்ளனர்.

இந்த கொத்துக் குண்டுகளை இணாங்கண்டுள்ள மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆய்வாளர் ஒருவர், இந்த கொத்துக் குண்டுகள் ரஷ்ய நாட்டு தயாரிப்பு என உறுதிப்படுத்தியுள்ளார்.

இறுதிக்கட்டப் போரின் போது போரில் ஈடுபட்ட இருதரப்பினராலும் போர்க்குற்றங்களும், மனிதவுரிமை மீறல்களும் மேற்கொள்ளப்பட்டதாக ஐ.நாவும், சர்வதேச மனிதவுரிமை அமைப்புகளும் குற்றம் சுமத்தியிருந்தன.

ஆயினும், அதனை முன்னைய அரசாங் கம் மறுத்திருந்தது. சர்வதேச போர் நியமங்களின்படியே படையினர் போரை நடத்தியிருந்ததாக தற்போதைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அப்போது கூறியிருந்தார்.

கொத்துக் குண்டுகள் பெரும் பேரழிவை ஏற்படுத்தக் கூடியன. அதுவும் மக்கள் நடமாட்டம் கூடியிருந்த சிறிய பிரதேசத்துக்குள் போடப்படும் கொத்துக் குண்டுகள் பெரும் உயிரிழப்புக்களை ஏற்படுத்தக்கூடியன.

கடந்த 2011ஆம் மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் ஆனையிறவு, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களுக்கு அருகில் 42 கொத்துக் குண்டுகளின் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டதாக ஹலோ ட்ரஸ்ட் கண்டிவெடி அகற்றும் அமைப்பின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அதனைப் போன்று இந்தக் கொத்துக் குண்டுகளின் பாகங்கள் கிளிநொச்சி மற்றும் சாலை பிரதேசத்திலும் கண்டுபிடிக்கப்பட்டதாக இந்த புகைப்பட ஆதாரங்களை தந்தவர் தெரிவித்தார். இதனைத்தவிர வெடிக்காத நிலையில் இருந்த கொத்துக் குண்டு ஒன்று சுண்டிக்குளம் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரின் போது படையினரால் தாக்குதல் நடத்தப்பட்ட புதுக் குடியிருப்பு வைத்தியசாலைக்கு அருகாமையில் கொத்துக் குண்டுகளின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக ஐ.நாவின் நிபுணர் ஒருவர் தெரிவித்திருந்தமை தொடர்பான மின்னஞ்சல் ஒன்று கடந்த 2012ஆம் ஆண்டு கசிந்திருந்தது.

MAG, FSD மற்றும் ஹலோ ட்ரஸ்ட் அமைப்புகளில் பணியாற்றிய முன்னாள் பணியாளர்களும் கொத்துக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதை எமக்கு உறுதிப்படுத்தியுள்ளனர். MAG அமைப்பின் முன்னாள் பணியாளர் ஒருவர் போர் தவிர்ப்பு வலயமாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த புதுக்குடியிருப்பில் கொத்துக் குண்டு கண்டு பிடிக்கப்பட்டிருந்ததாக எமக்கு தெரிவித்தார்.

இறுதிக்கட்டப் போரின் போது படையினரால் கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக பலர் எமக்கு சாட்சியம் அளித்துள்ளனர்.

இறுதிக்கட்டப் போரின் போது விடுதலைப் புலிகள் வான் தாக்குதல்களை நடத்தியருக்கவில்லை. விமானப் படையினரே வான் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். இந்தப் போரின் போது படையினர் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் ஆயுதங்களை பயன்படுத்தி இருந்ததாக ஏற்கெனவே பல சர்வதேச அமைப்புகள் குற்றம் சுமத்தியிருந்தன.

அரசாங்கத்தால் போர் தவிர்ப்பு வலயங்களாக பிரக்டனப்படுத்தப்பட்டிருந்த பகுதிகளில் இருந்து கொத்துக் குண்டுகளின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் இலங்கையின் முன்னாள் ஆட்சியாளர்கள் மற்றும் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு கடும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 32 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் அடுத்த வாரம் விவாதம் இடம்பெறவுள்ள நிலையில், படையினரால் கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான புகைப்பட ஆதாரங்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

**Personal class (Maths)**

தரம் 6 - 11 வரையான மாணவர்களிற்கு கணிதம் (Tamil & English medium) பிரபல ஆசிரியரால் இலகுவான, கவர்ச்சிகரமான முறையில் வீடு வந்து கற்பிக்கப்படும்.

G.C.E O/L மற்றும் தரம் 9,10 மாணவர்களிற்கு Model papers, Past Papers ஊடாக கற்பிக்கப்படும்.

(யாழ்ப்பாணம், மல்லாகம் பிரதேசத்திற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

(4992)

தொடர்பு :-
077 2369 133

**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்கு யாழ். நகரப்பகுதியில் தேவை.

தொடர்பு :-
077 967 2613

(சி-4474)

**A/L - 2016**

கருத்தரங்கு

**பொருளியல்**

அலகு ரீதியாக கருத்தரங்கு நடாத்தப்படும்.

முற்றிலும் இறுதி பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும்.

வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் மட்டுமே வெளி மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

ஆரம்பம் → கருத்தரங்கு தொடர் (1)
26.06.2016 ஞாயிறு 1.00 P.m

D.C.M யாழ்நகர்

(C-4971)

S. ஜெயக்குமார்

**A/L கலை, வர்த்தகம், தொழில்நுட்பம் 2018**

எங்கே ?
பெருமாள் கோவிலடியிலா ?
இல்லை, அதையும் தாண்டி.

வெலிங்டன் சந்தியடியிலா ?
இல்லை!. அதையும் தாண்டி.

அப்ப ஆரியகுளம் சந்தியடியிலா ?
இல்லவே இல்லை.
அதையும் தாண்டி
வேம்படி சந்தியடியில்.

**D.C.M**

(C-4971)

# போர்க்குற்ற விசா...

கொழும்பில் இருந்து வெளியாகும் ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

போர் முடிவுக்கு வந்தவுடன் நாடு விடுதலை அடையப் போவதில்லை. போர் நிலவிய எந்த நாட்டிலும் அவ்வாறான எதுவும் நடக்கவும் இல்லை.

போரை முடிவுக்குக் கொண்டு வந்தவுடன் உண்மைகளை வெளிப்படுத்த துணிவுடன் செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் நாம் ஆரம்பத்தில் இருந்தே உண்மைகளை கண்டறியும் செயற்பாடுகளில் தாமதமாகவே செயற்பட்டு வருகிறோம்.

போர்க்குற்றசாட்டுகள் எம்மீது சுமத்தப்பட்டபோது அவற்றை பொய்யென நிரூபிக்க நாம் முன்வந்திருக்க வேண்டும். அப்போதே அந்த பொறிமுறைகளை மேற்கொண்டிருந்தால் இன்று நாம் அனைத்துலக நீதிமன்றத்தின் கூண்டில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

எவ்வாறாயினும், எமது இராணுவம் மீது படிந்துள்ள கறைகளை நாம் நீக்க வேண்டும். எமது இராணுவத்தினர் முறையான வகையிலும் மனிதாபிமான வகையிலும் செயற்பட்டு போரை முடிவுக்கு கொண்டுவந்தனர் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

இறுதிப்போரில், வடக்கில் இராணுவத்தினால் பாரிய இன அழிப்பு மேற்கொள்ளப்பட்டதாக அனைத்துலக அமைப்புகளும் ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்களும் தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றன.

எனினும் இதில் எந்தவித உண்மைகளும் இல்லை. அதேபோல் வடக்கில் நடந்த சம்பவங்கள் உண்மையானதா அல்லது பொய்யானதா என்பதை விசாரணைகள் மூலமே நிரூபிக்க முடியும்.

எனவே, ஒரு விசாரணையை நடத்தி எமது இராணுவத்தை காப்பாற்ற வேண்டும். அதற்கான சரியான களம் இப்போது ஏற்பட்டுள்ளது.

இப்போதுள்ள அரசியல் சூழல், சுதந்திரமான செயற்பாடுகள் மற்றும் அனைத்துலக நாடுகளுடன் ஏற்படுத்தியுள்ள நட்புறவுகள் அனைத்தும் எமது நிலைப்பாட்டை சரியாக முறையில் கொண்டு செல்ல வாய்ப்பாக அமையும்.

போர்க்குற்ற விசாரணையை காலம் கடத்துவது எம்மீது முன்வைத்துள்ள பொய்யான குற்றச்சாட்டுகள் உண்மையாகி விட வாய்ப்பாக மாறிவிடும்.

இப்போது அனைத்துலகத் தரப்பு முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் மற்றும் உள்நாட்டில் எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பில் உள்ளக ரீதியிலோ அல்லது கலப்பு விசாரணைக்கு அமைவாகவோ விசாரணை ஒன்றை முன்னெடுக்க வேண்டும்.

காலத்தை கடத்தி மேலும் மேலும் சர்ச்சைகளை ஏற்படுத்திக்கொள்ளாது உண்மையான விசாரணைகளை முன்னெடுத்து பிரச்சினைகளை விரைவில் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (செ-12)

100க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் கைவசம்

**நீங்கள் தொழில் தேடுபவரா?**

5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய

O/L உடன் Business & Hotel Management UK Certified

CERTIFICATE - DIPLOMA - DEGREE

Up to 30% Discount

With FREE >>> English Course

3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch

அனுமதிகளுக்கு: 077 3616 798

SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY

www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
077 3616 798

275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி. யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

# மொஹமட் முஸம்...

டின் பேரில் தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தினார் என இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது

இது தொடர்பில் மொஹமட் முஸம்மிலிடம் கடந்த வாரம் பொலிஸ் நிதிமோசடி விசாரணை பிரிவினர் விசாரணை நடத்தியிருந்தனர்.

இந்நிலையில், தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் நேற்று பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவரது வழக்கறிஞரான கபில கமகே ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இவரை நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய வேளை எதிர்வரும் யூலை மாதம் 04-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (செ-12)

# அர்ஜுனவுக்கு எதி...

அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

அர்ஜுன மகேந்திரன் இந்த நாட்டுப் பிரஜை இல்லை எனவும், அவரை அப் பதவியில் நியமித்தது சட்ட ரீதியானது அல்ல எனவும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

மேலும் பிணை முறி மோசடி தொடர்பில் அவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள கீர்த்தி தென்னக்கோன், அவர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே அர்ஜுனவை தொடர்ந்தும் மத்திய வங்கி ஆளுநர் பதவியில் நீடிப்பதை தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்குமாறும் கீர்த்தி தென்னக்கோன் தனது மனுவில் வேண்டுகோள் விடுத்துள்ளார். (செ-12)

# முதலமைச்சர்க...

முதலமைச்சர்களும் இணைந்து தத்தமது மாகாண நிர்வாகம் தொடர்பாகவும் மாகாணங்களில் உள்ள பொதுவான பிரச்சினைகள் மற்றும் தனித்துவமான பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளனர்.

கடந்த முறை நடைபெற்ற முதலமைச்சர்களுக்கிடையிலான கலந்துரையாடலில் வட மாகாண முதலமைச்சர் சுகயீனம் காரணமாக கலந்து கொள்ளவில்லை.

இந்நிலையில் இம்முறை இக்கூட்டத்தில் முதலமைச்சர் முதன் முறையாக கலந்து கொள்ளவுள்ளார். (செ-9)

# வெடிபொருள்...

பருத்தித்துறை மருதடிப் பகுதியில் உள்ள வீட்டு வளவு ஒன்றில் இருந்து வெடி பொருள் ஒன்று மீட்கப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை-யாழ்ப்பாண வீதிக்கு அருகாமையில் மருதடிப் பகுதியில் உள்ள வீட்டு வளவில் இருந்து நேற்று திங்கட்கிழமை நண்பகல் இக் குண்டு மீட்க்கப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளர் கொழும்பில் வசித்து வரும் நிலையில் அவ் வீடு வாடகைக்கு பிறிதொரு நபருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் துப்புரவுப் பணியில் ஈடுபடும்போது குண்டினைக்கண்டு பருத்தித்துறைப் பொலிஸாருக்கு அறிவித்தார். இது தொடர்பில் விஷேட அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து குண்டு பாதுகாப்பாக மீட்கப்பட்டது.

இக் குண்டு மோட்டார் வகையைச் சேர்ந்த 152 மில்லி மீற்றர் எறிகணையின் முகப்புப் பகுதி என படைத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-60)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Batch 1 : 22.06.2016
Batch 2 : 27.06.2016
Batch 3 : 29.06.2016
Batch 4 : 02.07.2016

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550

Hotlines
077 036 5728, 077 758 5913,
077 722 2422

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

(C-4969)

**வேலைவாய்ப்பு**

யாழ் நகரில் ANDRA PUBLICATIONS நிறுவனத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

**புத்தகசாலை**

ANDRA BOOKS

ஒன்றிற்கு அனுபவமுள்ள மேற்பார்வையாளர் மற்றும் புத்தக விற்பனையாளர்கள் தேவை!

கட்டாயத் தகைமைகள்:

- ஏற்கனவே புத்தகசாலையில் அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

புதன்கிழமை (22.06.2016) காலை 9.00மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

ANDRA PUBLICATIONS (PVT) LTD
356A, KASTHURIYAR ROAD, JAFFNA, SRI LANKA.
TEL: 0776622981 | 0777481696

(சி-4968)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 | 21.06.2016 | தொலைபேசி : 021 222 3378

நாதம் 70





# மைத்திரியும் ஏமாற்றினார்




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## பண்டத்தரிப்பு கோமில நடந்த நாசகாரம்

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு ஆரம்பமாகியது. மூப்பரைத் தவிர மற்றெல்லோரும் ஆலடி மாநாட்டிற்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் பண்டிதர் அறிவிக்க அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**விதானையார்:** என்ன இன்னமும் எங்கட மூப்பரைக் காணவில்லை.

**கங்காணி:** ஏதோ! முக்கியமான அலுவல் என்று சொல்லிப்போட்டு ஆட்டோவில ஏறிப்போனவர்.

(இப்படிக் கங்காணியார் சொல்லிமுடிக்க ஆட்டோ ஒன்று ஆலடியில் வந்து நிற்க அதிலிருந்து மூப்பர் இறங்கினார்)

**விதானையார்:** மூப்பருக்கு ஆயுள் நூறு. இப்பதான் உங்களைப் பற்றிக் கதைக்க நீங்கள் வாறியள்.

**மூப்பர்:** இஞ்ச விதானையார் நூறு வயது மட்டும் இருந்து என்ன பிரயோசனம். எங்கட நாட்டில நடக்கிறதுகளைப் பார்க்க நேரகாலத்தோட போய்ச் சேருவதுதான் நல்லது போலத் தெரியுது.

**கங்காணி:** என்ன மூப்பர் அண்ணே இப்படிச் சொல்லுறியள். என்ன சங்கதி?

**மூப்பர்:** அதையேன் கேட்கிறியள். பண்டத்தரிப்புப் பக்கம் போயிற்றுவாறன். அங்க இருக்கிற ஒரு கோயிலில பாடசாலையில கற்கிற பெண் பிள்ளைகள் சிலர் இருக்கினமாம். அந்தப் பிள்ளைகளை இனந்தெரியாத நாசமறுவார் துஷ்பிரயோகம் செய்து போட்டினமாம். இதால இப்ப அந்தக் கோம் அரசாங்கத்தால சீல் வைக்கப்பட்டிருப்பதாகக் கேள்வி.

**வாத்தியார்:** இதென்ன கொடுமை. எங்கட பிள்ளையள பாதுகாக்கிற கடமையை நாங்கள் சரியாச் செய்ய வேணுமல்லோ. பெற்றாரை இழந்த பிள்ளையள, ஆதரவற்ற பிள்ளைகளைப் பாதுகாக்கின்ற அமைப்புக்கள் அந்தப் பிள்ளைகள் தொடர்பில மிகவும் கண்காணிப்பாக இருக்கவேணும்.

**விதானையார்:** வாத்தியார் நீங்கள் சொல்லுறது உண்மைதான். ஆனால் இந்தாப் பாருங்களன். பண்டத்தரிப்பு கோமில என்ன நடந்தது என்று.

**கங்காணி:** விதானையார் இந்தச் சம்பவங்கள் ஒன்றும் பேப்பர்களில வரக் காணல்ல.

**விதானையார்:** இஞ்சே கங்காணியார் இதுகள் வலிமையான சபைகளோட சார்ந்த விடயங்கள். அரசியலிலும் பெரும் செல்வாக்கு. அதால உந்தச் சம்பவங்களை மூடி மறைச்சுப்போட்டினம்.

**வாத்தியார்:** வலிமையான சபை மட்டுமல்ல இப்படியான இடங்கள் என்றவுடன எங்கட அதிகாரிகளுமல்லோ ஒன்றுசேர்ந்து மூடி மறைக்கிறதில மும்முரமாக நிற்பினம்.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான் வாத்தியார். எதற்கும் செல்வாக்கு இருக்க வேணும். அண்மையில புங்குடுதீவைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் ஏதோ இனிப்புச் சாப்பிட்டது என்றொரு சம்பவம் பரவலாகப் பேசப்பட்டதல்லோ. அந்த மாணவர்களை யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் அனுமதித்து எத்தனையோ விளக்கம் விசாரணை நடத்த அங்க படிக்கிற பிள்ளைகளுக்கு சீஎண்டு போய்ச்சுதாம்.

**பண்டிதர்:** என்ன இனிப்புச் சாப்பிட்டதற்கு இவ்வளவு விளக்கம் விசாரணையோ!

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா இப்ப இனிப்பு வடிவில போதைப்பொருளுமல்லோ உலாவுது. புங்குடுதீவுக் கடையொன்றில இனிப்பை வாங்கிச் சாப்பிட்ட சில மாணவர்களுக்கு உபாதை ஏற்பட்டிருக்குது. இதால பயந்து போன பள்ளிக்கூட நிர்வாகம் அந்த மாணவர்களை உடனடியாக யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில அனுமதித்துள்ளது.

பெரியாஸ்பத்திரியில அனுமதித்தால் பிறகென்ன. விளக்கம் விசாரணை என்று ஏகப்பட்ட தொந்தரவு. அந்த மாணவர்கள் தங்கட கையில தங்கட பெயர்களை பிளேட்டால வெட்டினவியள் என்றும் கேள்வி.

**மூப்பர்:** அவங்கள் பாவங்கள். யாழ்ப்பாணத்தில உள்ள பிரபலமான பாடசாலைகளில படிக்கிற பெடியள் எண்டால் உடனடியாக அவங்கள் வீட்டை போயிருக்க முடியும்.

இது புங்குடுதீவு அல்லோ! அப்ப இப்படியான பிள்ளை எண்டால்தான் அதிகாரிகளும் தாங்களும் கடமையாற்றுகிறம் என்பதைக் காட்டமுடியும்.

**பண்டிதர்:** மூப்பர் பணி என்பது ஆள் பார்த்துச் செய்யிற விடயமல்ல. இருந்தும் எங்களிட்ட இந்த ஒரு பக்கப் பார்வை நீடித்துச் செல்வதுதான் மிகப்பெரிய கவலை. நாங்கள் ஒவ்வொருவரும் எங்கட கடமையை ஒழுங்காச் செய்வமாக இருந்தால் எல்லாம் சரியாக வரும்.

**கங்காணி:** பண்டிதர் ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டுதான் இப்படிச் சொல்கிறார். எதற்கும் பண்டிதர் ஐயா சுத்தி வளைக்காமல் நேரடியாச் சொல்லுங்கோ.

**பண்டிதர்:** கடந்த 14 ஆம் திகதி 7 மாதக் கர்ப்பிணித் தாயொருவரை குருதிப் பெருக்குக் காரணமாக மந்திகை ஆதார வைத்தியசாலையில அனுமதித்திருக்கினம். அதிகாலை 5 மணிக்கு வைத்தியசாலையில அனுமதித்த போதிலும் காலை 6.30 மணிவரை எந்தச் சிகிச்சையும் வழங்கப்படவில்லை. அங்க கடமையில இருந்த தாதிய உத்தியோகரிட்ட,

குருதிப்பெருக்கிற்கு இன்னும் சிகிச்சை அளிக்கவில்லை என்று அந்தப் பெண்ணின்ர கணவர் சொல்லியிருக்கிறார். இருந்தும் எந்த நடவடிக்கையும் இல்லை.

ஆத்தாமல் போய் வைத்தியசாலை மேல் அதிகாரிக்கு அந்தக் குடும்பத்தினர் தகவல் கொடுக்க அந்த மேலதிகாரி வந்து தாயைப் பார்த்துவிட்டு உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு போங்க என்று சொல்ல நேரம் காலை 8.45 ஆயிற்று.

வீட்டுக்காரர் பதற்றத்தோட கர்ப்பிணித்தாயை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு அறுவைச் சிகிச்சை மூலம் நஞ்சு ஊறிய நிலையில் குழந்தை பிரசவிக்கப்பட்டது. எனினும் மறுநாள் அந்தக் குழந்தை இறந்துவிட்டது.

இது தொடர்பில பாதிக்கப்பட்ட தந்தைக்கு யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர் சொன்னவராம் நீங்கள் இன்னும் அரை மணித்தியாலம் தாமதித்து வந்திருந்தால் தாயையும் காப்பாற்ற முடியாமல் போயிருக்கும். அதேநேரம் அரை மணித்தியாலம் முதல் கொண்டு வந்திருந்தால் குழந்தையையும் காப்பாற்றியிருக்கலாம் என்று.

(பண்டிதர் இப்படிச் சொன்னதும் ஆலடி மாநாட்டில் சிறிதுநேரம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்கும்பொருட்டு வாத்தியார் குரல் கொடுத்தார்)

**வாத்தியார்:** பார்த்தியளே கொஞ்ச நேரம் பிந்தியிருந்தால் தாயையும் காப்பாற்ற முடியாமல் போயிருக்கும். இப்படியான விடயங்களால எங்கட குடும்ப உறுப்பினருக்கு ஒன்று நடந்தால் எப்படி நாங்கள் அவசரமாகச் செயற்படுவமோ அதுபோல வைத்தியசாலைப் பணியாளர்கள் செயற்படவேணும்.

ஏனோ தானோ என்ற அசமந்தப்போக்கு எவ்வளவோ பெரிய இழப்புக்களைத் தந்துவிடும் என்பதால எதிலும் விழிப்பாக இருக்க வேணும்.

**விதானையார்:** வாத்தியார் எதிலும் விழிப்பாக இருக்கவேணும் என்பதோட இந்த விடயத்தை விட்டுவிடக்கூடாது. இந்தச் சம்பவம் தொடர்பில யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிச்சயம் விசாரணை நடத்தி உண்மை நிலைமையை மக்களுக்குத் தெரியப்படுத்த வேணும்.

பணிப்பாளர் விசாரணை நடத்தி தனது கருத்தை தெரிவிப்பாராக இருந்தால் ஆலடி மாநாட்டில அதை நாங்கள் வெளிப்படுத்துவம்.

**கங்காணி:** விதானையார் சொல்லுறது நூறுவீதம் சரி. இப்படியான சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதென்பது தண்டனை கொடுப்பதற்கு அல்ல. இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் இருப்பதற்கு. எனவே இது விடயத்தில மந்திகை வைத்தியசாலை நிர்வாகமும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் நடவடிக்கை எடுப்பினம் என்று நம்புகிறம்.

இப்படிக் கங்காணியார் கூற அதை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# ஜனாதிபதி மைத்திரியும் ஏமாற்ற நினைத்தாரா?






உன்னைப்போல் பிறரையும் நேசி என்றார் இயேசு பிரான். அவரின் இந்த வார்த்தை மிகவும் பெறுமதியானது. உன்னைப்போல் பிறரையும் நேசி என்பதற்குள் மற்றவர்களை நானாகப் பார்க்கின்ற பக்குவம் தெரிகின்றது. உன்னைப்போல் மற்றவர்களையும் நேசிக்கும் போதுதான் மற்றவர்களின் துன்பங்களை புரிந்துகொள்ளமுடியும். மற்றவர்கள் எத்தகைய வாழ்க்கை வாழ்கின்றனர் என்பதை அறியமுடியும்.

இதைவிடுத்து நான் வசதியாக இருக்கின்றேன் என்பதற்காக எல்லோரும் அப்படித்தான் இருக்கிறார்கள் என்று நினைப்பதெல்லாம் மிகப்பெரும் அதர்மத்தனம்.

அன்னை திரேசா தொழுநோயாளர்களைப் பராமரிக்கின்றார். இந்தப் பராமரிப்புக்குள் அன்பென்னும் இன்ப ஊற்று பெருகுவதைக் காணமுடியும். ஆக, அன்பு என்பது தான் அடிப்படை. அன்பில்லாத வாழ்வு, இம்சை தருவது. அது யார்க்கும் உதவக் கூடியதன்று.

ஆகவே, உன்னைப் போல் பிறரையும் நேசி என்பதற்குள் மற்றவர்களுக்காக வாழ்கின்ற வாழ்வு வெளிப்படுகின்றது. மானிடர்களின் பாவத்தைச் சுமந்த இயேசுபிரான் மற்றவர்களை நேசித்ததாலேயே பிறர் பாவத்தை அவரால் சுமக்க முடிந்தது.

ஆக, மற்றவர்கள் படும் துன்பத்தை எனக்கானதாகப் பார்க்கின்ற அரசியல் தலைவர்களால் மட்டுமே நல்லதைச் செய்யமுடியும்.

## ஜனாதிபதியை நம்பியிருந்த வலி.வடக்கு மக்கள்

இருந்தும் அத்தகைய தலைவர்களே எங்களுக்கான பஞ்சமாக உள்ளது.

யுத்தம் முடிந்துவிட்டது என்று அறிவித்து ஏழு ஆண்டுகள் அகன்றுவிட்டன. ஆனால் இன்னமும் வலி.வடக்கு மக்கள் தங்கள் ஊர்களுக்குச் செல்ல முடியாமல் உள்ளனர்.

போர் முடிந்து சமாதானம், இயல்பு வாழ்வு ஏற்பட்டுவிட்டது என்று கூறுவதற்குள் வலி.வடக்கு மக்களின் மீள்குடியமர்வும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வும் அடங்கியுள்ளது.

இருந்தும் அதுபற்றி எங்கள் அரசியல் தலைமைகள் முக்கியத்துவம் கொடுக்கத் தயாரில்லை.

கடந்த 18 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன துரையப்பா விளையாட்டரங்கை திறந்து வைக்க வந்திருந்தார்.

புதுப்பொலிவில் புனரமைக்கப்பட்டு துரையப்பா விளையாட்டரங்கு திறந்து வைப்பதென்பது வரவேற்கத்தக்க விடயம்.

எல்லாவற்றையும் புறந்தள்ளிவிடக்கூடாது என்று கருத்துரைப்பவர்களையும் ஆசுவாசப்படுத்துவதற்கேனும் விளையாட்டரங்கின் மீள் திறப்பு விழா உதவும். அந்த வகையில் அதனை ஏற்றுக் கொள்ள முடியும்.

அதேவேளை தாங்கள் வாழ்ந்த மண்ணில் மீளக் குடியமர்வதற்கு இன்னமும் அனுமதி வழங்கவில்லையென்பது வேதனைக்குரிய விடயமல்லவா?

இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது தமிழ்மக்கள் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். ஒரு சிங்களத் தலைவராக தமிழ்மக்கள் அவரை ஒருபோதும் பார்த்தில்லை. அவரின் எளிமையான போக்கு, தமிழ் மக்களின் துன்பங்களை உணர்ந்த தன்மை, மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்டபோது அந்த குடும்பத்திற்கு ஆறுதல் சொல்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு ஓடி வந்த அவரின் பெருந்தன்மை என்பன தமிழ்மக்களை மட்டுமல்ல மனிதநேயமிக்க அனைவரையும் விருப்புக்கொள்ளச் செய்யும்.

எனினும் இத்தகைய உயர் பண்புகள் உள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கை திறந்து வைப்பதற்காக வருகை தந்தபோது வலி. வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களில் குடியிருப்பதற்கான அனுமதியை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. இருந்தும் அது நடக்காததால் அப்பகுதி மக்கள் மிகப்பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.

தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளாத ஆட்சித்தலைவர் ஒருவர் ஏமாற்றினால் அதன் தாக்கம் சாதாரணமானதாக இருக்கும். மாறாக நம்பிக்கைக்குரிய தலைவர் பேசாமல் போனால் அது மக்களின் நம்பிக்கையை வேரறுத்துவிடும்.

எனவே இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலி.வடக்கு மக்களின் மீள் குடியமர்வு தொடர்பில் ஒரு நல்ல பதிலை வழங்கவேண்டும் என்பது மக்களது தாழ்மையான கோரிக்கை.

இதற்கு மேலாக தமிழ் மக்கள் தமது அரசியல் தலைமை மீது மிகுந்த அதிருப்தி கொண்டுள்ளனர்.

இந்த அதிருப்தி நியாயமானதாயினும் தமக்கான



அரசியல் தலைவர்கள் என்போர் யார்? அவர்கள்மீது எடுத்த எடுப்பில் நம்பிக்கை கொள்ளலாமா என்ற கேள்விகளுக்கு தமிழ்மக்கள் சந்தர்ப்பம் கொடுத்திருப்பார்களாயின் - அவை பற்றி ஆராய்ந்திருப்பார்களாயின் இன்று இப்படியொரு மோசமான நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது. கடந்த முறை ஜெனீவா சென்று எங்கள் தலையில் மண்ணைக் கொட்டிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை இப்போது ஜெனீவாவில் எங்கள் குறைபாடுகள் பற்றி எடுத்துரைக்கின்றனராம்.

எப்படி இருக்கிறது நிலைமை. தமிழ்மக்களை ஏமாற்றுவதற்கு ஒரு அளவே இல்லையா? முன்பு இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றுவதற்காக கதைத்தவை. உங்கள் ஆதரவால் மகிந்த ராஜபக்ஷவை மின்சார நாற்காலியில் இருந்து காப்பாற்றி விட்டேன் என்று அமைச்சர் மங்கள சமரவீர கூறியமை என்ற சம்பவங்கள் நடந்த போது தமிழ் அரசியல் தலைமை ஜெனீவாவில் கதைத்தவை தமிழர்களுக்காகவென்று நாம் நம்ப வேண்டுமென்று நினைப்பது எத்துணை மடமைத்தனம். இத்தகையவர்கள் தமிழ் மக்களை இன்னமும் ஏமாற்றிக் கொண்டே இருக்கின்றனர்.

மகிந்த ராஜபக்ஷவை மின்சார நாற்காலியிலிருந்து காப்பாற்றி விட்டேன் என்று அமைச்சர் மங்கள சமரவீர கூறிய போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை என்ன சொல்லியிருக்க வேண்டும்.

அப்போதெல்லாம் அமைதியாகவிருந்த கூட்டமைப்பின் கொழும்புத்தலைமை இந்த வருடம் ஜெனீவா சென்று தமிழர்களின் பிரச்சினையை எடுத்துரைக்கின்றனராம்.

என்ன செய்வது தமிழ் மக்களை சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாற்றியதை விட, எங்கள் தலைமைகள் ஏமாற்றியதே அதிகம் எனலாம்.

இருந்தும் தமிழ் மக்கள் ஆராய்வது தொடர்பில் கவனம் செலுத்தாமையால் ஏமாற்றுபவர்கள் வெற்றியும் பெற்று விடுகின்றனர்.

எது எப்படியாயினும் ஜனாதிபதி மைத்திரி வலி. வடக்கு மக்களின் மீள்குடியமர்வு பற்றி எதுவும் கூறாதது பெரும் ஏமாற்றத்தை தருகிறது.

விதுரன்




# உயிர் காப்பான் தோழன்



இரத்தினபுரி என்னும் ஊரில் சோமு.ராமு என்ற இரு நண்பர்கள் இருந்தார்கள்.

அவர்கள் அந்த ஊரில் உள்ள பாடசாலையில் எட்டாம் வகுப்பு படித்து வந்தார்கள். இருவருமே நல்ல மாணவர்கள்தான் என்றாலும் ராமு சோமுவை விட கொஞ்சம் நன்றாகப் படிப்பான்.

இதனால் அவனுக்கு கர்வம் அதிகம். அடிக்கடி சோமுவை கேலி செய்து கொண்டே இருப்பான்.

இதனால் சோமுவுக்கு மனம் புண்படும்.

ஆனால் இதை அவன் அப்பா, அம்மாவிடம் சொல்ல மாட்டான். ஒரு முறை ராமு சோமுவைக் கேலி செய்து கொண்டிருந்த போது ராமுவின் அப்பா பார்த்து விட்டார்.

உடனே ராமுவிடம் நீ உன் நண்பனை இவ்வாறு கேலி செய்யக்கூடாது.

அவனுக்கு பாடத்தில் சந்தேகம் என்றால் அவனுக்கு உதவ வேண்டுமே தவிர கேலியும் கிண்டலும் செய்வது நல்லதல்ல என்று அறிவுரை கூறினார்.

ராமு இதை கேட்கவேயில்லை.

ஒரு முறை வகுப்பில் ஆசிரியர் ஒரு கேள்வியை சோமுவிடம் கேட்டார்.

அவனுக்கு தெரியவில்லை. பக்கத்தில் இருந்த நண்பன் ராமுவிடம் அதே கேள்வியை கேட்டபோது அவன் பதில் சொல்லிவிட்டான்.

உடனே ஆசிரியர் ராமுவை பாராட்டிவிட்டு, சோமுவிடம் பார்த்தாயா அவனும் உன் ஊரிலிருந்து தானே வருகிறான். அவன் மட்டும் எப்படி படித்து விட்டு வருகிறான், நீ ஏன் இப்படி இருக்கிறாய் என கடுமையாக திட்டிவிட்டார்.

இதைக்கேட்ட சோமுவுக்கு அழுகை அழுகையாக வந்தது.

பாடசாலை முடிந்தவுடன் வழக்கம்போல் இருவரும் சேர்ந்து வந்த போது ராமு சோமுவை கிண்டல் செய்தான்.

ஏற்கனவே ஆசிரியர் திட்டிய வருத்தத்தில் இருந்த சோமுவுக்கு, ராமு மேல் கோபம் வந்துவிட்டது.

இதோ பார் ராமு நீ பெரிய படிப்பாளிதான். ஒப்புக் கொள்கிறேன்.

ஆனால் உன்னிடம் படிப்பைத்தவிர வேறு எதுவும் தெரியாது என்று சொன்னான்.

இப்படி சொன்னவுடன் ராமுவுக்கும் கோபம் வந்து விட்டது.

இனிமேல் என்னிடம் பேசாதே என்று கோபித்துக்கொண்டு சென்றுவிட்டான்.

இப்படியாக இந்த இருவருக்கும் பகை வந்து பிரிந்து விட்டார்கள்.

இவர்கள் இருவரும் பிரிந்தவுடன் மற்ற சிறுவர்கள், ஒருவனை பற்றி மற்றவனிடம் கோள் சொல்லி விரோதத்தை வளர்த்து விட்டார்கள்.

இப்பொழுது இவர்கள் இருவரும் தனித்தனியாகத்தான் பாடசாலைக்கு சென்றார்கள். அருகருகே அமர்ந்திருந்தாலும் பேசிக்கொள்ள மாட்டார்கள்.

நாட்கள் இப்படியே ஓடிக்கொண்டிருந்தன.

அவர்கள் பாடசாலையில் ஆண்டு விழா வந்தது. விளையாட்டுப்போட்டிகளுக்கான அட்டவணைகள் அறிவிக்கப்பட்டன.

அந்த விளையாட்டுப் போட்டிகளில் சோமுவின் அணிதான் அதிகமான பரிசுகளை வென்றது.

சோமுவே நான்கைந்து போட்டிகளில் பரிசுகளை வென்றதால் அவனுக்கு அந்த ஆண்டு விளையாட்டுப் போட்டியின் கதாநாயகன் என்ற பட்டம் கிடைத்தது.

இப்பொழுது சோமுவை எல்லோரும் புகழ ஆரம்பித்து விட்டார்கள்.

இதனால் ராமு மனம் புழுங்கினான். அவன் வகுப்பு ஆசிரியர் ராமு எப்படி படிப்பில் மன்னனோ அதுபோல சோமு விளையாட்டில் மன்னன் என்று புகழ்ந்துரைத்தார்.

இதனால் ராமுவின் மனம் மேலும் புழுக்கமாயிற்று.

ஒரு நாள் ராமுவின் அப்பா, அம்மாவும், அவன் தங்கையும் பக்கத்தில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்றுவிட்டு மீண்டும் வீடு திரும்ப நள்ளிரவுக்கு மேல் ஆகிவிட்டது.

பேருந்தை விட்டு இறங்கி காட்டுப் பாதையில் ஒரு கிலோ மீற்றர் நடந்தால்தான் அவர்கள் ஊருக்கு வரமுடியும்.

வண்டி வசதிகளும் கிடையாது. என்ன செய்வது என்று யோசிக்காமல் மூவரும் அந்த இரவில் ஊருக்கு வர நடக்க ஆரம்பித்து விட்டார்கள்.

வீட்டில் இருந்த ராமுவுக்கு தன்னுடைய அப்பா, அம்மா, தங்கை இன்னும் வரவில்லையே என்ற கவலையில் வீட்டில் அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தான்.

என்ன செய்வது பேருந்து நிறுத்தம் வரை போய் பார்ப்போம் என்று நினைத்தான்.

ஆனால் தனியாக செல்வதற்கு பயமாகக் கூட இருந்தது. பக்கத்திலுள்ள அவன் நண்பர்களை துணைக்கு அழைத்தான். ஆனால் ஒருவர் கூட அவனுடன் வர விரும்பவில்லை.

காரணம் அவர்களுக்கும் பயம்தான். ராமு தனியாக கிளம்பிவிட்டான். அந்த இருட்டு அவனை பயமுறுத்த தொடங்கிவிட்டது.

மனதை தைரியப்படுத்திக் கொண்டு எல்லா கடவுளையும் கும்பிட்டுக்கொண்டு நடந்தான்.

அரை கிலோ மீற்றர் தூரம் நடந்திருப்பான். எதிரில் அவன் அப்பா, அம்மா வருவதை பார்த்தவுடன்தான் இவனுக்கு நிம்மதி வந்தது.

திடீரென்று ஒரு கூட்டம் அவன் அப்பா, அம்மாவை சுற்றி நின்று கத்தியை காட்டி மிரட்டுவதை பார்த்தான். இங்கிருந்து சத்தம் போட வாயைத் திறக்க முயற்சி செய்தான். அதற்குள் அவன் வாயை யாரோ பொத்தினர்.

பயந்து மிரண்டு திரும்பி பார்க்க சோமு ஸ்..ஸ்... சத்தம் போடாத இப்ப என்கூட வா என்று அவனை சைகை காட்டி அழைத்து ஒரு புதர் பக்கம் சென்றவன் கை நிறைய கற்களை எடுத்துக்கொள்ள சொல்லி சைகை செய்தவன் விருவிருவென புதருக்குள் சென்றான்.

ராமுவும் கூடவே புதருக்குள் சென்றான். அங்கிருந்து சுற்றி நின்றவர்களை நோக்கி குறி பார்த்து கல்லை எறிய ஆரம்பித்தனர்.

சுற்றி நின்று அவர்களை மிரட்டிக்கொண்டிருந்த கொள்ளையர்கள் மேல் கற்கள் வந்து தாக்கியதும் பயந்து விட்டனர்.

அந்த இடத்தை விட்டு பயந்து ஓடத்தொடங்கினர்.

பத்து நிமிடங்கள் அப்படியே கழிந்ததும், சோமு, ராமுவை சைகை காண்பித்து வெளியே வரச்சொன்னான். ராமுவின் அப்பா, அம்மாவுக்கு இவர்கள் இருவரையும் பார்த்ததும் மிகுந்த சந்தோசம்.

பரவாயில்லை, புத்திசாலித்தனமாக செயற்பட்டீர்கள், இருந்தாலும் இந்த நேரத்தில் இப்படி வருவது ஆபத்துதான் என்றனர்.

உடனே சோமு நீங்கள் கூட இந்நேரத்துக்கு வரவேண்டுமா?, இரவு அங்கேயே தங்கி வந்திருக்கலாம் அல்லவா என்று கேட்டான்.

உண்மைதான், தவறு செய்து விட்டேன். இது எனக்கு நல்ல படிப்பினை என்றவர் வாருங்கள் போகலாம் என்று எல்லோரையும் அழைத்துச் சென்றார்.

ராமு சோமுவின் கைகளை பிடித்துக்கொண்டு என்னை மன்னித்து விடு. நீ எப்படி என் பின்னால் வந்தாய் என்று கேட்டான்.

நீ வழித்துணைக்கு எல்லோரையும் கூப்பிட்டதை பார்த்தேன்.

ஆனால் என்னைக் கூப்பிடவில்லை, இருந்தாலும் நீ தனியாக போகத் துணிந்து விட்டதால் உனக்கு ஏதேனும் ஆபத்து வந்து விடுமோ என்று பின்னாலேயே வந்தேன் என்றான்.

நண்பனின் கைகளை நன்றியுடன் பிடித்துக்கொண்டான் ராமு.

இப்பொழுதெல்லாம் ராமுவும் சோமுவும் ஒன்றாக பாடசாலைக்கு செல்கிறார்கள், ராமு சோமுவை கிண்டல் செய்வதை நிறுத்தி விட்டான். அவனை பொறுத்தவரை ஒவ்வொருத்தருக்கும் ஒரு திறமை இருக்கும் என்பதை புரிந்து கொண்டான்.

**குட்டீஸ்!**

**ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு திறமை இருக்கும். ஆகவே யாரையும் குறைத்து மதிப்பிடக்கூடாது. என்பதை நாமும் புரிந்து கொண்டு செயற்படவேண்டும்**

## இலங்கை பற்றி அறிவோம்

- **இலங்கை எப்போது (பிரித்தானியஏவிடம் இருந்து) சுதந்திரம் பெற்றது?. - 04.02.1948 இல்**
- **இலங்கை அரசு எவ்வாறு அழைக்கப்படுகின்றது? இலங்கை சனநாயக சமத்துவ குடியரசு (Democratic Socialist Republic of Sri Lanka)**
- **இலங்கையில் உயர்ந்த நீர்வீழ்ச்சி எது? - பம்பரகந்த.**
- **இலங்கையில் நீளமான ஆறு எது? மகாவலி கங்கை 335 கி. மீ**
- **இலங்கையின் உயர்ந்த மலை எது? - பீதுருதலாகல (Pidurutalagala) கடல் மட்டத்திலிருந்து 2524 மீற்றர் (8200 அடி)**








தெறியை கபாலி முறியடிக்குமா?

தமிழ் - சிங்களம் - முஸ்லிம் இவை மூன்றுக்கும் என்ன வித்தியாசம்?

மக்கள் பார்வைக்கு ஜனாதிபதி மாளிகையை விட்டது பற்றி?

**கமல் — நெல்லியடி**

இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தானே தேவன் அன்று என்பது உண்மையா?

கன்னங்கரேல் என்று இருக்கிற (நம்மள மாதிரி) ஒருத்தர் வெண்ணெய் மாதிரி இருக்கிற பொண்ணை மோட்டார் சைக்கிளில் ஏத்திட்டுப் போவார். அந்த நேரம் நம்ம வயிறு பத்தி எரியுமே. அந்தவயிறெரிவு தாங்க இது.

**கௌரி — இமையாணன்**

சாதி வேறுபாட்டில் வாழ்பவர்கள் பற்றி?

இவங்க இன்னும் இந்த உலகத்திலதான் வாழுறாங்களா? என்கின்ற கேள்வி வரும்?

**நந்தகுமார் — மானிப்பாய்**

தமிழ் - சிங்களம் - முஸ்லிம் இவை மூன்றுக்கும் என்ன வித்தியாசம்?

சிங்களம் பெரும்பான்மை. தமிழும் முஸ்லிமும் சிறுபான்மை. இப்போதைக்கு இதைவிட வேறு எதையும் கூறிவிட முடியாது.

**ரிக்கா — கந்தர்மடம்**

பேஸ்புக்கில அப்படி என்னதான் இருக்கு?

அந்தக் கறுமம்தான் எனக்கும் புரியவில்லை. அதிலும் சில தம்பிகள் அதில மனிசன் - பண்டி. இப்படி தத்துவங்களைப் போட்டு தங்கட மேலதிகாரிகளை காக்கா பிடிக்கிறார்கள் என்பது மட்டும் புரியுது.

**பரல் — ஆனைக்கோட்டை**

எல்லோருக்கும் பிடித்தது உங்களுக்கு பிடிக்கவில்லை என்றால்?

எல்லோருக்கும் பிடிக்காதது எனக்குப் பிடித்திருக்கிறது என்று அர்த்தம்.

**டெனிஸ் — வளலாய்**

அன்பில் சிறந்தவர்கள் ஆண்களா? பெண்களா?

அன்பை நிரூபிக்க பெண் அழுவாள். ஆண் தற்கொலை செய்வான். என்னைப் பொறுத்த வரை தற்கொலை செய்யும் கோழையைவிட அழுது நிரூபிக்கும் பெண் மேல்.

**சயந்தன் — யாழ்ப்பாணம்**

நடிகன் ஒருவனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள்?

நடிக்க தெரிந்தாலே போதும்.



**லயன்சன் — வளலாய்**

தெறியை கபாலி முறியடிக்குமா?

"நெருப்புடா" என்கின்ற ஒற்றைச் சொல் இந்திய சினிமாவையே மிரள வைத்திருக்கிறது. நீர் முறியடிக்குமா என கேள்வி கேட்கிறீர்.

**சதுர்சன் — ஆனைக்கோட்டை**

மக்கள் பார்வைக்கு ஜனாதிபதி மாளிகையை விட்டது பற்றி?

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எப்போதும் மக்கள் மனங்களில் இருப்பவர் என்பதை நிரூபிக்கிறது.



"என்னப்பா! தலைல ஸ்கேன் எடுக்கச் சொன்னா பாக்கெட்ல எடுக்கற...?"

"ரெண்டுமே காலிதான், எங்க எடுத்தா என்ன.."

**மயூரன் — உரும்பிராய்**

கூகுளில் அதிகம் பார்க்கப்படுபவை என்ன?

"நீ கூகுளில் என்ன தேடுவாய்?" என நான்கு நண்பர்களிடம் கேட்டால் விடை தானாகக் கிடைத்துவிடும்.

**பானு — உடுப்பிட்டி**

நம்பிக்கை இழக்கப்படும் சந்தர்ப்பங்கள்?

நாங்கள் நம்பி ஓட்டுப் போட்டவர்கள். தங்கள் சுயநலன்களுக்காக பேசிய பேச்சுக்களையும் தேர்தலில் அடுக்கிய உறுதி மொழிகளையும் மறந்து செயற்படும் போது.

**சிவா — புத்தூர்**

காதலா நட்பா சிறந்தது?

பிரியாமல் இருக்கும்வரை இரண்டும் சிறந்ததுதான்.

**கிருஷா — வரணி**

இந்தக் காலத்தில் யாரை நம்புவது?

அண்மையில் நான் காரைநகர் பஸ்ஸில் சென்று கொண்டிருந்தேன். மானிப்பாயில் ஒரு இளம் பெண் பஸ்ஸில் ஏறினார்.

ஒரு பக்கமாக சில இளைஞர்கள் நின்றார்கள். நான் இன்னொரு பக்கம் நின்றேன். முறைக்கு அந்தப் பெண் நான் நிற்கும் பக்கம் தான் வரவேண்டும்.

ஆனால் அந்தப் பெண் அந்த இளைஞர் பக்கம் சென்றாள். இருக்கையில் இருந்தவர் ஒருவர் பிள்ளை அந்தப்பக்கம் போய் நிக்கலாமே? என்றார்.

அதற்கு அந்தப் பெண் நெத்திப்பொட்டில் அடித்தது போல ஒரு வார்த்தை சொன்னாள். "அண்ணாக்களை நம்பினாலும் இந்த அங்கிளாக்களை நம்பக் கூடாது" என்று.

**நிஷாந் — தெல்லிப்பழை**

வியாசரே எனக்கு ஆயிரம் கேள்பிரண்ட். உங்களுக்கு அரைவாசியைத் தரவா?

ஐயய்யோ ஒண்டைக் கட்டியே சமாளிக்க முடியாமல் நான் படுகிற பாட்டில் நீ ஐநூற தாறியா? வேண்டாமப்பா. வேணுமென்றால் அந்த ஐநூறோட ஒன்றைக் கூட்டி நான் தருகிறேன் பரவாயில்லையா?

**ஜஸ்மின் — வரணி**

அம்மாட்ட பேச்சு வாங்காமல் இருக்க என்ன பண்ணனும்?

அப்பா செய்யிற தப்பை எல்லாம் அம்மாவுக்கு போட்டுக்குடு.

**சயன் — யாழ்ப்பாணம்**

அண்மையில் ரம்பப் பாதித்த விடயம்?

அரசாங்கம் மீது சம்பந்தன் மென் சாடல். 2016-ல் இனப் பிரச்சினைக்குத் தீர்வு இன்னும் 193 நாள் இருக்கு பாஸ்.

### அன்பு வாசகர்களே!

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS)**

**021 567 1532**

# கவிதைக் கலசம்

## வாடாதநேசம்

ஊர் பேச்சில் குற்றமில்லை
உண்மையில் எவரும் சுத்தமில்லை
உறுதியாய் பணம் நிற்பதில்லை
உலகில் இதை ஏற்பாருமிலலை
வெந்த புண்ணில் வேல் பாய்ச்சி
வேடிக்கை பார்க்கிறது- எம்
மக்களின் மரத்த மனச்சாட்சி
பணத்தால் பாசம் வீழ்ச்சி
பலியெடுக்கிறது சுயநல எழுச்சி
தவறுகளால் பிறந்த தத்துவம்- உள்ளம்
தானுணர்ந்தாலே மகத்துவம்-இன்று
தரணியாள்கின்றது பணத்துவம்
அன்பால் மன்னிப்பு- அதை
அடக்குகிறது அதிகார கண்டிப்பு
பண்பால் பிறந்த பணிவு- பணம்
பாதாளம் வரையில் என்ற துணிவு
சேர்த்துவைத்த பணம்- காலத்தில்
சென்றழியும் பிணம்-நாம்
கோர்த்துவைத்த அன்பின் மனம்- என்றும்
வாடாது அவ் வசந்தம்
மண்ணில் தினம்

**பீ.கிருஷிகன் பியோ**
**இளவாலை**

## வாழ்க்கையின் வெற்றி

தோல்விகளுக்குப்பின் துடிப்புடன் எழு
தோற்றவனைக் கொஞ்சம் தட்டிக்கொடு
அடுத்தவனுக்காய் கொஞ்சம் விட்டுக்கொடு
புகழ்ச்சிக்கெல்லாம் செவிடனாய் இரு
இகழ்ச்சிக்கெல்லாம் ஊமையாய் இரு
இதயத்தின் மொழிகளில் கவனமாய் இரு
இலக்குகள் பற்றி உறுதியாய் இரு
இழப்புகள் வந்தால் மீட்டுக்கொள்ளலாம்
தவறுகள் என்றால் மாற்றிக் கொள்ளலாம்
காயங்கள் என்றால் ஆற்றிக் கொள்ளலாம்
காலம் கனியும் என்று காத்திரு
காலம் கைகொடுக்கவில்லையா?
களத்தினில் நீயே கால்பதி
வெற்றிச் சுவடுகளை தடம்பதி
கோபத்தை கொஞ்சம் குறைத்துக்கொள்
பண்பாய் பேசு-பரிதியாய் இரு
பணியாளர் என்றால் கற்றுக்கொடு
புதியவர் என்றால் ஒரு வாய்ப்புக்கொடு
சூழ்நிலைகளை சுமுகமாய் சமாளி
வாழ்க்கையின் வெற்றி உனதுகையில்
வளமாய் வாழ வழிகள் பல
வசந்தம் வீச உன்னை நேசி

**அ.நளினாசினி**
**கோண்டாவில்**

## பஞ்சம் தீருமா

பாதையோ பள்ளம் திட்டி
பயணமோ வெகுதூரம்
போவதோ துணையின்றி- இதில்
வாழ்க்கையோ பெருஞ்சுமை
மாட்டுவண்டி பூட்டி அதிலே
பாரம் தனை ஏற்றி
மாடாய் உழைத்தவன்- தினம்
பசியால் துடிக்கிறான்
பஞ்சம் தீருமா பசுமை நிறையுமா
உலகம் செழிக்குமா
உண்மை நிலைக்குமோ
ஏழை விவசாயி எண்ணியது
எளிதில் நலம் காணுமா

**சி.திவ்வியா**
**யா/பண்ணாகம்**
**மெய்கண்டான் ம.வி**

## வீட்டுக்குள் வளர்ந்த மரம்

உம்மால் விடியும் என்று
காத்திருந்த எங்களுக்கு
அடிமை தந்த தந்திரிகளே
முடியும் முடியும் என்று
ஒருநாள் விடியும் விடியுமென்று
மூச்சைக் காற்றுடன் சங்கமித்து
மண்ணுக்குள்
தன்னை விதையாக்கிய
வீரரின் பெயர் சொல்லி
புள்ளடி வாங்கிவிட்டு
இப்போது எதையோ
வெட்டுகிறீர் கொத்துகிறீர்
விடியும் என்று
வெறும் கத்து கத்துகிறீர்
சமீபத்தில்தான்
தமிழருக்குப் புரிந்தது
வீட்டுக்குள் யானை புகுந்த கதை
நடக்கட்டும்...
கேட்பதற்காளில்லை
கேள்விகேட்டால் ஆளில்லை
இனி என்ன செய்ய
இருப்பினும்
தமிழரின் சாபம் உங்களை...

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 306



## விபத்து

அறிவியலின் ஆளுமையால்
அன்றாடம் உயிர் இழப்பு
அவர்தம் பணம் கொடுத்து
அனுதினமும் உயிர் துறப்பு
உயிர் உள்ள ஜீவன்கள்
உங்களுக்காய் உழைத்தபோது
உயிர்களுக்கு சேதம் இல்லை
முன்னோரின் வழிதேடல்
முடக்கி விடப்பட்டதனால்
நித்தம் இங்கே உயிர் பறிப்பு
நிம்மதியின் வழி மறிப்பு

இளவரசு
ஒட்டுசுட்டான்

## ஏழ்மையின் சொகுசுப் பயணம்

பணத்தை சிந்தி பலனைப் பெறும்
மக்கள் கூட்டம் செல்லும்
சொகுசு வாகனத்திலும்
சிறப்பானது
ஏருழுவன் தன் வியர்வை சிந்தி
விளைச்சலைப்பெறும்
உழவர் கூட்டம்
செல்லும் இந்த
மாட்டுவண்டியின் சொகுசு
இரண்டிலும் எது நிலையானது
அறிந்தான் உழவன்
அறிவோம் நாமே

*எஸ்.கஜபிரியன்*
*சுன்னாகம்*

## புதிய உலகு தேடி...

பெற்றமகன் சுற்றத்துடன்
பெரும் தேசம் சென்றுவிட்டான்
துணைவியும் துறந்தாள் வாழ்வை
துன்பத்தில் எனை விட்டு
யாக்கை வதைத்து
யாசக பணத்திற்காய்-யான்
வாழ்க்கை தொடங்கிவிட்டேன்

*ச.ஆனந்தி*
*நல்லூர்*

## காலமாற்றம்

ஆதிகால மக்கள் வீடு வேய்வதற்கும்
வேலியடைப்பதற்கும் பயன்படுத்திய
ஓலைக்கிடுகுகளை வண்டியிலேற்றி
வீதிவழி சென்று வியாபாரம் செய்து
வாழ்ந்த வாழ்க்கை முறையை
எண்ணிப் பாருங்கள்; இன்று
விஞ்ஞான வளர்ச்சியினால்
விதவிதமான வாகனங்களை
உருவாக்கிப் பயன்படுத்தும்
நவீன இயந்திர வாழ்க்கை முறைக்கு
நாமும் இதமாக மாறிவிட்டோம்

*துரை, தென்மட்டுவில்*

## நம்ம மாட்டுவண்டி

முன்னோர்களின்
முக்கிய தேவைகளை பூர்த்திசெய்ய
முதுகெலும்பாய் திகழ்ந்த வண்டி
நவீன வண்டிகளின் வருகைக்கு
வழிகாட்டியாய் இருந்த வண்டி-மனிதர்கள்
மமதை இல்லாமல் சென்ற ஒரேவண்டி-அது
நம்ம மாட்டுவண்டி மட்டுமே

*யோ.காண்டீபன், மானிப்பாய்*

## நீடுவாழி

பண்டைய கலாசாரத்தை
பக்குவமாய் பறைசாற்றி
வெள்ளை மாடு இரண்டு பூட்டி
வண்டி நிறைய பாரமேற்றி
எரிபொருள் தட்டுப்பாடு
எமையொன்றும் செய்யாதென்று
தன்மான உணர்வோடு
தளராத துணிவோடு
பண்பாடு கலையாது
தலைப்பாகை அணிந்து
செல்லும் தன்மானத் தமிழனே
நீடுவாழி

*கஜா, முரசுமோட்டை*

## நாடோடிகள்

எருது மாடு காலசைவில்
எரிபொருள் ஏதுமின்றி
உருளும் வண்டி எடுத்து வரும்
கிடுகு ஓலை எம் வீட்டுத்
திண்ணை மறைக்கவா!
அல்ல, மண்ணைப்
பறிகொடுத்து
நிலமிருந்தும் நாடோடியாக
இன்னும் ஓடியாத
அகதி வாழ்வின்
அடிப்படை வசதிக்கு
இல்லிடம் அமைக்கவா!

*அராலியூர் சோ.சிவகுமாரன்*

## வேதனை மேல் வேதனை

உழைப்பிற்கு தலை வணங்கி
முயற்சியோடு முன்னேறத்துடிக்கும்
உழைப்பாளியே உன் துணிவு...
இங்கு அனைவர் மனதிலும்
மகிழ்வோடு துளிர்த்தால்
வேலையே இல்லை என்று
வேதனைப்படுவோர் குறைந்து
மகிழ்ச்சியான வாழ்வு
நாளை மலர்வது
நிச்சயம் என்பது...
பலருக்குப் புரியாமல் இருப்பது
வேதனைமேல் வேதனை

*வ.ச.செல்வராசா*
*திருநாவலூர்*

# மௌனத்தின் தேடல் -307



**அன்பு வாசகர்களே !**


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 23.06.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# எந்த நேரமும் வெடிக்கலாம் என்ற ஆபத்தான கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் இலங்கையின் இராணுவ ஆயுதக் களஞ்சியங்களும் தொலைந்து போயிருக்கும் ஆயுதக் கிடங்குகளும்





"போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து அநுராதபுரத்தின் ஓயாமடுவ பிரதேசத்தில் றம்பேவ பகுதியிலிருக்கும் ஓர் அமைவிடத்திற்கு இலங்கை இராணுவத்தின் மத்திய ஆயுதக்களஞ்சியத்தை 2010 இல் இடமாற்றும் திட்டமொன்று பற்றிய வாதப் பிரதி வாதங்கள் மத்தியில் இழுபறிப்பட்டு வந்த அத்திட்டம் 2010 இலிருந்து இன்றுவரையில் தொலைந்து போன ஒரு திட்டமாக இருந்து வருவது இப்போது இராணுவத்திற்கு ஒரு இமாலய பிரச்சினையாகியுள்ளது. தற்போது வியாங்கொடையில் அமைந்திருக்கும் ஆபத்தான பாரிய ஆயுத -வெடி பொருட்கிடங்கின் பாதுகாப்பினை உறுதிசெய்து கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பிற்கு இராணுவம் முகம்கொடுத்துள்ளது."

சாலாவ இராணுவ முகாமில் அமைந்துள்ள பாரிய ஆயுத வெடிபொருட்கிடங்கில் அண்மையில் ஏற்பட்டிருந்த வெடிவிபத்தினால் நாட்கணக்கில் நீடித்து நிகழ்ந்த பேரழிவுகள் பரந்துபட்ட சுற்றாடல் பிரதேசங்களையும் வீடுகள் - உடைமைகளுடன் மக்களையும் பெருமளவில் பாதித்த காரணத்தினால் இலங்கை இராணுவத்தின் பொறுப்பிலிருந்து வரும் ஆயுத வெடிபொருட்களஞ்சியங்கள் கிடங்குகளின்பால் அரச மற்றும் நாட்டு மக்கள் மட்டுமல்லாது வெளிநாடுகளின் பார்வையும் இலங்கை மீது மையங்கொண்டுள்ளது. எப்படியும் *சண்டேலீடர்* பத்திரிகை இதுமட்டில் மேற்கொண்ட புலன் விசாரணைகளின்படி *ஓயாமடுவ*வில் இருக்கும் இராணுவ மத்திய ஆயுதக் களஞ்சியத்தை இடம்மாற்றி அமைப்பதற்கென 2010 இலிருந்து ஆரம்பமாகி இழுபறியிலிருந்த இத்திட்டம் கடந்த சில ஆண்டுகளாக கைவிடப்பட்ட நிலையிலிருந்து வந்தது மட்டுமல்லாமல் இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் போலவே நாட்டின் பாதுகாப்பு நிறுவனங்களுங்கூட மேற்படி திட்டத்திற்கு உண்மையில் என்னதான் நடந்தது என்ற துல்லியமான அறிவை கொண்டவர்களாக இல்லை.

உண்மையில் *ஓயாமடுவ* பிரதேசத்திற்குள்ளாகவே இலங்கை இராணுவத்தின் மத்திய ஆயுதக்களஞ்சியத்தை இடம்மாற்றி அமைத்துக்கொள்வதற்கான திட்டமொன்று தனது பதவிக் காலத்தின் 2010-2011 கால கட்டத்திலேயே விவா தத்திலிருந்து வந்ததாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ எமது *சண்டேலீடர்* பத்திரிகைக்கு உறுதிப்படுத்தியிருந்தார். இலங்கையின் தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்குச் சொந்தமாக அநுராதபுரம், ஓயாமடுவவில் இருக்கும் பண்ணைக் காணியொன்றே அதற்குரிய இடமாக அடையாளப்படுத்தப்பட்டதாயுமிருந்ததாக கூறும் அவர் சாலாவ முகாம் வெடிபொருட்கள் களஞ்சியத்தின் பாரிய வெடி பொருள் இருப்பினை படிப்படியாக குறைத்துகொள்ளும் படியாக அவற்றை சிறிது சிறிதாக இடம்மாற்றும்படி அப்போதிருந்த அதிகாரிகளுக்கு தான் பல தடவைகளிலும ஆணையிட்டிருந்தேன். இலங்கை இராணுவத்திற்குச் சொந்தமான அந்த வெடி பொருட்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அப்போது அங்கு கடமையாற்றி வந்த கொமாண்டருடையாதாகவே இருந்தது என அவர் மேலும் கூறினார்.

சாலாவ முகாம் வெடி பொருட் களஞ்சியத்தை அகற்றும்படி முன்னாள் இராணுவ கொமாண்டர்களான ஜகத் ஜயசூரியவுக்கும் தயாரட்நாயக்கவுக்கும் தன்னால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்பேரில் பல சந்தர்ப்பங்களிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் சாலாவ முகாம் வெடிபொருட் களஞ்சிய இருப்பின் ஒரு பகுதி வியாங்கொட மற்றும் நாட்டின் பல்வேறு முகாம் பகுதிகளுக்கும் இடம்மாற்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததாக அவர் மேலும் கூறினார்.

இராணுவ கொமாண்டரையும் இராணுவ பேச்சாளரையும் சண்டே லீடர் தொடர்பு கொண்டு விசாரித்ததில் இராணுவத்தின் இந்த மத்திய ஆயுத வெடிபொருட் களஞ்சியத்தை அநுராத புர மாவட்டத்திற்குள் இடம் மாற்றி அமைத்துக் கொள்ளும் திட்டம் பற்றிய எதுவித தகவலும் அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை என்பது புலனாயிற்று.


ஆரம்பத்தில் பனாகொட இராணுவ முகாமில் அமைந்திருந்த இலங்கை இராணுவத்தின் மத்திய ஆயுத வெடிபொருட் களஞ்சியம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சியின் 1990 களின் நடுப்பகுதியில் சாலாவ முகாமுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது.

யுத்த நடவடிக்கைகள் 2009 முடிவிற்கு வந்ததை தொடர்ந்து சாலாவ வெடி பொருட் களஞ்சிய கையிருப்பின் ஒருபகுதி ஏனைய மூன்று இராணுவ முகாம்களுக்கு மாற்றம் செய்யப்பட்டது.

இந்த இராணுவ முகாம் ஆயுத வெடிபொருட் களஞ்சியங்களுள் வியாங்கொட களஞ்சியம் அமைந்துள்ள பகுதியே உயர்ந்தளவில் பொதுமக்கள் செறிந்து வாழும் பிரதேசமாக உள்ளது.

**இலங்கை இராணுவத்தின் வெடிபொருட் களஞ்சியத் திட்டம் தொலைந்ததால் வெடிக்கக் காத்திருக்கும் குண்டுகள் எனும் தலைப்பில் மென்டெனா இஸ்மாயில் அபேவிக்ரம சண்டே லீடரில் எழுதிய முன்பக்க செய்தி அறிக்கையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.**

**தமிழில்: யோகர்**










நாம் கதைகளில், சினிமாக்களில் பார்த்துள்ள சுப்பர்மானால் எதையும் செய்ய இயலும். மற்றவர்கள் தயங்கி நின்ற விடயங்களையெல்லாம் அவர் அநாயாசமாகச் செய்துவிடுவார்.




# நீங்களும் சுப்பர்மான்!

பலகோடி மக்கள் உள்ள உலகத்தில் ஒரே ஒரு சுப்பர்மான்தான் இருக்க இயலும். இவர்களுடைய எண்ணிக்கை மிகக்குறைவு. பெரும்பாலானோர் நோர்மல்மான்கள் தான்.

அபூர்வமாக நாம் சில சுப்பர்மான்களை நிஜ வாழ்க்கையிலும் பார்த்திருப்போம். என்ன அவர்கள் பாண்ட்டுக்கு வெளியே உள்ளாடை போட்டிருக்கமாட்டார்கள். ஆனால் தங்கள் துறையில் சுப்பர்மானுக்கு இணையான திறமையை வெளிப்படுத்துவார்கள்.




உதாரணமாக ஒரு நிறுவனத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றும் ஒருவர் அங்குள்ள நடைமுறைகளை தலைகீழ்பாடமாகத் தெரிந்து வைத்திருப்பார். மற்றவர்கள் ஏதாவது சந்தேகம் என்று ஆவணங்களைப் புரட்டுகிற நேரத்தில் இது தான் சரியான ரூல் சந்தேகமிருந்தா அந்தப் பதினெட்டாவது வால்யூமோட ஏழாவது பக்கத்தில பன்னிரண்டாவது வரியைப் பாருங்க என்று சொல்லி அசத்துவார்.

இது எப்படி அவருக்குச் சாத்தியமாகிறது. அதே நிறுவனத்தில் பணிபுரியும் நூற்றுக்கணக்கான மற்றவர்களால் இது முடிவதில்லையே.

எல்லாமே சொய்ஸ்தான் என்கிறார் கேல் நியூபோர்ட் Deep Work என்ற தலைப்பில் இவர் எழுதியிருக்கும் சுவாரஸ்யமான புத்தகத்தின் மையக் கருத்து. நாம் ஒவ்வொருவரும் சுப்பர்மான் ஆகலாம். நம் துறையில் ஆழச்சென்று திறமைசாலிகளாகத்திகழலாம். ஆனால் அப்படி ஆகவேண்டும் என்று நாம் முதலில்தீர்மானிக்கவேண்டும். மேலோட்டமான வேலை போதாது என்பதை உணரவேண்டும்.

ஒருவேளை நாம் அப்படி தீர்மானிக்காவிட்டால்?

தவறில்லை. ஒவ்வொரு நிறுவனத்திலும் ஒவ்வொரு துறையிலும் ஆயிரக்கணக்கான நோர்மல்மான்கள் இருப்பார்கள். இவர்கள் எல்லா வேலைகளையும் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்து வைத்திருப்பார்கள். ஆனால் ஓர் ஆழத்துக்குமேல் செல்லமாட்டார்கள். அது அவர்களுக்குத் தேவையில்லை.

இந்தவகை ஊழியர்களும் ஒரு நிறுவனத்திற்குமுக்கியம்தான். ஆனால் நாம் இந்தக் கட்சியில் சேர்ந்தால் ஒரு பிரச்சினை இருக்கிறது. இவர்களைப்போல் ஆயிரம் பேர், இலட்சம்பேர் அந்த நிறுவனத்தில் இருப்பார்கள். அத்தனை பேருக்கு நடுவே இவர்களுக்கு எந்தவிதமான முக்கியத்துவமும் இருக்காது. இதிலிருந்து எப்படித் தப்புவது?

நம் துறையில் ஆழமாகச் செல்வது எப்படி?

இதனை ஒரேநாளில் செய்ய இயலாது. படிப்படியாகத்தான் முன்னேறவேண்டும்.

முதலில் ஆழமாகச் செல்வதற்குத் தயாராகிக் கொள்ளுங்கள்.

ஆழமாகக் கற்பதும் அந்தத் தளத்தில் வேலை செய்வதும் மிகவும் மூளை உழைப்பைக் கோரக்கூடிய விடயங்கள். ஆகவே அவற்றை நாள் முழுக்கச் செய்து கொண்டிருக்கஇயலாது. அவசியமும்இல்லை.

ஒருநாளைக்குச் சில மணி நேரங்கள் இதற்காக ஒதுக்கவேண்டும். அந்த நேரத்தில் வேறு தொந்தரவுகள் எவையும் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். விரும்பினால் உங்களுக்கென்று ஒரு விசேடமேசை அல்லது வேறு ஏற்பாட்டைச் செய்து கொள்ளலாம். அந்த ஏற்பாட்டுக்குள் நுழைந்த விநாடி முதல் உங்களுடைய முழுக்கவனமும் வேலையில்தான் இருக்கவேண்டும்.

ஆனால் அப்படி முழுமூச்சாக என்ன வேலை செய்யவேண்டும்?


உதாரணமாக ஒரு குறிப்பிட்ட தொழில்நுட்பத்தைப் பற்றி நன்கு கற்றுக்கொண்டு அதனை முயற்சி செய்து பார்த்து உங்களுடைய வேலையில் அதைப் பயன்படுத்த வேண்டும் என்கிற இலட்சியத்தை நீங்கள் அமைத்துக்கொள்ளலாம். இந்தத் தெளிவு உங்களுடைய கவனத்தைக் கூர்மையாக்கும். அதன்பிறகு மேற்சொன்ன ஏற்பாட்டுடன் உட்கார்ந்தால் அரை மணி நேரத்தில் இரண்டு நாள் வேலையைச் செய்து விடுவீர்கள்.

மூன்றாவது ஒருபடி மேலே செல்லுதல்.

ஆழச்சென்று உழைக்கிற நீங்கள் மற்றவர்களுடைய இலட்சியங்களையே மனத்தில் வைத்துக் கொண்டிருந்தால் சரிப்படாது. அங்கிருந்து ஒருபடியேனும் மேலே செல்வேன் என்று உங்களுக்கே சொல்லிக்கொள்ளுங்கள்.

அதேசமயம் புதிய இலக்கு உங்களால் எட்டக்கூடியதாகவும் இருக்க வேண்டும். ஐந்து மார்க் வாங்கிய இடத்தில் சட்டென்று ஐம்பதுக்குத் தாவுவது யதார்த்தமல்ல. ஐந்தை எட்டாக்கி எட்டை இருபதாக்கி இருபதை நாற்பதாக்கி நாற்பதை ஐம்பதாக்குவதுதான் யதார்த்தம். அதற்கேற்ப உங்கள் இலக்குகளைப் படிப்படியாக நகர்த்திச் செல்லுங்கள்.

நிறைவாக இப்படி ஆழமாகச் சென்று உழைப்பது உங்களுடைய இயல்பாகிவிட வேண்டும் . அப்போது இது ஒரு கூடுதல் வேலையாகவே தெரியாது. அதன் பலன்களைக் கண்ணெதிரே பார்ப்பீர்கள். அந்தத் துறையில் நீங்கள் மிகப்பெரிய உயரங்களைத் தொடுவீர்கள்.



ஆழம் சென்றால் உயரம் கிடைக்கும். இது அபூர்வமான பார்முலா தான் ●

---

நோயாளி:–டாக்டர் இடது கால் முட்டி ரொம்ப வலிக்குது

டாக்டர்:–வயசாயிடுச்சில்ல அதான்

நோயாளி:–வலது காலுக்கும் அதே வயசுதானே ஆகுது ஆனா அது வலிக்கலியே

டாக்டர்:–????...!!!



உன் மனைவி உன்னைக் கலண்டர் மாதிரி நினைக்கிறாளா? என்ன சொல்றே?

தினம்தினம் கிழிச்சு எறியிறாளே!



பொண்ணு அழுமூஞ்சி மாதிரி தெரியுதே தரகரே...?

சீரியல் டைம்ல நீங்க பொண்ணு பார்க்க வந்தா பின்னே எப்படி இருக்கும்



உண்மைக்கு எதிர்ப்பதம் என்னனு கேட்டதற்கு உங்கபையனுக்கு பதில் சொல்ல தெரியலை மேடம்!

அவனுக்கு பொய் சொல்லவே தெரியாது சார்!



பேஷண்டைப் பார்க்காமலே டாக்டர் எப்படி ஆபரேஷனுக்கு ஒரு இலட்சம் செலவாகும்ன்னு சொல்றாரு...?

டாக்டர் பேஷண்டோட பாங்க் பாஸ் புக்கைப் பார்த்துட்டாரே...



மொட்டை அடிக்க எவ்வளவுப்பா?

எழுபது ரூபாய் சார்...

ஷேவிங் பண்ண?

நாற்பது ரூபாய் சார்!

சரி சரி என் தலையை வழவழன்னு ஷேவிங் பண்ணிவிடு



மரியாதையா நகையைக் கொடுக்குறியா? இல்லை கழுத்தை அறுக்கவா?

அத்தை! அவன் என்ன சொன்னாலும் சரி நகையை மட்டும் கொடுத்துறாதீங்க!



ஒண்ணு நாம சேர்ந்து வாழணும். இல்லே சேர்ந்து சாகணும்

இரண்டும் ஒண்ணுதான்யா!



காது டாக்டரை பார்க்க வந்த நீங்க திடீர்ன்னு கண் டாக்டரை பார்த்துட்டு வந்துடறேன்னு கிளம்புறீங்களே! ஏன்?

உங்க பார்வையே சரியில்லைன்னு நர்ஸ் சொன்னாங்க.



ராத்திரி எல்லாம் வெறும் கெட்ட கனவுகள்கண்டேன்டி.

அப்பிடி என்னடி கனவு கண்டாய்?

நானே துணி துவைப்பது போலவும் சமையல் செய்வது போலவும்!

# இணையக் காதல்!



காதல் தலை முறைக்குத் தலை முறை மாறிக் கொண் டிருக்கின்ற விடயம்.

அடிப்படை உணர்வு ஒன்றுதான். ஆனால் அதை வெளிப்படுத்தும் விதம் மாறுபடும். உதாரணமாக ஒரு கட்டத்தில் எல்லோ ரும் நேரில் பார்த்துக் காதலித்தார்கள். பிறகு கடிதக்காதல், தொலைபேசிக் காதல், செல்போன் காதல் என்று வளர் ந்து இப்போது இணையக்காதலின் நேரம்.

இண்டர்நெட் என்பது காதலர் களுக்கு ஒரு பெரிய வரப்பிர சாதம் தான் . அவர்கள் எந்த ஊரில் இருந்தாலும் ஒருவரையொருவர் அடிக்கடி பார்த் துக்கொள்ளலாம். வட்ஸ் அப்பில் புகைப்படங்களைப் பரிமாறலாம். காசு செலவில்லாமல் பேசலாம். ஸ்கைப்பில் வீடியோ போட்டுப் பார்க்கலாம்.கண்ணே நல்லாயிருக்கியா என்று செய்தி அனுப்பி விட்டு அவர் அதை வாசித்து விட்டாரா இல்லையா என்று உடனுக்குடன் தெரிந்து கொள்ள லாம்.

இப்படிப் பல விதங்களில் காதலர்க ளுக்கு உதவியாக இருக்கும் அதே இண்டர்நெட் ஒரு பெரிய தலை வலியாகவும் மாறிக் கொண்டிருக்கிறது. என்றார் அலிஸ் அன்ஸாரி. இவர் சமீபத்தில் எழுதியி ருக்கும் Modern Romance என்ற புத்தகம் காதலின் நவீன பிரச்சினை களைச் கலகலப்பாகப் பேசுகிறது. குறிப்பாக தொழில்நுட்ப வளர்ச்சி காதலர்களை எப்படி யெல்லாம் மாற்றி விடுகிறது என்று விளக்கி அவற்றைச்சரி செய்வதற்கான வழிகளையும் விபரிக் கின்றது. உதாரணமாக இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சியெல்லாம் வருவதற்கு முன்னால் காதலர்கள் தினமும் ஒருமுறை அல்லது வாரத்திற்கு சில முறைதான் ஒருவரை யொருவர் சந்தித்துக் கொண்டிருந்தார்கள். அதற்காக கஷ்டப்பட்டு அலங்காரம் செய்து கொண்டு கிளம்புவதில் தொடங்கி அவள்(ன்) வருவதற்காக ஆவ லாகக் காத்திருப்பது வரை எல்லாமே சுகமான அனுபவங்கள் தான். அதன்மூலம் கொஞ்சம் கொஞ்சமாக ஒருவரையொருவர் புரிந்துகொண்டு ஒரு கட்டத்தில் திருமண பந்தத்தில் இணைவார் கள்.

இன்றைக்கு இந்த நிலைமை தலைகீழ் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக காலை எழு ந்தவுடன் பல் தேய்ப்ப தற்கு முன்னால் குட் மோர்னிங் செல்பி அனுப்பிக்கொள்வதில் தொடங்கி இரவு தூங் கச் சென்றபிறகும் ஒரு வரையொருவர் பார்த் துக் கொண்டே இருக் கிறார்கள். ஆரம்பத்தில் இது மகிழ்ச்சிதரும். ஆனால் வழக்கமான காதலில் இருக்கும் இடைவெளி இங்கே இல்லாத காரணத்தால் விரைவில் ஒருவர் மற்ற வருடைய குறைகளைக் காணத் தொடங்கி விடுவார்கள்.

> **ஒன்றுமில்லாத விடயங்களுக்கெல்லாம் சண்டை மூட்டிவிடுகிற வேலையை தொழில்நுட்பம் அருமையாகச் செய்யும்!**

அதற்காக குறை களை மறைத்துவைக்க வேண்டும் என்று அர்த்தமில்லை. தொழில் நுட்ப வளர்ச்சி அந்தக் குறைகளைப் பெரிதாக் கிக் காட்டுகிறது என்பதுதான் பிரச் சினை. ஒன்றுமில்லாத விடயங்களுக்கெல்லாம் சண்டை மூட்டிவிடுகிற வேலையை தொழில் நுட்பம் அருமையாகச் செய்யும்.

நேரில் பார்க்கும் போது இதுபோல் ஏதாவது சண்டை ஏற்ப ட்டால் அது சில நிமி டங்களில் அல்லது சில நாட்களில் சரியாகி விடும். தொழில்நுட்பம் அதையும் அனுமதிப் பதில்லை. பல மாதங் களுக்கு முன்னால் போட்ட சண்டைகூட காதலர்களின் போனில் இப்போதும் இருக் கிறது. என்றைக்காவது எதையாவது தேடும் போது அதைப் பார்த்தால் இப்போதைய நல்ல மூடும் கெட்டுப் போகிறது. அன்னிக்கு இப்படிப் பேசிட் டா(ன்)ல என்று தேவை யில்லாததை நினைத்து வருந்த வேண்டியிருக்கும்.

அதன்பிறகு ஆபாசச் செய்திகள் நேரில் பார்க்கும்போது பேசத்தயங்கும் விடயங் களைக்கூட செல்போ னில் பேசுவது சௌகர் யமாக இருக்கிறது. அதில் இருவருக்கும் கிளுகிளுப்பு ஏற்ப ட்டால் கொஞ்சம் பர வாயில்லை.

ஒருவர் மட்டும் உரிமை எடுத்துக் கொண்டு ஏதாவது பேசி அது இன் னொருவருக்கு அரு வருப்பை உருவாக்கி விட்டால் பிரச்சினை தான்.

இதன் நீட்சியாக தங்களைத்தாங்களே அந்தரங்கமாக புகைப்படங்களை எடுத்துக்கொண்டு அவற்றை ஒருவருக்கொருவர் அனுப்புவது, இந்தப் படங்களைச் சம்பந் தப்பட்டவர்கள்தான் பார்ப்பார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

வேறு யாராவது இவற்றை பார்த்துவிட்டு தவறாகப் பயன்படு த்தினால் அதுவும் காதலுக்குப் பெரிய பிரச்சினையாக வந்து நிற்கும்.

அதற்கு என்ன செய்ய வேண்டும்? தொழில்நுட்பத்தை மொத்தமாக மறந்து விட்டு பழையபடி பார்க்கில் சந்தித்துப் பேசவேண்டும்.

அவசியமில்லை. அதே சமயம் தொழில் நுட்பத்தால் வருகிற இந்தப் பிரச்சினைகளை உணர வேண்டும். ஃபோன் மெஸேஜ், பேஸ்புக் மெஸேஜ் போன்றவற்றில் பேசுதற்கும் நேரில் பேசுவதற்கும் உள்ள வித்தியாசங்களை உணர்ந்து அதனைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். ஒரு விடயத்தை நேரில் சொன்னால் எந்த அளவு யோசித்துப் பேசுவோமா அதே அளவு இங்கேயும் யோசிக்கத் தொடங்க வேண்டும். டென்ஷனாக உள்ள நேரங்களில் போனிலோ ஃபேஸ்புக்கிலோ காதல் பேச்சு ஆகாது. ஒரு வேளை நீங்கள் சாதாரணமான சூழ்நிலையில் எதையாவது எழுதினாலும் அதை வாசிக்கின்ற உங்கள் காதலர் பதற்றமான சூழ்நிலையில் இருந்தாலும் பிரச்சினைதான். ஆகவே இதில் இருவருக்கும் பொறுப்பு உள்ளது.

அதேபோல் ஒவ்வொரு மெஸேஜூக்கும் உடனே பதில் அனுப்ப வேண்டும் என்கிற பதற்றத்தைக் குறைக்க வேண்டும். அவசரத்தில் செய்கிற எல்லா வேலையும் ஏதாவது ஒரு பிரச்சினையைக் கொண்டுவரும். நிதானமாக சிந்தித்த பிறகு பேசலாம். அதனை வாசிக்கிறவர் எப்படி உணர்வார் என்பதைப்பற்றி கொஞ்சம் யோசித்துப் பேசலாம்.

தொழில் நுட்பம் என்னதான் வளர்ந்தி ருந்தாலும் நேரில் சந்திப்பதற்கு இணை யாகாது. ஆகவே சில முக்கியமான விடயங்களை குறிப் பாக அந்தரங்கமான விடயங்களை நேரில் மட்டுமே பேசுங்கள். அப்போது எந்தக் கருத்து வேறு பாட் டையும் பேசித் தீர்த் துக் கொள்ளலாம். அந் தப் பிணைப்பு நிரந்தரமாக இருக்கும் என்கிறார் அலிஸ் ●



# சத்தியம்



நித்திரை வரவில்லை- நீங்கள் இல்லாமல் நிறையவே உங்களை நான் மிஸ் பண்ணுறன் ஜினோ, தமீராவின் நேற்றைய இந்த எஸ்.எம்.எஸ் ஐ திருப்பி இன்று நான் அனுப்பலாம் போலி ருந்தது. நினைத்த வாறே நித்திரைக்குச் சென்ற ஜினோ, தள்ளிக் கிடந்த தலையணையை தடவிப் பிடித்துக் கொண்டான்.

தமீரா, ஜினோவில் தீவிரக் காதல் கொண்டவள், ஜினோவின் ஒவ் வொரு நிமிட அசை வும் அவளிடம் அனுமதி பெறாமல் நடக்குமேயானால் ஜினோவின் பாடுதான் பரிதாபம்.

நாளுக்கு நாற்பது தடவைக்கு மேல்நாடிபிடித்துப் பார்த்துக் கொள் வாள் தமீரா -ஜினோ வின் ஒவ்வொரு நகர்வையும் நாற்பது தடவைகளில் நாலு மட்டுமே நலம் விசாரிப்பதாய் இருக்க மற்றவைகள் எல்லாம் சந்தேகம் கலந்த சண்டையா கவே முடிவடையும்.

அடிக்கடி அழை ப்பை ஏற்படுத்தி வார்த்தைகளை வம்பு வடிவம் கொண்டு வர்ணித்து அவனை அழவைத் தாள் மட்டுமே அவளுக்கு அவனி டத்தில் அன்பு கூடும். இது தமீரா வின் கண்மூடித் தனமான காதல் மட்டுமல்ல நம்பிக் கையும் கூட.

தமீரா ஜினோவில் வைத்திருக்கும் காதல் தங்கள் இருவரையும் இறுதி வரை பிரிக்காது என்பதற்கு இதுவும் பிடிவாதமாய் அமைநத ஒரு பிறவிக்குணம்.

தமீரா வீட்டிற்கு கடைசிப் பிள்ளை. அன்பு காட்ட அம்மாவும், அங்கு இங்கு கூட்டிச் செல்ல அப்பாவும், ஆசையாய் அதை இதையெல்லாம் அனுப்ப லண்டன் அக்காவும், அடிக்கடி அழைப்பை ஏற்படுத்தி அலட்டிக் கொள்ள அடுத்த அக்கா என அண்ணன், தம்பி என ஆண் ஒன்றும் இல்லாமல் அன்பாய் இருக்கும் குடும்பம்.

தமீரா படித்த கையோடு பத்தே மாதத்தில் வேலை கிடைத்துவிட்டது. வேலை கிடைக்கும் மட்டும் வாய் திறக்காத தமீரா வாய்ப்புக்கள் பார்த்து காத்திருந்தாள். தாயிடமும் அக்கா விடமும். தமாசாய் தன் காதல் கதையை சொல்லிவிட வேண் டும் என்பதில் குறி யாய் இருந்தாள்.

நாட்கள் மாதங்கள் ஆயின. தமீராவின் தாதியர் பணிக்கான பயிற்சிக் கல்லூரிக்கு செல்ல வேண்டிய நேரம் வந்தது.

தமீரா அம்மாவிடம் தன் காதல் கதை யைச் சொல்லத் துணிந்தாள். கட்டி யணைத்த தலைய ணையோடு கரத்தில் ஒன்றையும் தாயின் பக்கம் தடவிப் போட்டுக் கொண் டவள் ஆரம்பித்தாள். ஆரம்பித்து ஐந்து நிமிடமாக முன்னமே தமீராவுக்கு இறுதி நேரமாய் போன நேரமது.

ஜினோவின் சாதி தொடக்கம் சகலத் தையும் சரமாரியாய் பொழிந்து தள்ளினாள் தமீராவின் அம்மா, மட்டுமா!

அதே நிமிடமே அழைப்பை ஏற்படு த்தி அடுத்த மகள் லண்டன்காரியிடமும் அப்புட்டு வைத்தாள்.

அம்மாவில் ஆரம் பித்து குடும்பத்தின் அனைவரின் அன்பை யும் இழந்து போனால் தமீரா அந்த இரவே!

அழைப்புக்களும், எஸ்.எம்.எஸ் உம் அடுக்கிவரும் நேரம் எதுவுமே வந்து கிடைக்காத ஜினோ அழைப்பை ஏற்படுத்தினான். ஒன்றுக்கு இரண்டு தடவையல்ல, ஆயிரம் தடவைகள் அனுப்பினான் எஸ். எம்.எஸ்.ஐ. அன்பு கனிய - ஆனாலும் அடுத்த பக்கம் இருந்து பதில் எதுவும் வரவே இல்லை!

வழி தெரியாத ஜினோ வாழ்வையே தொலைத்து விட்டவன் போல் வானத்தைப் பார்த்து, பூமியைப் பார்த்து வடிந்த கண்ணீரோடு வாழ்ந்து கொண்டி

## சிறுகதை


ருக்கிறான் வருவாள் எனும் நம்பிக்கையில்.

வாரம் நான்கு வந்துவிட்ட அந்த இரவு; வந்திருந்தது ஒரு எஸ்.எம்.எஸ். மன்னித்துவிடு ஜினோ! கடந்த நான்கு வாரமும் நான் வடித்த கண்ணீரை விட என் அம்மாவும் அக்காவும் சிந்திய கண்ணீர் எத்தனையோ கனவளவு பெரிது!

பரிகாரமாய் என்னால் என்ன செய்ய முடியும் அவர்களுக்கு?

அவர்களின் விருப்பம் என்ன? ஏன் அந்தக் கண்ணீர் அவர்களுக்கு?

அதற்காகவே சத்தியம் செய்து கொடுத்து விட் டேன். இருவரு க்கும் ஆண்டவன் சத்தியமாய் உன்னை நான் நினைக்க மாட் டேன், பார்க்க மாட்டேன், பழக மாட்டேன், இந்த உறவை தொடர மாட்டேன்.




மாறாய் அவர்கள் வாக்கும் இதுவே. இவையெதுவும் நடக்கும் என்றால் நாங்கள் உயிரோடு இருக்க மாட்டோம்

மன்னித்துவிடு - என்னை மறந்துவிடு எனக்காக அல்ல என் அம்மா, அக்கா வுக்காக உன்னோடு வாழ்ந்து முடித்த பிரமிப்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

வாசித்து முடித்த ஜினோ வழி தவறிய ஆடுபோல் போகும் இடம் தெரியாமல் போய்க் கொண்டி ருக்கிறான். எங்கோ எதிரே எதிர்ப்ப டுவாள் எனும் எதிர்பார்ப்புடன்.

கோமாரியூர் விவே. பிரேம்

# வளைந்த விரல்கள்



# இனி அவுட் சொல்லாது

சச்சின் டெண்டுல்கர் அவுட் ஆனால், இந்தியர்கள் எப்போதாவது சிரிப்பார்கள். அதனை செய்ய இவரால் மட்டுமே முடியும். டோனியின் ஹெலிகொப்டர் சிக்ஸர்களை கூட ரசிக்காமல் ஆடுகளத்தில் இன்னொருவரை ரசிக்க முடியும் என்றால், அவரது பெயர் “பிரெண்ட் பௌசர் பில்லி பவுடன” என்று இருக்க வேணடும். ஆம் ஆடுகளங்களில் விக்கெட், சிக்ஸர், பவுண்டரிகளை வித்தியாசமாக அறிவிக்கும் ஆல் டைம் ஃபேவரைட் அம்பயர் பில்லி பவுடனுக்கு உடல்நிலை கோளாறு ஏற்பட்டுள்ளதால், அவருக்கு ஓய்வு அளித்துள்ளது ஐசிசி.

தொடர்ச்சியாக கிரிக்கெட் பார்க்கும் ரசிகர்களிடம், “அவர்கள் யாருக்கு ரசிகர்கள்?” என கேட்டால் சச்சின், லாரா, பொண்டிங் என்றும், இபோது டோனி, கோலி, டிவில்லியர்ஸ், மக்ஸ்வெல் என்றும் பட்டியல் நீளும. கடந்த 21 வருடங்களாக



200 ஒருநாள் போட்டிகள், 84 டெஸ்ட் போட்டிகளில் அம்பயராக பணியாற்றிய பில்லிக்கும் இவர்களுக்கு இணையான ரசிகர்கள் கூட்டம்.

கௌதம் மேனன் பட பன்ச் போல, “உலகத்தில் எத்தனையோ அம்பயர்கள் இருந்தும் நமக்கு ஏன் பில்லியை பிடிக்கும்?” என்றால், அவரது துறு துறு அம்பயரிங், சண்டை வந்தால் வேகமாக நகர்ந்து சமாதானம் செய்வது, வீரர்களுடன் சகஜமாக பழகுவது, விரல்களால் மொத்த கிரிக்கெட் ரசிகர்களையும் கட்டிப் போடுவது போன்றவைதான் அதற்கு பதிலாக இருக்கும். அதிலும், க்ரூக்டு ஃபிங்கர் எனும் விரல்களை வளைத்து, அவர் விக்கெட்டை அறிவிப்பது க்ளாஸ்.

நியூஸிலாந்தை சேர்ந்த பில்லி பவுடன், 2000 ஆவது ஆண்டு நடந்த அவுஸ்திரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையேயான டெஸ்ட் போட்டியின்போது அம்பயராக அறிமுகமானார். பின்னர் 2005 இல், இதே இரு அணிகளுக்கு இடையேயான இருபது-20 போட்டிகளில முதல் முறையாக பணியாற்றினார் பில்லி.

அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் க்ளேன் மெக்ராத், ஜாலியாக நினைத்து அண்டர் ஆர்ம் பந்து வீச, அவருக்கு ஃபுட் பாலில் வழங்கப்படுவது போன்ற ரெட் கார்டு வழங்கி பில்லி கெத்துக் காட்டினார்.

ஒருமுறை இந்திய - பாகிஸ்தான் போட்டியில், இந்திய வீரர்கள் அவுட் கேட்டு முறையிட, சற்று தாமதித்து விரலை உயர்த்திய பில்லிக்கு பின்னால், ரெய்னா அவரைப் போலவே நடித்து அவுட் சொன்னதை ஜாலியாக எடுத்துக் கொண்டார்.

ஆஷஸ் ஸ்லெட்ஜிங்கில் வோர்னர்-பெல் சண்டையை சட்டென உள்ளே நுழைந்து தடுத்ததும், டோனி கோபப்படுவதே அரிது, அப்படி கோபப்பட்ட போது அவரை சமாதானப்படுத்தியது பில்லியின் கில்லி ரெக்கார்ட்ஸ்.


அவர் ரெமடாய்டு ஆர்தரிட்டிஸ்(rheumatoid arthritis) நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால் அவரது விரல்களை அசைத்தும், நீண்ட நேரம் மைதானத்தில் நின்று ஆட்டத்தை கணிப்பதும் அவரது உடல் நலத்துக்கு சரியல்ல என்று நியூஸிலாந்தின் ஐசிசி நடுவர்கள் குழுவில் இருந்து பில்லிக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

அவர் ஐசிசியின் ப்ரவுன் பெயில்ஸ் விருதை பெற்றுள்ளார். ஆனால் ஆஸி வீரர்களுக்கு ஏனோ பில்லி மேல் கோபம். 2007 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சர்வேயில், “மோசமான அம்பயர்” என பில்லியை ரேட் செய்தனர்.





இனி பில்லியின் விரல்கள் அவுட் சொல்லாது. சிக்ஸர்கள் பறந்தால் ரசிகர்கள் பந்தை மட்டுமே கவனிப்பார்கள். மைதானத்தில் இனி அனைவரும் கிரிக்கெட் மட்டுமே பார்ப்பார்கள். அம்பயர்களில் எண்டெர்டெயினர் பில்லிதான். விக்கெட்டுகளையும் “மகிழ்ச்சி” எனக் கூற வைக்க, பில்லியால் மட்டுமே முடியும்.

“பில்லி பவுடன் இனி க்ரூக்ட் ஃபிங்கட் அவுட் தராவிட்டாலும் பரவாயில்லை, நலமாக இருந்தால் போதும்” என்கின்றனர் அவரது ரசிகர்கள். குட் பை அண்டு டேக் கேர் பில்லி...! (க)



## காலத்தால் அழியாத கானங்கள் ...

திரைப்படம்: சந்திப்பு
இசை:எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடகர்: ரி.எம்.சௌந்தரராஜன்





ஆனந்தம் விளையாடும் வீடு -இது
ஆனந்தம் விளையாடும் வீடு
நான்கு அன்றில்கள் ஒன்றான கூடு
நான்கு அன்றில்கள் ஒன்றான கூடு-இது
ஆனந்தம் விளையாடும் வீடு
ஒரு நூல் கொண்டு உருவான மாலை
ஒரு நூல் கொண்டு உருவான மாலை
இன்பம் நாள் தோறும் பூ பூக்கும் சோலை-இது
ஆனந்தம் விளையாடும் வீடு
நான் கொண்ட கணவன் நடமாடும் தெய்வம்
நீங்காமல் எங்கள் நலம் காணும் செல்வம்
நான் கொண்ட கணவன் நடமாடும் தெய்வம்
நீங்காமல் எங்கள் நலம் காணும் செல்வம்
அவன் தந்த உறவில் ஆசைகள் திரண்டு
அழகாக ஈன்றேன் பிள்ளைகள் இரண்டு
ஆனந்தம் விளையாடும் வீடு -இது
ஆனந்தம் விளையாடும் வீடு
ஆ-மாங்கல்யம் தவழும் மகராசி வதனம்
மலர்ந்தாலே போதும் வேறேது உலகம்
மாங்கல்யம் தவழும் மகராசி வதனம்
மலர்ந்தாலே போதும் வேறேது உலகம்
எடுத்தாலும் என்ன எழேழு பிறவி
நீ தானே கண்ணே எனக்கேற்ற மனைவி
ஆனந்தம் விளையாடும் வீடு -
நான்கு அன்றில்கள் ஒன்றான கூடு-இது
ஆனந்தம் விளையாடும் வீடு
இமை போல இரண்டு விழிகாக்கும் தாயே
எது வந்த போதும் சுமை தாங்கி நீயே
எது வந்த போதும் சுமை தாங்கி நீயே
பெ-நீ தானே எங்கள் திருக்கோயில் விளக்கு
நீ இல்லை என்றால் தெரியாது கிழக்கு
இரு-ஆனந்தம் விளையாடும் வீடு -
நான்கு அன்றில்கள் ஒன்றான கூடு-இது
ஆனந்தம் விளையாடும் வீடு

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**

சொரூபன்-நீர்வேலி, எம்.ருஷாந்தன், கமல், செல்வா, நிஷான், பிந்துஜன், தர்ஷன்-சுதர்ஷன், ரூபி, புவனேஸ்வரி, சிந்து, கபிஷா -அரியாலை, சுஜித்தா-சங்கானை, தூரியா- திருநெல்வேலி, அம்பிகா-கைதடி, எஸ்.இன்பா, அனுஷா- கிளி நொச்சி திருநகர், தீபா- இந்தியா.

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.


# எகிப்திய பெண்களின் அழகின் இரகசியம் இதுதான்



எகிப்திய பேரழகி கிளியோபாட்ராவை எளிதில் மறக்க முடியாது. அவர் பாலில் குளிப்பார் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவரின் அழகு ரகசியங்களை இன்றும் அங்கே பாரம்பரியமாக பின்பற்றி வருகிறார்கள்.

அழகு என்பது நாட்டுக்கு நாடு வித்தியாசப்படும். ஆனால் அழகுணர்ச்சி மாறுபடுவதில்லை. நம்ம ஊரில் மஞ்சளும் பயிற்றம் மாவு போல் அவர்கள் நாட்டில் என்ன மாதிரியான அழகுக் குறிப்புகளை உபயோகப்படுத்திகிறார்கள் என தெரிந்து கொள்ள ஆவல் தானே. இதோ அவர்களின் எளிய அழகுக் குறிப்புகள்.





**பாலும் தேனும்:**

பாலையும் தேனையும் கலந்து உடல் முழுக்க தேய்த்து குளிப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர் அந்த ஊரிலுள்ள பெண்கள். இவை சருமத்தில் ஈரப்பதம் அளித்து மிருதுவாக்குகின்றன.





**தேங்காய் மற்றும் ஷீயா பட்டர்:**

தேங்காய் மற்றும் நட்ஸ்களிலிருந்து பிரிக்கப்படும் வெண்ணெயான ஷீயா பட்டர் இரண்டையுமே கூந்தலுக்கான கண்டிஷனராகவும், சிகை அலங்காரத்திற்கும் பயன்படுத்துகிறார்கள்.

**கடல் உப்பு:**

நாம் கடலை மாவு உபயோகப்படுத்துவது போல, அவர்கள் கடல் உப்பை நீரில் கரைத்து அதனை உடல் மற்றும் முகத்திற்கு தேய்ப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். இவை சருமத்தில் தங்கியிருக்கும் இறந்த செல்கள் மற்றும் அழுக்குகளை அகற்றி, மென்மையாக்கும்.



**வெந்தயம்:**

அவர்கள் வெந்தயத்தை அரைத்து முகத்தில் தேய்த்து கழுவுகிறார்களாம். அதேபோல் வெந்தய டீ யை விரும்பி குடிக்கின்றனர். இவை ஆன்டி ஆக்சிடென்ட் நிறைந்துள்ளவை என்பதால், இளமையை நீட்டிக்கவும், சுருக்கம் ஏற்படாமல் தடுக்கவும் உதவுகிறது என்று சொல்கிறார்கள்.

**பாதாம் எண்ணெய்:**

பாதாம் எண்ணெயை முகத்தில் தேய்த்து குளிப்பதை அவர்கள் விரும்புகின்றனர்.

இவை முகத்திற்கு நெகிழ்வுத்தன்மையையும், மென்மையையும் தருகிறது. இளம் வயதில் வரும் சருமம் முதிர்வதை தடுக்கின்றது.

**இயற்கை அழகு சாதனங்கள்:**

அவர்கள் மேக்கப் செய்ய கெமிக்கல் கலந்த அழகு சாதனங்களை விரும்புவதில்லை. மருதாணியை நகங்களுக்கும், தலைக்கு நிறம் அளிக்கவும் பயன் படுத்துகின்றனர். மேலும், பீட்ரூட் காய வைத்து பொடி செய்து அவற்றை லிப்ஸ்டிக்காகவும், கண்ணிமைகளுக்கு வண்ணமாகவும் தீட்டுகின்றனர்.

காய்ந்த பாதாமை எரித்து, அந்த கரியில் கண்மை செய்து கண்ணிற்கு போட்டுக் கொள்கிறார்கள். முக்கியமான விடயம் என்னவென்றால் கண்ணிற்கு அழகுபடுத்த வைக்கும் கண்மை கண்டுபிடித்தது அவர்கள் நாட்டில்தான். கி.மு 10,000 ஆண்டுகளிலேயே, அவர்கள் கண்ணிற்கு மை வைப்பதை வழக்கப்படுத்தியுள்ளனர்.

**சோற்றுக் கற்றாழை:**

சோற்றுக் கற்றாழை இல்லாமல் அவர்களின் அழகுப் பொருட்கள் எதுவுமே பார்க்க முடியாது என்கின்றனர். எல்லாவித அழகு சாதனங்களுக்கும் அவர்கள் இதனை உபயோகப்படுத்துகிறார்கள்.



இது சுருக்கங்கள் இல்லாத சருமத்தையும், பளபளப்பையும் தருகின்றது.

## திரைவிமர்சனங்கள்

# எனக்கு இன்னொரு பேர் இருக்கு





**ஐயா** என் பேரு மாணிக்கம், எனக்கு இன்னொரு பேரு இருக்கு, இந்த வசனத்தை யாராலும் மறக்க முடியாது.

சுப்பர் ஸ்டாரின் பென்ச் மார்க் டயலொக். இதையே படத்தின் தலைப்பாக பயன்படுத்தி வெர்ஜின் பாய் ஜி.வி அடுத்து களம் கண்டுள்ள படம் தான் எனக்கு இன்னொரு பேர் இருக்கு.

தன் முதல் படத்தின் ஹிட் கூட்டணியான இயக்குநர் சாம் ஆண்டனுடன் கைகோர்த்து பிரமாண்ட தயாரிப்பு நிறுவனமான லைகாவுடன் டீம் அமைத்துள்ளார். இந்த படம் இன்று உலகம் முழுவதும் பல திரையரங்குகளில் வெளியாகியுள்ளது. ஜி.வி. திரைப்பயணத்திலேயே இது தான் அதிகம்.

### கதைக்களம்

ராயபுரத்துலேயே வெயிட்டு நைனா நாற்காலி தான். அந்த நைனா நாற்காலிக்கு போட்டிப்போட்டு ஏற்கனவே நைனா நாற்காலியில் இருப்பவரை ஸ்கெட்ச் போட்டு தூக்குகிறது சரவணன், விடிவி கணேஷ், மொட்டை ராஜேந்திரன் குரூப்.

இதில் சரவணன் நைனாவாக மற்ற இருவருக்கும் கோபம் வருகிறது. இதைத் தொடர்ந்து ஒரு கட்டத்தில் சரவணனுக்கு முன்பு போல் வீரமாக சண்டை போட முடியவில்லை.

இதனால் தன் மகள் ஆனந்தியை திருமணம் செய்ய வேண்டும், அதே சமயம் ராயபுரத்தையும் கண்ட்ரோல் செய்ய வேண்டும், என்பதற்காக அடுத்த நைனா யார் என்று தேடுதல் நடக்கின்றது.

ஜி.வி.பிரகாஷ் செல்லும் இடத்தில் தற்செயலாக கொலை நடக்க, ஜிவி தான் இந்த கொலையை செய்துள்ளார், மிகவும் தைரியமான ஆள் இவர் தான் அடுத்த நைனா என கருணாஸ், யோகிபாபு ஆகியோர் ரெபரன்ஸ் செய்கின்றனர்.

ஆனால், உண்மையாகவே ஜி.விக்கு இரத்தத்தை கண்டால் பயம், இவர் எப்படி ஒரிஜினல் நைனாவானார் என்பதே மீதிக்கதை.

### படத்தை பற்றிய அலசல்

ஜி.வி. பிரகாஷ் இதுநாள் வரை மாணிக்கமாக இருக்கிறேன், பாட்ஷாவாக மாற வேண்டும் என்பதற்காக டார்லிங் இயக்குநர் சாம் ஆண்டனுடன் கைகோர்த்துள்ளார்,

ஆரம்பத்தில் ஜாலியாக அப்படியே த்ரிஷா இல்லன்னா நயன்தாரா கதாபாத்திரம் தான், காதல் தோல்வி, பெண்களை திட்டுவது என இருந்தாலும், ஒரு கட்டத்தில் கதையை உணர்ந்து நடிக்கத் தொடங்கும் இடத்தில் ஒரு முழுநீள கமர்ஷியல் நாயகன் ஆகிவிட்டார் ஜிவி. படத்தில் பல கதாபாத்திரங்கள், அதில் மிகவும் ரசிக்கப்படுவது கருணாஸ், யோகிபாபு, விடிவி கணேஷ் தான்.

கருணாஸ் பாகுபலி காளகேயன் மொழி பேசி அதற்கு விளக்கம் கூறும் இடம் சபாஷ், அதேபோல் யோகிபாபு, விஜய், அஜித், தனுஷ் என யாரையும் விட்டுவைக்கவில்லை அனைவரின் வசனங்களையும் பேசி கலக்கிவிட்டார்.

இன்றைய ட்ரண்ட் இளைஞர்கள் பயன்படுத்தும் வசனங்களை வைத்தே காட்சிகள் அமைத்திருப்பது படத்தின் பலம், பாகுபலி காட்சி, ப்ரேமம் பாடல், நண்பன் படத்தின் பாடல், வேதாளம் தீம் மியூஸிக் என படத்தில் கைத்தட்ட பல இடங்கள் உள்ளன.

கிளைமேக்ஸில் விடிவி கணேஷ் ஸ்கெட்ச் போடும் காட்சி சுப்பர், அதிலும் வில்லன் கும்பலை கரண்ட் ஷாக் கொடுக்கும் இடம் கைதட்ட வைக்கின்றது. ஆனால், படத்தில் லொஜிக் எங்கே என்று எவ்வளவு அலசி ஆராய்ந்தாலும் கிடைத்தபாடில்லை.

ஏன் சார், காமெடி படம் என்பதற்காக எந்த விதமான லொஜிக் காட்சியும் தேவையில்லையா என்ன? கிளைமேக்ஸில் ஜிவி வில்லனை அடிக்கிறார் ஓகே, அதற்காக அத்தனை பயந்த சுபாவம் கொண்டவர் ஒரே செகண்டில் வீரமாக மாறுவது முடியல.

### க்ளாப்ஸ்

விடிவி கணேஷ், கருணாஸ், யோகிபாபு செய்யும் கலாட்டா மற்றும் ஜி.வி.பிரகாஷின் நண்பராக வருபவர் தமிழ் சினிமாவிற்கு நல்ல வரவேற்பு,

இன்றைய ட்ரண்ட் இளைஞர்களை கவரும் வசனங்கள், படம் முழுவதும்நகைச்சுவையை கொண்டு வந்தது. கிளைமேக்ஸில் விடிவி கணேஷ்போடும் ஸ்கெட்ச் காட்சிகள்.

### பல்ப்ஸ்

என்ன காட்சிகளை வேண்டுமானாலும் சிரிப்பதற்காக வைப்போம் என்று இஷ்டத்திற்கு மீறிய லொஜிக்.

அழுத்தமே இல்லாத வில்லன் கதாபாத்திரம், ஆண்கள் கைதட்ட வேண்டும் என்பதற்காக பெண்களை திட்டுவது போல் வைத்த காட்சி.

படத்தின் பாடல்கள், உண்மையாவே ஜி.வி. தான் படத்திற்கு இசையா?... இசை பொறுப்பை வேறு ஒருவருக்கு கொடுத்திருக்கலாம்.

மொத்தத்தில் எனக்கு இன்னொரு பேர் இருக்கு மாஸ் வசனத்தை வைத்து காமெடி கலாட்டா செய்து தப்பித்துவிட்டார்கள்.

# முத்தின கத்தரிக்காய்





**பேய்** படங்களுக்கு அடுத்த படியாக தமிழ் சினிமாவில் தற்போது டிரண்டில் இருப்பது ரீமேக் படங்கள் தான்.

அதிலும் குறிப்பாக மலையாள படங்களின் தாக்கம் அதிகம் என்றே சொல்லலாம். அவ்வகையில் Vellimoonga எனும் மலையாள படத்தின் தழுவலே இப்படம்.

### கதைக்களம்

தனது தாத்தா, அப்பா என யாரும் அரசியலில் சாதிக்காததை தான் சாதிக்க நினைக்கும், அதே சமயம் 40 வயதை தாண்டியும் கல்யாணம் ஆகாமல் இருக்கும் ஒரு முத்தின கத்திரிக்காயான நாயகன், எப்படி அரசியல், கல்யாணம் என இரண்டிலும் வெற்றி அடைய போராடுகிறார் என்பதே கதை.

### படத்தை பற்றிய அலசல்

நாயகன் சுந்தர் சி முத்தின கத்திரிக்கா பாத்திரத்தில் நச் என பொருந்துகிறார். அரசியல் தில்லு முல்லு, லேட் பிக்கப் காதல் என அனைத்திலும் சுப்பர். பூணம் பாஜ்வா பார்க்க லட்சணமா இருக்காங்க, ஆனால் அவ்வளவு பெரிய வாய்ப்பில்லை நடிப்பதற்கு. சதீஸ் புது கெட் அப்பில் பட்டையை கிளப்பும் குறும்பு தனமான வசனங்கள் மூலம் கை தட்டல்களை அள்ளுகிறார். விடிவி கணேஷ், சிங்கம் புலி இரு அரசியல் கட்சிகள் சார்ந்த அண்ணன் தம்பியாக வந்து ரசிக்க வைக்கிறார்கள்.

இவர்களை தவிர யோகி பாபு, ரவி மரியா, ஸ்ரீமன், சிங்கப்பூர் தீபன், கிரண் என அனைவரும் தங்கள் பங்கிற்கு சிரிக்க வைக்கிறார்கள்.

ஆர்.ஜே.பாலாஜியின் கலகலப்பான வாய்ஸ் ஓவரில் படம் ஆரம்பிக்கிறது, பின் சற்று மெதுவாக பிக்கப் எடுக்கிறது இந்த காமெடி எக்ஸ்பிரஸ். அரசியல் சார்ந்த படம் என்பதால் இயக்குநர் வெங்கட் ராகவனுக்கு விளையாட களம் பெரிது, அதை நன்றாக பயன்படுத்தி திரைக்கதையில் நகைச்சுவையை தாராளமாக வைத்திருக்கிறார்.

குறிப்பாக சுந்தர் சி தர்ணா செய்யும் காட்சி, யோகி பாபு சுந்தர்சியை கடத்தும் காட்சி, பூணம் பாஜ்வாவை பெண் கேட்கும் காட்சி அதில் வரும் குட்டி பிளாஷ் பேக் என சிரிப்பிற்கு பஞ்சமே இல்லை.

அரசியலை சாடி வரும் அனைத்து வசனங்களும், காட்சிகளும் நம் இயல்பு வாழ்க்கையில் ஒப்பிட்டு கொள்ளும் படி இருந்தது படத்தின் பெரும் பலம். ஆனால் சுந்தர் சியின் கட்சி சின்னமே டக் என மாறும் அளவிற்கா லொஜிக் மீறல் வைப்பது. சில காட்சிகள் ஏற்கனவே பார்த்தவை என்பதால் சற்று சுவாரஸ்யம் குறைகிறது.

என்ன தான் முதல் பாதி அளவிற்கு 2-ம் பாதி இல்லை என்றாலும் க்ளைமேக்ஸில் வரும் டுவிஸ்ட்கள் ரசிக்க வைக்கிறது.

டெக்னிக்கலாக பெரிதாக இல்லை என்றாலும் அவ்வளவாக குறை சொல்வதற்கு இல்லை. சித்தார்த் விபினின் இசையில் பாடல்கள் ரசிக்கும் ரகம். கானா பாலாவின் குரலில் ஒலிக்கும் அரசியல் பாடல் வரிகள் ரசிக்க வேண்டியவை.

### க்ளாப்ஸ்

அரசியல்சாடல்வசனங்கள், சிரித்து சிரித்து வயிறு புண்ணாகி போகும் அளவிற்கு நகைச்சுவையான திரைக்கதை, ரசிக்க வைக்கும் திருப்பங்கள்.

### பல்ப்ஸ்

லொஜிக் மீறல்கள், சில பார்த்து பழகிய காட்சிகள், சில இடங்களில் அடுத்தது என்ன என்று யூகிக்க கூடிய காட்சிகள்.

மொத்தத்தில் இந்த முத்தின கத்திரிக்கா நகைச்சுவை ரசிகர்களுக்கு செம விருந்து!

## யோகக்கலையின் மகத்துவத்தை பறைசாற்றும்


# சர்வதேச யோகா தினம் (ஜூன்-21) இன்று

இந்தியப் பெருங் கலைகளுள் மிகப் புராதனமானதும் தற்காலத்தில் பெரிதும் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்து வருகின்ற இந்து மதச்சார்புடைய பாரம்பரிய கலையாகவும் மிளிர்ந்து வருகின்ற யோகக் கலையானது மனித வாழ்க்கை நெறிமுறைகள் பற்றித் தத்துவார்த்த ரீதியாகத் தெளிவுற விளக்கி நிற்கின்றது. இற்றைக்கு சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னெழுந்த இக்கலை, நீண்ட வரலாற்றுப் பின்னணியுடையது. இறைவனால்மனிதனுக்காக உவந்தளிக்கப்பட்டு இறையருள் பெற்ற அருளாளர்கள் மூலம் இது வெளிப் படுத்தப் பட்டது. வேற்று மதப்பிரிவினரால் இக்கலை பற்றிய பல்வேறு விமர்சனங்கள், எதிர்ப் பிரசாரங்கள், எதிர்க்கருத்துக்கள் எல்லாம் பல்வேறு கோணங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்த போதிலும் அவற்றையெல்லாம் முறுகியடித்து காலம் கடந்தும் தற்போதும் தன்னிலை மாறாது பேண்தகு நிலையில் வாழ்ந்து வருகின்றதெனில் இக்கலை பற்றிய உலக மக்களது பார்வையானது விசாலமானதாகும். இதனடிப்படையில் நோக்கின் காலத்தின் தேவை கருதியும் அதன் முக்கியத்துவம் உணர்ந்தும் உலக அரசியல் தளத்தில் உயர் பீடமாக விளங்கும் ஐ.நா சபையால் கடந்த ஆண்டு முதல் (2015) பிரகடனம் செய்யப்பட்டு உலகெங்கும் புத்தெழுச்சியுடன் கொண்டாடப்பட்டு வருகின்ற தினமாக சர்வதேச யோகா தினமானது அமைகின்றது. வழமையாக கொண்டாடப்பட்டு வருகின்ற ஏனைய சர்வதேச தினங்களைப் போலல்லாது இது தனித்துவமும் புனிதத்துவமும் பெற்று நிற்கிறது. இக் கலைக்கு நீண்ட வரலாறுண்டு. சனாதன தர்மம் என போற்றப்படுகின்ற இந்து மதத்தின் வேரிலிருந்து முகிழ்த்த பெருமையுடையது. உலகில் வழங்கி வருகின்ற மதப்பிரிவுகளுக்கெல்லாம் ஆதியாய் அநாதியாய் விளங்கும் இந்து மதமானது பல்வேறு அரும்பெரும் கலைகளின் ஊற்றுக்கண்ணாக விளங்குகிறது. அத்தகைய சிறப்பிற்குரிய, மக்களது வாழ்வியற் செல்நெறிக்கு மிகவும் அவசியமான கருத்துக்களை தன்னகத்தே கொண்டமைந்துள்ள இன்றைய மருத்துவ விஞ்ஞானத்தால் கூட வியந்து நோக்கப்படும் புனிதமான கலையாக யோகக்கலை விளங்குகிறது.

தற்போது மனித வாழ்வியலானது சகல விதத்திலும் மாற்றம் கண்டுவருகிறது. இயற்கையை புறமொதுக்கி நவீன அறிவியலுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் நாம் அதனால் விளைகின்ற எதிர்மறையான பின் விளைவுகள் பற்றியெல்லாம் கிஞ்சித்தும் அக்கறை கொள்வதில்லை. நம்மைத் தாக்கி வருகின்ற நோய்களுக்கெல்லாம் முக்கிய காரணமாக எமது அன்றாட நடவடிக்கைகளே அமைகின்றன. எமது இயற்கையை விரோதிக்கும் செயற்பாடுகளால் தான் இவ்விதமான எதிர்மறையான தாக்கங்கள் ஏற்படுகின்றன என்பதை உணர வேண்டும். யோகம் சார்ந்த வாழ்க்கை முறையானது இயற்கையோடு இணைந்த அறிவியலாகவே வளர்க்கப்பட்டது. முற்காலத்தில் வாழ்ந்த மெய்ஞ்ஞானிகள் அறிவில் தற்கால விஞ்ஞானிகளையும் விஞ்சிய நுண்மான் நுழைபுலமுடையவர்களாக விளங்கினார்கள். இவர்களது ஆய்வு முடிவுகள் தந்த தத்துவங்கள் யாவும் காலம் கடந்து நிற்கும் அழியாச் சிறப்புடையவையாகும். அவ் வகையினதாக யோகக் கலையும் நோக்கற்பாலது. இன்றைய நவீன விஞ்ஞானத்தின் ஆய்வுப் புலத்தில் மெச்சத்தக்க விதத்தில் அதன் தத்துவ விசாரம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இக்கலை பற்றிய கருத்துக்கள் பல்வேறு நூற்பரப்புக்களில் காணப்படினும் யோகக் கலையின் தந்தையாக போற்றப்படும் பதஞ்சலி மாமுனிவரது யோக சூத்திரமே இக்கலை சார் கருத்துக்களை தெளிவுற விளக்கி நிற்கும் முக்கியமான மூல நூலாகக் கொள்ளப்படுகிறது. இதில் காணப்படும் 196 சூத்திரங்களும் நான்கு பாதங்களாக வகுக்கப்பட்டு இரத்தினச் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது. இதில் வருகின்ற அட்டாங்க யோகம் எனும் பகுதி மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத எட்டுப் படிநிலைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி போன்ற எட்டுநிலைகளே அவையாகும்.

மனித வாழ்வை மேலுயர்த்தி ஆன்ம ஈடேற்றம் பெற வைப்பதற்கு உயர்தரமான கருவி இன்றியமையாததாகும். சாதாரணமாக இயல்பாகவே மனிதனிடமிருக்கின்ற மிருகத்தனமான குணத்தை நீக்கி அவனை தெய்வீக நிலைக்கிட்டுச் செல்வதற்கான நற்கருவியாக யோகமானது திகழ்கின்றது.

யோகம் என்பது "யுஜ்" என்ற வினையடியால் எழுந்தது. இதற்கு இணைதல் அல்லது ஒன்று சேர்தல் என்ற பொருள் தரும். இதன்படி நோக்கின் உடல், மனம், ஆன்மா என்பவற்றை ஒன்று சேர்க்கும் கருவியாக இது தொழிற்படுகின்றது. இதன் உள்ளார்ந்த விளக்கத்தைப் பார்த்தால் எமது தூல உடலானது தானாகத் தொழிற்படமாட்டாது. அதன் தொழிற்பாட்டிற்கு சூட்சுமப் பொருளான மனதின் சக்தி இன்றியமையாதது. அதேபோல் மன இயக்கப்பாட்டிற்கும் ஏதோவொரு எத்தன சக்தியானது மிக அவசியம் எனத்துணிந்தால் அதுவே ஆன்மா எனும் வகுதிக்குள்ளடங்கும். எனவே இம் முப்பொருட்களதும் பரஸ்பர இயக்கப்பாட்டிற்கான இணைப்புக் கருவியாக யோகம் தொழிற்படுகின்றது. பொதுவாக, யோகம் என்பதற்கு இந்து தத்துவம் சார்ந்த பலவித நூல்களிலும் பலவிதமான விளக்கங்கள் அளிக்கப்பட்டிருப்பினும் யோகத்தின் தந்தையாக விளங்கும் பதஞ்சலி யோக சூத்திரத்தில் சமாதி பாதத்தில் வருகின்ற முதற் சூத்திரம் இதற்கு தெளிவான விளக்கம் தருகிறது. அதாவது "யோக சித்த விருத்தி நிரோதக" எனும் சுலோகம் ஆழ்ந்த தத்துவ உட்பொருள் கொண்டது. யோகம் சித்த விருத்திகளை அழிக்கும் தன்மை வாய்ந்தது. அதாவது சித்தம் என்பது எண்ணங்களின்- சிந்தனைகளின் ஒட்டுமொத்த இருப்பிடமாகும். இது பல நிலைகளில் பலவாறு செயற்படும் தன்மையது. நான், எனது எனும் அகங்கார, மமகாரங்களும் சேர்ந்தியங்கும் முனைப்புறு தன்மையே சித்தமாகும். இதுவே மனித வாழ்வைச் சீர்படுத்தவும் சீரழிக்கவும் காரணமாகிறது. துன்பம், விரக்தி, வெறுப்பு, கவலை போன்ற பல விரும்பத்தகாத எதிர்மறையான விளைவுகளுக்கும் மகிழ்வு, இன்பம், வெற்றி, களிப்பு முதலிய பல விரும்பப்படுகின்ற நேர் மறையான சம்பவங்களுக்கெல்லாம் காரணம் மனமாகும். எனவே முதலில் ஐம்புலன்களிடமிருந்தும் மனதை பிரித்தெடுத்து எதுவும் நிலையற்றது என்ற யதார்த்தத்தை உணர்ந்து மெய்யெது? பொய்யெது? என்றாய்ந்துணரும் வேளை மனதை எண்ணங்களற்றதாக்குவது மிக எளிது. எனவே நமது மனதில் பதிந்துள்ள எண்ணங்களின் முழுத் தொகுதிகளின் ஒட்டுமொத்த எழுச்சி நிலைகளே சித்த விருத்தியாகும். அவற்றை மனதினின்றும் அழித்தலே சித்த விருத்தி நிரோதக என்பதன் பொருள் விளக்கமாகும்.



தற்காலத்தில் யோகப் பயிற்சிகளின் தேவைப்பாடுகள் மேலெழுந்துள்ள சூழ்நிலையில் காலத்தின் தேவையறிந்து கடந்த ஆண்டிலிருந்து ஐ.நா சபையால் யோகா தினம், சர்வதேச ரீதியாக பிரகடனப் படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டு வருகின்றமை சாலவும் பொருத்தமான நடவடிக்கையாகும். மனித வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான வரன் முறைகளை படிமுறையாகவும் தத்துவார்த்த ரீதியாகவும் விளக்கியுள்ள இக் கலையானது மேம்பட்ட வாழ்க்கைக்கு சில விதிமுறைப்பயிற்சிகளை பெறல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் பண்படுத்த வல்ல இக்கலையை மக்களனைவரும் இன, மத பேதம் கடந்து பின்பற்றத் தலைப்படுவதுடன் அதனை புனிதத்துவம் கெடாது தொடர்ந்து பேணுவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்பதே இத்தினமானது சொல்லும் செய்தியாக அமைகின்றது. வழமை போலவே நாம் ஒவ்வொரு உலக தினம் வரும் போதெல்லாம் பெரும் பணச்செலவுடனும் ஆரவாரத்துடன் பகட்டாகக் கொண்டாடிவருவது வழமையென்றாகிவிட்ட நிலையில் அத்தினங்கள் வெளிப்படுத்தி நிற்கும் தாற்பரியங்களறியாது. அர்த்தங்கள் புரியாது வெறும்ஆடம்பரமான கொண்டாட்டங்களிலேயே கவனம் செலுத்தி எமது நேரத்தையும் பணத்தையும் வீணடித்து வருகிறோம். எனவே இத்தினத்தினையும்புத்தெழுச்சியுடன் கொண்டாடும்வேளையில் அதன் புனிதம் கெடாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அனைவரின் முன் விரிந்துள்ளது.

இத்தினத்தை அங்கீகரிப்பதில் முன்னின்று உழைத்தவர் பாரதப்பிரதமர் நரேந்திர மோடி அவர்கள். அவரது அயராத முயற்சியும் இந்து மதத்தின்பால் அவருக்கிருக்கும் ஆழமான காதலும் யோகத்தின் மீதான தீராத பற்றுறுதியும் அவரை அவ்வாறு செயற்படத் தூண்டியதெனில் மிகையில்லை. இந்து மதம் சார் கலையொன்றுக்குக் கிடைத்த மிகப்பெரும் கௌரவமாகவே கருதப்படும். எனவே இந்து மதம் சார்ந்த கலை வடிவங்கள், பொக்கிசங்கள் அருகி அழிந்துவரும் நிலையில் தற்காலத்திற்கு மிகவும் அவசியமான யோகக் கலையின் எழுச்சியானது காலத்தின் தேவையாகும். இக்கலையை அதன் புனிதம் கெடாது பேண்தகு நிலையில் வைத்திருப்பதற்கும் வேற்று மதவாதிகளின் பிடியில் சிக்கி சீரழிந்து போகாது காப்பதிலும் அவருக்கு பெரும் பொறுப்புண்டு. கடமையுண்டு. கடப்பாடுண்டு. அத்தகைய பாரிய பொறுப்பை சிரமேற்கொண்டு அவர் ஆற்ற வேண்டிய சில முக்கிய கடமைகளை இவ்விடத்தில் பட்டியலிடுவது மிகவும் பொருத்தமுடையதே.

தற்போது வியாபார மாயைக்குள் அமிழ்ந்து வரும் இக்கலையை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக யோகத்துறைசார் நிபுணர்களைக்கொண்டு உலக நாடுகளில் யோகப் பயிற்சி மையங்களை ஸ்தாபித்துதிறமையும் ஆர்வமும் உள்ளவர்களுக்கு இலவசமாக பயிற்சி வழங்கி அவர்களைக் கொண்டு கிராமங்கள் தோறும் மக்களுக்கு பயிற்சியளிக்கக் கூடிய வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் ஏனெனில் தற்போது புனிதத்துவமான இக்கலையை பலர் வியாபாரமாக்கியும் மலினப்படுத்தியும் வருவது வேதனையளிக்கின்றது. பண மீட்டலுக்காகவும் புகழடைவதற்காகவும் இக்கலையை பயன்படுத்தி வருகின்றனர். அது மாத்திரமன்றி பாரம் பரிய யோக முறைகளை புறம் தள்ளியும் தமது விருப்பிற்கேற்ப நவீன பயிற்சி முறைகளைப் புகுத்தியும் மக்களிடமிருந்து கச்சிதமாக பணங் கறக்கும் கைங்கரியங்களிலும் ஈடுபடுவது ஏற்புடையதல்ல. எனவே இக்கலையை களங்கப்படுத்துவோரிடமிருந்து நாம் விழிப்புடனிருத்தல் வேண்டும்.

மேலும் வருடந்தோறும் யோக ஆராய்ச்சி மாநாடுகளை நடத்துவதற்குரிய முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு துறை சார் வல்லுநர்களைக் அழைத்து நடத்தி, அவர்களது சேவைகளுக்கான கௌரவங்கள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் இம் மாநாடுகளின் போது பொருத்தமான ஆய்வுப்பரப்புகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிப்பதற்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அவ்வாய்வுக்கட்டுரைகளை தொகுத்து கனதியான வகையில் மாநாட்டு நினைவாக ஆய்வுமலராக வெளிக்கொணர்வதற்குரிய எத்தனங்களை ஏற்படுத்த வேண்டும்.


அடுத்த விடயமாக, பாடசாலைகள் முதல் பல்கலைக் கழகங்கள் வரை யோகத்தை ஒரு பாடமாக போதிப்பதற்கான நிலைமைகளை உருவாக்க வேண்டும். இதற்கமைய இலங்கை போன்ற நாடுகளில் கல்விச்சாலைகளில் இத்துறைக்கு அதிகளவு மாணவர்களை உள்வாங்குவதில் முனைப்புக் காட்ட வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் இக்கலை பற்றியதான பிரக்ஞையை இளம் சந்ததிக்கு கடத்த முடியும். இதனால் சமூக, பொருளாதார, பண்பாட்டு ரீதியில் காத்திரமான மாற்றங்களை ஏற்படுத்த முடியும். வெறுமனே உடற் பயிற்சி முறையாகவே பார்க்கப்படும் இக்காலத்தில் அதனை உள்ளார்ந்த ரீதியாக, தத்துவ நோக்கில் அணுகப்பட வேண்டியது அவசியமாகும். இக்கலை உணர்த்தும் வாழ்வியல் தத்துவங்களையும் நடைமுறைகளையும் அனைவரும் அறிந்து கொள்வதற்கான சூழமைவைத்தோற்றுவிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். இதனொரு கட்டமாகவே கல்விச்சாலைகளில் யோகக்கலை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி வழங்கி தரம் வாய்ந்த யோகப் பயிற்சியாளர்களை உருவாக்க முடியும்.

மேற்குறித்த விடயங்களை பாரதத்தின் அவதானத்திற்குட்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே பண்டைய மருத்துவ முறைகளுள் செலவில்லாத, முதன்மையான கலையாக திகழும் இக்கலை மீதான ஆர்வங்கள்,தேடல்கள் நாளுக்குநாள் அதிகரித்துவரும் நிலையில் அதன் மகத்துவமும் உயர்வடைந்து வருவதனை காணக்கூடியதாக உள்ளது. ஒட்டுமொத்தமான அணுகுமுறையில் இதனை நோக்கின் தற்கால அறிவிலுக்கே சவால் விடக் கூடியளவிற்கு ஏராளமான வியக்கத்தக்க வாழ்வியல் அம்சங்களை, பயிற்சி நுட்பங்களை, நோய் குணப்படுத்தும் தன்மையை பயன்பாட்டு ரீதியிலும் தொழிற்பாட்டு ரீதியிலும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றமை விசேட அம்சமாகும். பன்முகத் தன்மை வாய்ந்த ஆரோக்கியம் என்ற கருத்தியலின் அடிப்படையாக விளங்கும் இக்கலையை தற்கால விஞ்ஞான மருத்துவ முறைக்கு இணையாக நிலைபெறச் செய்து,மக்கள் முன் கொண்டு செல்வதற்கு துறைசார்ந்தவர்கள் ஈடுபட்டுழைக்க வேண்டியது.அவசியமாகும்.

ஸ்ரீ.நதிபரன்

# facebook

# "நல்லாயிருக்கு..."



அவன் முகபாவத்திலேயே பார்த்துத் தெரிந்து கொள்வாள். ஆனால் இன்றைக்கு அவன் முகம் எதையுமே பிரதிபலிக்கவில்லை. மிச்சம் மீதி வைக்காமல் சாப்பிட்டவன்... போயிட்டுவாறன் என்று சொல்லிவிட்டு உணவைப்பற்றி எதுவுமே சொல்லாமல் உடனேயே வெளியே கிளம்பிவிட்டான்.

ஏதாவது சொல்லுவான் என எதிர்பார்த்து ஆவலோடு காத்திருந்தவளின் முகம் சட்டென்று வாடிப்போனது. அவன் கிளம்பியதிலிருந்து இவளுக்கு எந்தவேலையும் ஓடவில்லை. தன் சமையல் சரியில்லையோ? என நினைத்தவள், அந்தக் கவலையில் தானும் சாப்பிட மறந்துபோனாள்.

மாலை அவன் மீண்டும் வீட்டுக்கு வந்ததும்... சோர்வாக உட்கார்ந்திருந்த அவள் பக்கத்தில் போய் அமர்ந்தவன்... என்ன மேடம்... ரொம்ப சோகமா இருக்கிறமாதிரி இருக்கு... என்னாச்சு? என குறும்புப் புன்னகையோடு வினவினான். அவள் ஒன்றும் இல்லை என ஒற்றைவார்த்தையில் சொல்லிவிட்டு "இரவுக்கு என்ன சமைக்க?" என கேட்டபடியே எழுந்தவளின் கரத்தினை எட்டிப் பற்றியவன்...

அவன் புதிதாய் வாங்கி வந்த ஒருசோடி தங்க வளையலை அவள் கையில் மாட்டியபடியே, இது எதுக்காகத் தெரியுமா? இன்னிக்கு மேடத்தோட ஸ்பெஷல் சமையலுக்கு...! என்று சொல்லிவிட்டு அவள் முகத்தை ஆவலோடு பார்த்தான். அவள் முகம் மகிழ்ச்சியில் திளைக்கும் என எதிர்பார்த்தவனுக்கு... அவள் கண்கள் கலங்கியது ஏனென்று புரியவில்லை. என்ன ஆச்சு? என அவன் வினவும் முன்பே,

அவன் மாட்டிவிட்ட அந்தத் தங்க வளையல்களை கழற்றி அவன் கரங்களுக்குள் மீண்டும் வைத்துவிட்டு, அவள் சொன்ன வார்த்தைகள்...

நீங்கள் சாப்பிட்டிவிட்டு நல்லாயிருக்கு என்று சொல்லுற அந்த ஒற்றை வார்த்தைக்கு இந்த தங்கவளையல் என்ன... எநதத் தங்கக் குவியலும் ஈடாகாது... ! எனக்கு இதெல்லாம் வேணாம் !

அவள் அதைச் சொல்லும் போதே அவள் கண்கள் கலங்கி, குரல் தளுதளுக்கத் தொடங்கியது.

இப்பொழுதுதான் அவனுக்கு எல்லாமே புரிந்தது... தான் இதுவரை நாளும் விட்ட தவறும் கூட கலங்கியவளின் கரங்களை காதலோடு பற்றி... தன அருகே இழுத்து அணைத்தவன், மன்னிச்சுக்கோம்மா ... உண்மையிலேயே நல்லா இருந்திச்சு...! இனி அதை அப்பப்பவே சொல்லுறன். இப்ப ஓகேவா...?

என சொல்லியபடியே மீண்டும் அந்த ஜோடி வளையல்களை அவள் கரங்களில் அணிவித்தான்.

இப்பொழுது மறுப்பேதும் சொல்லாத அவள் முகத்தில் உதிர்ந்த புன்னகையும் அத்தனை அழகாய் இருந்தது.

## புத்திசாலித்தனம் வாழ்க்கையில் முக்கியம்

ஒரு ஊரில் கண் பார்வை இல்லாத ஒருவர் பிச்சை எடுத்துப் பிழைத்து வந்தார். அவர் தினமும் கடவுளே என்னை இப்படிப் படைத்து விட்டாயே... உனக்கு கண் இல்லையா? தினமும் நான் கஷ்டப்படுகிறேனே... என்று புலம்பியபடி கடவுளைத் திட்டிக் கொண்டேயிருந்தார்.

அவனது திட்டு பொறுக்க முடியாமல் கடவுள் ஒருநாள் அவன் முன் தோன்றி, நான் கடவுள் வந்திருக்கிறேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள். ஆனால் ஒரு நிபந்தனை. ஒரே ஒரு வரம் மட்டும்தான் கேட்க வேண்டும். என்றார்.

பார்வையற்றவரும் அதற்கு ஒப்புக் கொண்டு சிறிது நேரம் யோசித்தார். பின்பு சிறிது நேரம் யோசித்து கீழ்கண்ட வரத்தைக் கேட்டார்.

ராஜவீதியில் தங்கத் தேர் ஓட்டி விளையாட, அவனைப் பெற்ற தாய் வெள்ளிக் கிண்ணத்தில் பால் சோறு ஊட்டுவதை என்னுடைய வீட்டின் ஏழாவது மாடியிலிருந்து நான் பார்த்து மகிழ வேண்டும்."

இந்த வரத்தில் பார்வை இல்லாதவன், தனக்குப் பார்வை வேண்டும், ராஜயோக வாழ்க்கை வாழ வேண்டும், நூறாண்டு வாழ வேண்டும், ஏழு மாடி வீடு வேண்டும்



என்பதையெல்லாம் ஒரே வரத்தில் கேட்டு விட்டான்.

அவனுடைய புத்திசாலித்தனமான பதிலைப் பாராட்டிய கடவுள் அவன் கேட்ட வரத்தைக் கொடுத்து மறைந்தார்.புத்திசாலித்தனம் வாழ்க்கையில் முன்னேற முக்கியம் என்பது உண்மைதானே?

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 757

Search for people, places and things | Nagendram | Home

### சாயுக்ஷன்




### சதீஸ் புகழ்




### கஜிந்தன் பேரின்பநாதன்




### விதுஷன்




### வக்ஷலன்



### ராசு ரதி ஜனா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# ஞாபகமறதி நோய் (Dementia)

(சென்றவார தொடர்ச்சி)

10. உடல் வளர்ச்சியை மாற்றும் (Metabolic) காரணிகள் -ஈரல் சிறுநீரக செயலிழப்பு
11. அளவுக்கு அதிகமான மது பாவனை
12. குருதிக் கனிமங்களில் மாற்றம்
13. குருதியில் கல்சியம் அதிகரிப்பு
14. உடலில் சில விற்றமின்களின் குறைபாடு (Vitamin B2 Fulati Thiam Niadacin)
15. மூளைச் சேதம்.

பெரும்பாலான மேற்கூறப்பட்ட காரணிகளால் உருவாகும் ஞாபக மறதிக் குறைபாடுகள் மாற்றப்படக்கூடியதாகும்.

## உண்மையான ஞாபக மறதி நோயின் வகைகள் (Real Dementia )

1. அல்செய்மர்ஸ் (Alzheimention Dimention)

இவ்வகை நோயானது அண்ணளவாக 60% ஆன ஞாபக மறதி நோய்க்கான காரணமாகும். இந்நோயானது பரம்பரையிலும் கடத்தப்படக்கூடியது. அதை விட எவரும் இந்நோயால் பாதிப்படையக் கூடும். இந்நோயானது மெதுவாக முதிர்ச்சியடைந்து. இறுதியில் பாதிக்கப்பட்டவர் சுயநிலை மறந்தவராக எல்லாவகையான நாளாந்த கடமைகளுக்கும் மற்றவர்களில் தங்கியிருப்பவராக மாற்றமடைவார். சில சமயங்களில் இவர்கள் தமது நெருங்கிய உறவினரான மனைவி / கணவன் பிள்ளைகள் போன்றோரைக் கூட அடையாளம் காண முடியாதவராய் இருப்பார்கள். பொதுவாக இந்நோய் அடையாளம் காணப்பட்டு 7- 15 வருடங்கள் வரை ஆயுட்காலம் இருக்கும். பொதுவாக இவர்கள் வேறு நோய்களின் பாதிப்புக்களால் இறப்பார்கள். இந்நோய் காரணமாக அவர்களது ஊட்டச்சத்து,நீர்ச்சத்து,சுகாதாரம், சாதாரண உயிர்வாழ்வதற்கான பொறிமுறைகள் (விழுங்குதல், மலசலம் கழித்தல்) என்பன பாதிப்படைவதால் இவர்கள் இலகுவில் நோய் வாய்ப்படக் கூடியவராக இருப்பர்.

இந்நோயானது விசேட வைத்திய நிபுணரால் (நரம்பியல் நிபுணர் / முதியோர் மனநல வைத்திய நிபுணர்) பரீட்சிக்கப் பட்டு மருந்து வரலாறு **(History)**.ஞாபக சக்தி பரீட்சை **(Congitive testing)**.நரம்பியல் மனோதத்துவப் பரீட்சை **(Neuro Psychology)**. இரத்தப் பரிசோதனைகள் (இவை பொதுவாக நோயாளியைப் பாதிக்கக்கூடிய மற்றைய நோய்களை அடையாளம் காண உதவுகின்றது) பல்வேறு ஸ்கான் பரிசோதனைகள் **(CT, MRI, SPECT, PET SCAN)** உதவியுடன் இந்நோய் அடையாளம் காணப்படுகின்றது.

இந்நோய் பிடித்தவர்களின் மூளையில் நரம்புக் கலங்கள் **(Nerve Cells)** படிப்படியாக இறந்து போகின்றன. எனவே மூளையின் அளவு சிறிதாகின்றது. இந்நோயை முற்றாக மாற்றக்கூடிய சிகிச்சை கிடையாது. ஆனால் மூளையிலுள்ள சில இரசாயனப் பொருட்களை அதிகரிப்பதன் மூலம் மூளையின் வினைத்திறனை முடிந்தளவிற்கு அதிகரிக்க மருந்துகள் தற்போது உள்ளன. இந்த மருந்துகளானது உண்மையில் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை முடிந்தளவு உயர்ந்த நிலையில் இறக்கும் வரை பேணுவதாகும். ஆனால் இது எல்லோரிலும் வெற்றிகரமாக வேலை செய்வது கிடையாது. தற்சமயம் பல்வேறு உலகளாவிய ஆராய்ச்சிகள் இந்த நோயை மையமாக வைத்து மேற்கொள்ளப்படுகின்றன.


மேலைத்தேய நாடுகளில் மிகவும் செலவு நோய் ஞாபக மறதி நோயாகும். உ-ம் பெருமளவு பணம் பாதிக்கப் பட்டவரைப் பராமரிப்பதற்கு செலவிடப்படுகின்றது. காலப் போக்கில் இந்த ஆராய்ச்சிகளின் விளைவாக இந்நோயைக் குணப்படுத்தக்கூடிய அல்லது தடுக்கக் கூடிய மருந்து ஒன்று கண்டுபிடிக்கப்படலாம் என்று நம்புவோமாக.

### இந்நோய்க்கான மருந்துகள்

1. **Acetyl Chaline Esterace Inhibition -**
   1. **Donepezil**
   2. **Galamatmin**
   3. **Rivastigmin**
2. **Memantine**

நோயின் வளர்ச்சிப் படிகள்

1வது படி - சாதாரணம்
2வது படி - மெல்லிய ஞாபக மறதி **(Mild Congitive Imperiment)**
3வது படி - ஆரம்ப நிலை அல்செய்மர்ஸ்



4வது படி - நடுநிலை அல்செய்மர்ஸ்
5வது படி - நடுநிலை கடுமையான அல்செய்மர்ஸ்
6வது படி - கடை நிலை அல்செய்மர்ஸ்

2. குருதிக் குழாய் அடைப்பு ஞாபக மறதி (Vascular Dementia)

இது இரண்டாவது பொதுவான வகை. சிறிய ரக பக்கவாத நோய்களால் **(Tia)** ஏற்படும் ஞாபக மறதி. இந்த வகையில் அறிகுறிகள் அல்செய்மர்ஸ் போலவே இருக்கும். ஆனால் பொதுவாக படிப்படியாக **(Step Ladder Pattern)** அறிகுறிகள் மோசமடையும். இதற்கு அல்செய்மர்ஸ் மருந்துகளால் பயனில்லை. ஆனால் சாதாரண உயர்குருதி அழுத்த இதய நோய் மாற்றுக்கள் பாரிய பாதிப்புக்களை தடுக்கவல்லன. இந்நோய் நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், உயர்கொலஸ்ரோல் மற்றும் புகைப் பிடிப்பவர்களை பெரிதும் பாதிக்கும். மேற்கூறிய நோய்களை கட்டுப் படுத்தினால் இந்த வகை ஞாபக மறதி நோயைத் தடுக்க முடியும்.

3. பார்க்கின்சன் நோய் சம்பந்தப்பட்ட மறதி நோய் (Dementia In Parkinson's Disease / Lewy Bodly De mentia)

இந்நோயானது பார்க்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டவர்களை தாக்குகின்றது. இவர்களது ஞாபக மறதி அறிகுறிகளானது நேரத்துக்கு நேரம் வேறுபடும். இவர்கள் சில வேளைகளில் மாயத்தோற்றங்களையும் காண்பார்கள். **(Visual Hallucination)** இந்நோய்க்கு குறிப்பிடத்தகுந்ததாக மருந்துகள் இல்லை. ஆயினும் அல்செய்மர்ஸ் நோய்க்கான மருந்துகள் சில சமயம் அறிகுறிகளை தற்காலிகமாக கட்டுப்படுத்தமுடியும்.

4. முன்மூளை ஞாபக மறதி நோய் (Fronto Temporal Dementia)

பரம்பரையாக கடத்தப்படும் இந்நோய் பொதுவாக இளம் வயதினரையும் தாக்கும். இந்நோயில் முக்கியமாக பாதிக்கப்பட்டவரின் குணநலன்களில் மாற்றம் ஏற்படும். இந்நோய்க்கு மருந்து இல்லை. நோய் அறிகுறிகளை கட்டுப் படுத்தும் சில மனநோய் மருந்துகள் **(Antipsychotic / Anti Depression)** இதற்கு உதவக்கூடும்.

5. கண்டிங்டன் மறதி நோய் (Dementia – Huntington Disease)

**இதுவும் பரம்பரையாக பரவும் நோய். இந்நோய்க்கும் மருந்து இல்லை.**

ஞாபக மறதி நோயாளர்களுக்கு பொதுவாக முற்றாக மாற்றக் கூடிய மருந்துகள் இல்லாவிடினும் நடைமுறையில் எவ்வாறு அந்நோயால் பாதிக்கப்பட்டவரை பராமரிப்பது என்பது முக்கியமானது. பாதிக்கப்பட்டவரது நெருங்கிய உறவினர்களும் பராமரிப்பாளர்களும் இந்நோயைப் பற்றி பூரணமாக அறிந்திருப்பது மிகவும் முக்கியமானது. இந்நோய் முற்றும் போது நோயாளி சுய நினைவு அற்றவராக உணவு உண்பதை,மலசலம் கழிவதை உணராதவராக இருப்பார். எனவே பராமரிப்பவர் நோயாளியின் இயலாமையை புரிந்து கொண்டு அவரை அன்பாகவும் பக்குவமாகவும் இறுதி வரையில் பராமரிக்க வேண்டும். பொதுவாக நோயாளியின் கணவன் அல்லது மனைவியும் வயதாவதால் நோயாளியைப் பராமரிக்கும் பொறுப்பு மிகவும் கடுமையானதும் சலிப்புத்தன்மை ஏற்படுத்தக் கூடியதுமாகும். மேலை நாடுகளில் இவ்வகை நோயாளியைப் பராமரிப்பதற்கென தனியான வசதிகள் உள்ளன. **(Care Agencies)** இவை தனியார் மூலமாகவோ அரசாங்க சேவைகள் **(Social Service)** மூலமாகவோ வழங்கப்படும். ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் இச் சேவைகள் இன்னமும் பூரணமாக வளர்ச்சியடையவில்லை. எனி னும் உற்றார் உறவினர்கள் இங்கே முன்வந்து உதவுவதால் மன நோயாளிகளை பராமரிப்பது சிறிது இலகுவானது.

மறதி நோயாளருக்கு நிறை உணவும் நீராகாரங்களும் வேளை தவறாது வழங்கப்பட வேண்டும். இல்லாவிடில் அவர்களுக்கு பசிப்பது தெரியாததால் ஒன்றுமே கேட்காமல் இருந்து உடல் நலிவடைந்து இறந்து விடுவர். மறதிநோய் என்பது நேரடியாக கொல்லும் ஒரு நோயல்ல. எனினும் வேறு வழிகளில் பாதிக்கப்பட்டவரை சிறிது சிறிதாகக் கொல்லும். மலசல விடயங்களில் கூட பாதிக்கப்பட்டவரை நேர அட்டவணையின் படி மலசலகூடத்திற்குச் செல்லும் படி உற்சாகப்படுத்துவதால் மலசலம் தானாகப் போகும் அசௌகரியங்களைத் தவிர்க்கலாம். வெளியில் செல்லும் போது விசேட **Incontinenence pads** உதவக்கூடும். எனினும் இலங்கை போன்ற வெப்பப் பிரதேசத்தில் இந்த pads இன் உபயோகம் சரும ரோகங்களின் பாதிப்பை ஏற்படுத்தும் எனவே சில விசேட தைலங்களை **(barrier Cream /sudo cream)** பயன்படுத்தி சருமம் ஈரமாவதைத் தவிர்க்க முடியும்.

பாதிக்கப்பட்டவருடன் சரளமாகக் கதைப்பது, அவர்களைப் பழைய நினைவுகளை மீட்குமாறும் பழங்கதைகளை கதைக்குமாறும் உற்சாகப்படுத்துவது, அவர்களால் பாதுகாப்பாகச் செய்யக்கூடிய சில வேலைகளை அவர்களாக முன்வந்து செய்ய உற்சாகப்படுத்துவது, அவர்களை கிரமமாக வெளியிடங்களுக்கு குறிப்பாக மற்றவர்களை இலகுவாகச் சந்திக்ககூடிய இடங்களுக்கு (கோவில்கள் விழாக்கள்) அழைத்துச் செல்வது போன்ற நடவடிக்கைகள் அவர்களது மூளையை உற்சாகப்படுத்தி **(simulate)** நோயின் தாக்கத்தைக் குறைக்க உதவும்.

நோயின் ஆரம்பத்தில் மனோதத்துவ உதவிகள் **(Psychological Interventions)** நோயை எவ்வாறு சமாளிப்பது. அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்ற அறிவை நோயாளிக்கு ஊட்டும். எனினும் நோயின் பிற்பகுதியில் இது பெரிதாக உதவுவது இல்லை.

என்னதான் சிகிச்சை அளித்தாலும் நோயின் இறுதிக் காலத்தில் நோயாளி மூளையின் மொத்த செயற்பாட்டையும் இழந்து படுத்த படுக்கையாகி **(Bedfast Stage)** விடுவார். இதனால் வேறுபல உப பாதிப்புக்களுக்கும் உள்ளாகி படுக்கைப்புண்,நுரையீரல் அழற்சி,சிறுநீரகத் தொகுதி நுண்ணுயிர் பாதிப்புக்களுக்கு உட்பட்டு மரணிக்க நேருகின்றன.

## மறதி நோய் வராமல் தவிர்ப்பது எப்படி?

இந்நோய் வருவதைத் தவிர்க்க முடியாது என்றாலும் தாமதப் படுத்த முடியும். எமது முன்னோர் சொல்லிச் சென் றது போல் ஒழுக்கமானதும் சமச்சீரானதும் **(Balanced)** ஆரோக்கியமானதுமான வாழ்க்கை முறையை பொதுவாக எல்லா வகையான நோய்களையும் எம்மை அண்டவிடாது தடுக்கும்.

பின்வரும் எளிய நடைமுறைகளைப் பின்பற்றினால் மறதி நோய் வருவதை முடிந்தளவில் தாமதப்படுத்த முடியும்.

- உணவில் கொழுப்பு, இனிப்பு, உப்பு மற்றும் செயற்கை உணவுகளைத் தவிர்த்தல்.
- கூடியளவு மரக்கறி வகைகள், பழங்கள் என்பவற்றை முடிந்தளவு பச்சையாகவோ அல்லது அவித்தோ உண்ணல்
- கொழுப்பு குறைந்த பால் **(Semi Fat Milk)** முட்டை, கடல் உணவுகளை முடிந்தளவு அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ளல்.
- மது, புகைத்தல், போதைவஸ்து பாவனையை முற்றாக நிறுத்தல். சிவப்பு வைன் **(Red Wine)** சிறிதளவு அருந்திவந்தால் ஞாபக சக்தியை பாதுகாக்க முடியும் என்று ஒரு சில ஆராய்ச்சிகள் கூறுகின்றன
- நாளாந்த உடற்பயிற்சி **(Regular Exercise)**
- முடிந்தளவு உடலையும் உள்ளத்தையும் உற்சாகத்தையும் உபயோகமாகவும் வைத்திருத்தல் **(Active And Occupied)** உ-ம் ஓய்வு பெற்ற பின் பல்வேறு பொதுப் பணிகளில் ஈடுபடுதல் வேண்டும். ஊர்கோவிலில் பணி விடை செய்தல் கூட ஞாபக மறதி நோயை தாமதப்படுத்து வதில் பேருதவி செய்யும்.
- தற்போது உலகளாவிய ரீதியில் இந்நோயை குணப் படுத்தவோ தடுக்கவோ பல ஆராய்ச்சிகள் நடை பெற்று வருகின்றன. அடுத்தடுத்த சந்ததிகளுக்காவது இதனால் நல்ல பயன் கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

வைத்திய கலாநிதி ஸ்ரீ. நகுலேஸ்வரன்
முதியோர் மனநல விசேட வைத்திய நிபுணர்
ஐக்கிய இராச்சியம்.